
# கிராமநலம்

அக்டோபர் - '66

4018



"பயிர்த் தொழிலின் முன்னேற்றம்,
ஆட்சியின் முதல் பொறுப்பாகும்...."

— காந்தியடிகள்

# ஏழை, எளியோருக்கு வீட்டு மனைகள்







ஹரிஜனங்கள், ஜவான்கள் மற்றும் ஏழை எளியோருக்கு, இனாமாக, வீட்டுமனைகளுக்கான நிலப்பட்டாக்கள் வழங்கப்பட்டன. 2184 நபர்களுக்கு, இந்தப்பட்டாக்களை, முதலமைச்சர் 17-7-66-ல், திருநெல்வேலியில் நடைபெற்ற விழாவொன்றில் வழங்கினர்....

கிராமநலம்

கதிர் 12 அக்டோபர், 1966 நெல் 1

# காந்தி ஏந்தல் புகழ் வாழ்க !

" அருணனெனும் ஒளிக்கதிர்கள் சென்று யாவும்
அவனியிலும் அதற்கப்பாலும்
மருள் நெறிசேர் சுயநலமா மாய விருள்இரிந்தோட
மதிக்க வொண்ணுக்
கருணையெனும் ஒளிக்கதிர்கள் தமைவீசி
யிலகும் அருள் காந்தி ஏந்தல்
வருணமலர்த் திருவடிகள் மாநிலத்தில்
பல்லாண்டு மருவி வாழ்க "

—பண்டிதை அசலாம்பிகை அம்மையார்.

[1925-ல் வெளியானது.] [' காந்தி புராணத்'திலிருந்து.]

காந்திஜி பிறந்த ஆண்டு, நாள், கிழமை, நேரம் உங்களுக்குத் தெரியுமா ?

[விவரம் 6-ம் பக்கம் பார்க்க].

## நேரு போற்றிய காந்தி

" நம்முடைய குருவாக அவர் விளங்கினர். அவருடைய ஒவ்வொரு அடிச்சுவடும் நமக்கு ஒளியைத் தந்தது. அவருடைய புன்முறுவல் நமக்கு உற்சாகத்தை அளித்தது. அவருடைய கண்களில் மகிழ்ச்சி நிறைந்த ஒளி வீசியது. அவரைப்பற்றி நாம் நினைக்கும்போதெல்லாம், இவ்விதக் காட்சிகள்தான் நம் முன்னல் தோன்றும். சக்தி இழந்த மனம் அல்லது உடல் உள்ளவராக அவர் நம் மனக்கண்முன் தோன்றமாட்டார்.

அந்தத் தோற்றம் மங்காது. இதையெல்லாம் காட்டிலும் நமக்கு அவர் மகத்தான காரியம் ஒன்றைச் செய்துள்ளார். அவர் நம்முடைய மனத்திலும் உயிரிலும் புகுந்து, அவைகளை மாற்றி நன்கு உருவாக்கியிருக்கிருர். காந்தி தலைமுறை மறைந்து போகலாம். ஆனல், அவர் செய்த செயல் நிலைத்து நிற்கும். அது இந்தியாவின் பண்பாட்டில் ஒரு பகுதியாகி விட்டதால், பின்னல் வரப்போகும் ஒவ்வொரு தலைமுறைக்கும் பயனளிக்கும்."

—அமரர் நேருஜி

காந்தியடிகளின் நிர்மாணத் திட்டம் பற்றிய சிறப்புக் கட்டுரைகள் சில, இந்த இதழில் வெளியாகியுள்ளன. காந்தியடிகளின் நினைவுக்கும், காந்தியடிகளின் நிர்மாணத் திட்டங்களை உருவாக்கப் பாடுபடும் அனைவருக்கும், இந்த இதழைக் காணிக்கையாக்குகிறேம்.

—ஆசிரியர்.

# பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களின் புதிய பணி

## உற்பத்தித் திட்டங்களை உருவாக்குவதில் சிறப்பான பங்கு

" இனிய பொழில்கள் நெடிய வயல்கள்
எண்ணரும் பெரு நாடு
கனியும் கிழங்கும் தானியங்களும்
கணக்கின்றித் தரு நாடு—இது
கணக்கின்றித் தரு நாடு—நித்த நித்தம்
கணக்கின்றித் தரு நாடு "

என்று பாரதியார் வாழ்த்திய பாரத சமுதாயம், உணவு உற்பத்தியில் உற்சாகத்தோடு ஈடுபட்டுள்ளது. தனி மனிதர்கள் மட்டுமின்றி, நாட்டிலுள்ள முக்கிய நிறுவனங்கள் அனைத்தும், உணவு உற்பத்திக்கு முதலிடம் தந்து, ஓயாமல் பணி புரிகின்றன.

சிறப்பாக, பாரத நாட்டின் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில், உணவு உற்பத்திக்கு, முதலிடம் தரப்பட்டுள்ளது. குறிப்பாக, பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்கள், அதாவது, பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும், மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் முதலியன, உணவு உற்பத்திக்கான திட்டங்களை உருவாக்குவதில், புதிய வாய்ப்பு பெற்றன. 1965-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17-ம் தேதியில் கிராம நல, தல நிர்வாகத்துறை வெளியிட்ட அரசாங்க ஆணையின் வாயிலாக, பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்கள், தமது உள்ளூர்த் தேவைகளுக்கேற்ப, நடைமுறையில் நிறைவேறக்கூடிய திட்டங்களை ஆராய்ந்து அறிவிக்கவும், அதிகாரிகளின் தொழில் நுட்ப உதவியைப் பெற்று, அவற்றைத் தக்க வகையில் உருவாக்கவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

சென்ற ஆண்டு கொடுக்கப்பட்ட இந்த வாய்ப்பினை, பெரும்பாலான பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்கள் திறமையான முறையில் பயன்படுத்தியுள்ளன. அதன் விளைவு என்ன ? தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் உள்ள இயற்கை வளங்கள், அங்கங்கேயுள்ள மக்களின் தேவைகள் முதலியன நன்கு ஆராயப்பட்டு, ஒரு சில புதிய ஆலோசனைகளும், திட்டங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. மாவட்டக் கலெக்டர்கள், சம்பந்தப்பட்ட துறையின் தலைவர்கள் ஆகியோர் இவற்றை மேலும் பரிசிலனை செய்து, கிராம வளர்ச்சி நெறியாளரின் ஆமோதிப்போடு, நகல் திட்டங்கள் அரசாங்கத்துக்கு அனுப்பப்பட்டன. விவசாயம், கால்நடை வளர்ச்சி, மீனளம் ஆகியவை பற்றிய உற்பத்தித் திட்டங்களைக் குறித்த விவரங்கள் 1966-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 26-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2064-ல் வெளியாகியுள்ளன. (இந்த ஆணையின் முழு விவரம், இந்த இதழில் பகுதி II—பஞ்சாயத்து அரசிதழில் காணலாம்).

### பலன் காணும் வழி

திட்டத்தை உருவாக்குவதில் மக்களுக்கு அளிக்கப்படும் வாய்ப்பு, சிறந்த பலன் அளிக்கும் என்பதற்கு, இது ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும். எல்லா இடங்களுக்கும் ஒரே மாதிரியான திட்டத்தை வகுப்பதைவிட, அந்தந்த இடங்களுக்கேற்ற திட்டங்களை உருவாக்கி நிறைவேற்றுவதே, தக்க பலன் காணும் வழியாகும்.

குறிப்பாக, இப்போதுள்ள உற்பத்தித் திட்டங்கள் மூன்று பிரிவாக வகுக்கப்பட்டுள்ளன. ஒன்று, இன்றியமையாத திட்டங்கள் (Essential Schemes) இரண்டாவது, விருப்பத்திற்கேற்ற திட்டங்கள் (Optional Schemes) மூன்றாவது, அந்தந்த இடங்களுக்கேற்ற சிறப்புத் திட்டங்கள் (Special Schemes, specific to the area).

இவற்றைப் பற்றிய நிதி ஒதுக்கீடு, மற்ற விளக்கங்கள் அனைத்தும், அரசாங்க ஆணையில் சேர்க்கப்பட்டுள்ள மூன்று இணைப்புகளில் காணலாம். அந்தந்த இடங்களுக்கேற்ற சிறப்புத் திட்டங்களை, ரூபாய் நாற்பதாயிரம் வரை வகுக்கலாம். தவிர, பஞ்சாயத்து யூனியன் ஒவ்வொன்றும், தர வேண்டிய மானியத் தொகை, மொத்தமாக ரூபாய் ஐம்பதாயிரம் என்று குறிக்கப்பட்டு, கணக்கு முறைகளில் தக்க சீர்திருத்தம் செய்து, திட்டங்களை எளிமையாக நிறைவேற்ற வகை செய்யப்பட்டுள்ளது. இவை தவிர, மீனள வளர்ச்சித் திட்டங்களைப் பற்றிய அரசாங்க ஆணை, தனியே பிறப்பிக்கப்பட்டுள்ளது. (இவ்வாணையின் முழு விவரம், அடுத்த இதழில் பகுதி II-ல் இடம்பெறும்.) மொத்தத்தில், சென்ற திட்டங்களை நிறைவேற்றுவதில் பெற்ற அநுபவத்தை அடிப்படையாகக் கொண்டு, கிராம மக்களின் பிரதிநிதிகள் விரும்பும் நடைமுறைத் திட்டங்களைச் சேர்த்துக்கொள்ளவும், இந்தப் புதிய ஏற்பாடு வழி வகுக்கிறது.

# கிராம முன்னேற்றத்தில்
# காந்தி அடிகளின் திட்டம்

[திருமதி சரோஜினி வரதப்பன், தலைவி, மாநில சமூகநல போர்டு, சென்னை.]

[''கிராமப் புனருத்தாரணம் தான் மகாத்மா காந்தி விரும்பிய முதல் சுதந்திரம். இந்தியாவில் 100–க்கு 80 பேருக்கு மேல் கிராமங்களில் வசிக்கிறார்கள். வறுமை, அறியாமை, சோம்பேறித்தனம் இவற்றிலிருந்து குடியானவர் விடுதலையடையாவிட்டால், பிரிட்டனிடமிருந்து இந்தியா பெறும் சுதந்திரம் வீணாகும் என்று காந்தி மதித்தார். சுதந்திரம் என்றால், அலுவலகங்களிலும், மாளிகையிலும் பிரிட்டிஷார் பதவி வகிப்பதற்குப் பதிலாக, இந்தியர் பதவி வகித்து விடுவதல்ல: இதற்கும் மேலான ஒன்று அது.''

''ஒரு புதிய இந்தியா இன்றே அமையவேண்டும்—நாளைக்கல்ல—இதுவே காந்தியின் விருப்பம். மந்திரக்கோல் போல் காந்தியின் செய்தி இந்தியாவைத் தொட்டுவிட்டது. மெல்ல மெல்ல ஒரு புதிய கனவு உதயமாயிற்று. தன் நாடு இழந்த பெருமையெல்லாம் மீண்டும் பெற வேண்டுமென்று இந்தியனின் உள்ளம் வேதனைப்பட்டது. அந்த வேதனையைத் தீர்க்கும் தைலத்தைக் காந்தி கொண்டுவந்தார். தன்னிடம் வந்த எத்தனையோ ஜயசீலர்களை இந்தியா கண்டிருக்கிறது. தனக்குத்தானே உண்மையாக நிலைத்து நின்றதின் மூலம், அவர்கள் அத்தனை பேரையும் அது ஜயித்துவிட்டது என்று இந்திய நாட்டுக்கு அவர் ஞாபகப்படுத்தினார். இந்தியாவின் பெருமை உணர்ச்சியையும் நம்பிக்கையையும் அவர் தூண்டிவிட்டார். காந்தியின் மந்திரக்கோல், பீரங்கிக்கு மருந்து கிட்டிக்கும் கடப்பாரை ஆகிவிட்டது.''

—லூயிபிஷர்.]

பாழ்பட்டு வறுமைமிஞ்சி விடுதலை தவறிக் கிடந்த பாரத நாட்டிற்குச் சுதந்திரம் பெற்றுத் தந்த பெருமை அண்ணல் காந்தியடிகளுக்கே உரியதாகும். ஊமையராய்ச், செவிடர்களாய்க், குருடர்களாய்க் கிடந்த பல கோடி பாரத மக்களின் உள்ளத்தே சுதந்திரக் கனலைக் கொழுந்துவிட்டெறியச் செய்தார் அமரர் காந்தி. சொந்த நாட்டிலே பிறர்க்கு அடிமை செய்து அஞ்சிக் கிடந்த இந்நாட்டு மக்களை விடுதலைப் பாதையில் அடியெடுத்து வைக்கக் காந்தியடிகள் தூண்டினார். அயல் நாட்டாருடன் அகிம்சை முறையில் போராட எண்ணிய காந்தியடிகள் அதற்குத் தம் நாட்டு மக்களை ஆயத்தப்படுத்த எண்ணினார். கத்தியின்றி, ரத்தமின்றிச் சுதந்திரப் போரை நடத்தி வெற்றி காண விழைந்த அப்பெருமான், அதற்குரிய ஆற்றலையும், தகுதியையும் பாரத நாட்டு மக்கள் பெற ஆசைப்பட்டார்.

பரந்த விரிந்த பாரத நாட்டிலே அந்நியரின் ஆதிக்கம் வாணிபத்தாலே வளர்ந்தது. அயல்நாட்டுப் பொருள்களுக்கு நம் மக்கள் அடிமையாயினர். உப்பிலிருந்து கற்பூரம் வரையிலும், உடுக்கும் உடையிலிருந்து உண்ணும் உணவு வரையிலும் பிற நாட்டார் உதவியின்றிப் பெறவியலாத நிலைமையில் நாம் வாழ்ந்துவிட்டோம். இந்நிலை மாறினாலன்றி, இந்தியா விடுதலை பெற இயலாது என்பதனைக் காந்தியடிகள் உணர்ந்தார். அதற்கு இந்நாட்டு மக்களின் நிலையை நன்கு ஆராயலானார். பாரத நாடு கிராமங்களால் நிறைந்தது. ஆங்காங்குச் சில பட்டிணங்களும் நகரங்களும் உள்ளனவே தவிரக் கிராமங்களையே முற்றிலும் கொண்டது இந்திய நாடு என்பதை அடிகளார் அறிந்தார். எனவே, கிராம முன்னேற்றமே பாரத நாட்டின் முன்னேற்றம்; கிராமங்களின் சுதந்திரமே இந்தியாவின் சுதந்திரம்; கிராம மக்கள் முன்னேற்றமே பாரதத்தின்

முன்னேற்றம் என்பதை உணர்ந்தார்.

கிராமங்கள் தன்னிறைவு பெற்றனவாக விளங்கவேண்டும். தமக்குரிய உணவையும் உடையையும் தாமே தயாரித்துக் கொள்ளவேண்டும். அவற்றை அந்நிய ஆலைகள், தொழிற்சாலைகள் உதவியின்றியே இயன்ற வரையிலும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ஆங்கிலேய மக்களிடமிருந்து விடுதலை பெறுமுன்னர் அவர்களது தொழிற்சாலைகள், ஆலைகள் இவற்றிலிருந்து நாம் சுதந்திரம் பெறவேண்டும் என எண்ணினர். இதற்காக மக்களின் உடையிலே மாற்றம் காண விழைந்தார். மேலை நாட்டுத் துணிகளை நிராகரித்தார். வீடெல்லாம் "ஆடுராட்டே, சுழன்றுடு ராட்டே" என்று ராட்டினம் சுழலச் செய்தார். மாதரும் ஆடவரும் கதராடையே கட்டவேண்டும் என்பதை வற்புறுத்தினர். மானம் காக்கும் ஆடைக்குக்கூட வேற்றவரை எதிர் பார்க்கும் வெட்கம் கெட்ட நிலையிலிருக்கிறோமே என மக்கள் உள்ளத்தில் விழிப்புணர்ச்சியை ஊட்டினர். கிராம மக்களின் அகக் கண் திறந்தது, சுதந்திர ஞான ஒளி வீசத் தொடங்கியது. ஆடைக்கு அடிமையாகும் நிலையை கிராம மக்கள் உதறித் தள்ளினர். உடையில் மட்டும் போதாது, உணவிலும் மாற்றம் காண விழைந்தார். ஆலையிலே நெல்லரைக்கும் நிலையை அகற்ற விரும்பினர். கைக்குத்தலரிசியைக் கிராமங்களில் மக்கள் உண்ணும்படித் தூண்டினர். சோம்பிக் கிடந்த மக்கள் சுறுசுறுப்படைந்தனர்.

### அடிகளார் கண்ட தன்னிறைவுத் திட்டம்

உணவு வகையிலே அடிகளார் தானியங்களை கைக்குத்தலாலேயே பயன்படுத்தவேண்டும் எனக் கூறிய தோடு அமையவில்லை. விவசாயத்திற்கு ஆதாரமாயும் அடிப்படையாயும் உள்ள ஏனைய பொருள்களும், கிராமத்திலேயே கிராம மக்களாலேயே உற்பத்தி செய்யப்படவேண்டும் எனக் கருதினர். அதோடு நில்லாது, அவ்வாறு உற்பத்தி செய்யப்படும் பொருள்களை மட்டுமே கிராம மக்கள் உபயோகிக்க வேண்டும் எனவும் விரும்பினர். பனைவெல்லம் செய்தல், செக்கிலே எண்ணெய் ஆட்டல், காகிதம், சோப்பு செய்தல், தேனீ வளர்த்தல், தேன் சேகரித்தல் போன்ற பல குடிசைத் தொழில்களின் வாயிலாகக் கிராம மக்களுக்கு வேலைகளையும் வழங்கிச் சுயதேவையை பூர்த்தி செய்யவேண்டுமென விழைந்தார். இத்தகைய திட்டத்தால், மக்கள் மனத்திலே சுதேச உணர்ச்சி மலர்கிறது. அன்றியும் உணவு, உடை, தொழில் போன்ற துறைகளில் கிராமங்கள் தன்னிறைவு பெறுகின்றன. கிராமத்தின் வருவாயும் வெளியே செல்லாமல் அம்மக்களுக்கே பயன்படுகிறது.

அடிகளார் கண்ட இந்தத் தன்னிறைவு திட்டத்தை நாட்டினுள்ள மக்களனைவரும் உண்மையாகக் கைக்கொண்டால், உணவுக்கும் உடைக்கும் பிறரை எதிர்பார்த்து நிற்கும் பேதமை நிலைமை மறையும்; பஞ்சமும் வறுமையும் கிராமங்களை வாட்டா தொழியும்; எடுத்ததற்கெல்லாம் அயலாரை எதிர்பார்க்கும் இழிந்த நிலையும் ஒழியும்.

### அரசியலிலும் புரட்சி கண்ட அண்ணல்

இவ்வாறு உணவு, உடை இரண்டிலும் மாற்றம் கண்ட மகாத்மா அரசியலிலும் மாபெரும் புரட்சி காண விரும்பினர். ஓரிடத்தே குவிந்து கிடக்கும் அதிகாரமும் ஆட்சி முறையும் கிராமங்களுக்குப் பரந்து செல்லவேண்டும். 'நம் ஊர், நம் மக்கள், நமது கிராமம்' என்ற உணர்ச்சி கிராம மக்கள் உள்ளத்தே கிளர்ந்தெழ வேண்டும். இதற்குத் தக்க வழி பஞ்சாயத்தாட்சியே என முடிவு செய்தார். பட்டிதொட்டிகளில் வாழும் பாமரனும், ஆட்சியின் நுட்பத்தை அறிய அதுவே தக்க வழி எனக் கண்டார். 'கிராம ராஜ்யமே ராமராஜ்யம்' என்ற கீதம் எங்கும் முழங்கச் செய்தார். இன்று அடிகளார் கண்ட பஞ்சாயத்தாட்சி பாரத நாடு முற்றிலும் பரவியுள்ளது. அதனால் விளையும் மகத்தான பயனை நாம் அனைவரும் கண்ணாரக் காண்கிறோம். பாரத நாட்டின் நரம்புகளாக உள்ள பல்லாயிரக்கணக்கான கிராமங்கள் தழைத்து ஓங்க கிராம ஆட்சியே சிறந்ததென அடிகள் நிரூபித்துக் காட்டினர்.

## சிறந்த மரியாதை

"நம்மை மனிதராக்கி, உலக அரங்கிலே இந்தியாவிற்கு உயர்ந்ததோர் இடம் பெற்றுத் தந்த அண்ணல் காந்தி, எந்த இலட்சியங்களுக்காக தமது வாழ்வையும், இறுதியில் தமது உயிரையும், அர்ப்பணம் செய்தாரோ, அந்த இலட்சியங்கள், நாட்டில் நிலைபெற்று ஓங்கச் செய்வதே, அவருக்கு நாம் செலுத்தக் கூடிய சிறந்த மரியாதையாகும்."

—கா. திரவியம்

---

## இந்தியாவின் தனித்தன்மை

"தனது தனித்த தன்மையை இந்தியா அஞ்சாமல் பாதுகாத்து வந்திருக்கிறது. தான் மாத்திரம் எவ்வித ஊனமும் இன்றி இருந்துகொண்டு, அதே சமயத்தில் அநேக நாகரிகங்கள் அழிந்ததைப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு சில நாடுகளில் இந்தியாவும் ஒன்று. புராதனமான அமைப்பில் மூட நம்பிக்கைகளும் தவறுகளும் படிந்திருந்தாலும், அந்தப்புராதன அமைப்பில் சிலவற்றை விடாமல் இன்னும் வைத்துக்கொண்டிருக்கும் சில நாடுகளில் இந்தியாவும் ஒன்று. ஆனால் தவறுகளையும் மூட நம்பிக்கைகளையும் போக்கிக்கொண்டு விடக்கூடிய இயல்பான சக்தியும் தனக்கு உண்டு என்பதையும் இந்தியா காட்டி வந்திருக்கிறது. கோடிக்கணக்கான மக்களுக்கு விளைந்துள்ள பொருளாதாரப் பிரச்னையைத் தீர்த்துக்கொள்ளும் சக்தி, இந்தியாவுக்கு இருக்கிறது என்பது என் நம்பிக்கை."

—மகாத்மா காந்தி.

# சிறந்த இலட்சியங்களை நினைவூட்டும் நிர்மாணத் திட்டம்

சுயராஜ்யம் பெறுவதற்காக மகாத்மா காந்தி நிர்மாணத்திட்டத்தை உருவாக்கித் தந்தார். திட்டத்தை வகுப்பதோடு நிற்காமல், அதைச் செயல்படுத்தும் திறமையும், மனவலிமையும் படைத்த எண்ணற்ற ஊழியர்களையும் உருவாக்கினார். நேருஜி, சர்தார் பட்டேல், ராஜன்பாபு போன்ற காந்திய ஊழியர்களே, சுதந்திர பாரதத்தின் தலைசிறந்த தலைவர்களாகப் பணிபுரிந்ததை நாம் நேரில் கண்டோம். இன்றுள்ள தேசியத் தலைவர்களில் பெரும் பாலோர், காந்தியடிகளின் தலைமையில் தயாரான நிர்மாணத் தொண்டர்களேயாவர்.

''சுயராஜ்யம் பெறுவதற்குத்தான், நிர்மாணத் திட்டம் தேவையாக இருந்தது. சுயராஜ்யம் கிடைத்துவிட்ட பிறகு, அதைப் பற்றி ஏன் கவலைப்பட வேண்டும்'' என்று நினைப்பவர் சிலர் உண்டு. மகாத்மா காந்தி வற்புறுத்திய நிர்மாணத் திட்டம், மக்கள் சமுதாயத்தின் நிரந்தர நல்வாழ்வுக்கு வழிவகுக்கும் சக்தி படைத்தது. எனவே, அதை நிறைவேற்றுவது யாராயிருந்தாலும், அதனால் ஒப்பற்ற சக்தி பெற முடியும்.

நிர்மாணத் திட்டத்தின் பல்வேறு அம்சங்களை, இன்றையதினம், அரசாங்கமே ஏற்று நடத்தி வருவதைக் காண்கிறோம். மது விலக்கு, கதர், கைத்தொழில் வளர்ச்சி, ஹரிஜன நலம் முதலிய பலவும், அரசாங்கத்தின் ஆதரவில் நடைபெறுகின்றன;

### காந்திஜியின் சித்தாந்தம்

ஏழை எளியவர்களை, ''தரித்திர நாராயணர்கள்'' என்று, மகாத்மா காந்தியடிகள் குறிப்பிடுவார். 'சுயராஜ்யத்தின் பயன், ஏழை எளியவர்கள் வாழ்வில், ஏற்றம் காண்பதே' என்பது, அவர் வகுத்த சித்தாந்தம்.

அதையொட்டியே, நமது முதல் பிரதமர் நேருஜி அவர்கள் ஐந்தாண்டுத் திட்டங்களை உருவாக்கி நிறைவேற்றத் தொடங்கினார். ஆயினும், எல்லாவற்றையும் அரசாங்கமே செய்துவிட முடியாதல்லவா? அரசாங்கம் மேற்கொள்ள இயலாத நிர்மாணத் திட்டத்தின் அம்சங்களை, 'சர்வ சேவா சங்கம்' போன்ற ஸ்தாபனங்கள் மேற்கொண்டு நடத்தி வருகின்றன.

எனவே, மகாத்மா காந்தியின் நிர்மாணத் திட்டம் இனிமேல் தேவையில்லை என்றும் யாரும் சொல்ல முடியாது அதுகாற்றில் கலந்துள்ள, பிராணவாயு போன்றது. அதை அறிந்து தொண்டு புரிவோரின் சக்தியும், சேவையும். சமுதாயத்துக்கு எப்போதும் நல்ல பலன்கொடுக்கும். தனிப்பட்ட வாழ்க்கையில் புலனடககம, அவாவின்மை முதலிய நற்பண்புகளை வளர்த்துக்கொள்ளவும், சுயநலமில்லாத பொது நலப்பணிகளில் ஈடுபடவும், காந்தியடிகளின் நிர்மாணத் திட்டம் சிறந்த இலட்சியங்களை நினைவூட்டிக்கொண்டே இருக்கும்.

> ''கதரபிவிருத்தியும, கைத்தொழில் வளர்ச்சியும்
> மதவொற் றுமையும், மாதர் முன்னேற்றமும்
> மதியினை மயக்கும் மதுவினை விலக்கலும்,
> புதுமுறைக் கல்வியும், பொதுஜனக் கல்வியும்,
> நம்தாய் மொழியும், இந்திய மொழியும்,
> ஊர்ச்சுகா தாரமும், உடற்சுகா தாரமும்,
> ஹரிஜன சேவையும், சரிசம உடமையும்,
> வையம் வாழும் வகைசெயும் உழவர்,
> குஷ்டம் என்னும் கொடுநோய் கொண்டோர்,
> மலைவாழ் குடிகள், மாணவர் தம்மோடு,
> தொழில்செய் மக்கள் துயரம் தீர்த்தலும்,
> ஆய இப் பதினெண் அரும்பணி வாயிலாய்ச்
> சர்வோ தயநற் சமுதாயத்தினை
> நிர்மாணம் செய நித்தமும் உழைப்போம்.''

முக்கியமாக, கிராமப் பகுதியில் பஞ்சாயத்து ஆட்சியை நிறைவேற்றும் அனைவருக்கும், இந்தத் திட்டம் வழிகாட்டும் துருவ நட்சத்திரமாக விளங்க வேண்டும் என்பது, என் பிரார்த்தனை.

நிர்மாணத் திட்டம் என்ன என்பதை நன்றாகப் புரிந்துகொண்டு, அதைச் செயலில் காட்டுவதையே, பஞ்சாயத்துக்கள் தங்களுடைய கடமையாகக்கொள்ள வேண்டுமென்பது, என்னுடைய அவா. அப்போதுதான், காந்தியடிகள் காண விரும்பிய 'கிராம சுயராஜ்யம்' நிர்மாணமாகும்.

—கோ. வேங்கடாசலபதி.

### சமுதாய மாற்றத்திற்கு காந்தி வழி

''மனிதன் மனத்தையுடையவன். அவன் மனத்தில் எழும் ஆசைகளும் எண்ணங்களும் உணர்வுகளும் தான், பின்னர் செயலாக வெளிப்படுகின்றன. செயலில் தூய்மை வர, மனம் புனிதமடைய வேண்டும். சமூகம் உயர்ந்த கருத்துக்களை ஏற்றுக்கொண்டு, அவற்றைப் போற்றி வளர்த்தால், சமூகத்தில் உள்ள பெரும்பாலோர் தாமும் அதனை ஏற்பர். அதற்கு உறுதுணையாகச் கல்விச் சாலைகளையும் அமைக்க வேண்டும். இது நவீன மனநூலார் கருத்து. காந்தியடிகளும் இக் கோட்பாட்டின்படியே, எதிர்கால சமுதாயம் புரட்சிகரமாக மாறியமைந்து சூழ்ச்சியும் சுரண்டலுமற்று சமநீதியுடன் வாழ, தருமகர்த்தா முறை தக்கதென உணர்ந்தார்.

பொருளாதாரத்திலும் குவியல் முறை நிறுவனங்களால் வரும் கேட்டைத் தவிர்க்க, கிராம அளவில் உள்ள உற்பத்தி விநியோக முறைகளுக்கு ஊக்கமளிக்க காந்தி விரும்பினார்.''

—திரு கே. அருணாசலம்,

(தலைவர், மாநில பூதான யக்ஞ போர்டு, மதுரை)

[திரு கே. அருணாசலம் அவர்களின் சிறப்புக் கட்டுரையில் ஒரு பகுதி—இதன் முழு விவரம் அடுத்த இதழில்.]

# காந்தி ஜயந்தி

(1869-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ந் தேதி—சுக்கில ஆண்டு புரட்டாசி 18-ம் தேதி—சனிக்கிழமை—இரவு மணி 3½-க்கு—மகம் நான்காம் பாதத்தில் ஜனனம்).

**"சிங்கராசியின் மதி சேர்ந்து வாழ்வுற**
**வெங்கதிர் கன்னியில் மேவ, மூன்றினில்**
**மங்களன் மால்,புகர் மருவ, நான்கினில்**
**தங்கிட மந்தனும், சாற்றும். ஆறினில்**

**கேதுமே விடக்குரு கெழுமி ஒன்பதில்**
**போதர, வியத்தினில் இராகு புக்கிட**
**ஜாதகம் அமைந்தது; தரைக்கெலாம் ஒரு**
**நாதனும் இவனெனும் உண்மை நாட்டுற..."**

[சிங்க ராசியில் (லக்கினம்) சந்திரன்—கன்னியில் சூரியன்—மூன்றும் இடத்தில் அங்காரகன், புதன், சுக்கிரன்—நான்காம் இடத்தில் சனி—ஆறில் கேது—ஒன்பதில் குரு—பனிரெண்டில் இராகு].

['காந்தி காவியம்' இயற்றிய பண்டிதை அசலாம்பிகை அம்மையார், இந்த விவரங்களைப் பாடல் வடிவத்திலேயே அளித்திருக்கிறார். சோதிடக் கலையில் ஆர்வமுள்ளவர்களுக்கு, இந்தத் தகவல்கள் பயன்படலாம். இந்தக் கவிதை, "காந்தி காவிய"த்திலிருந்து எடுக்கப்பட்டதே. "காந்தி காவியம்" பற்றிய சிறப்புக் கட்டுரை, ஆகஸ்ட், '66 'கிராம நல' இதழில் இடம் பெற்றிருந்ததை, நேயர்களுக்கு நினைவூட்டுகிறோம்.]

## விவசாய வளர்ச்சியில் சோவியத் நாட்டின் ஒத்துழைப்பு

"விவசாயத் துறையில், இந்திய—சோவியத் ஒத்துழைப்புப் பன்மடங்கு வளர்ந்தோங்குவதற்கு நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன" என்று இந்திய உணவு—விவசாய அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் அண்மையில் 'சோவியத நாடு' பத்திரிகை நிருபருக்கு அளித்த பேட்டியில் கூறினார்.

"இந்தியாவின் விவசாய வளர்ச்சிக்கு சோவியத் யூனியன் முக்கிய உதவி அளித்து வருகிறது. சிறந்த விதைப் பண்ணைகளை நிறுவிக்கொள்வதற்கும், மீன் பிடித் துறையை வளர்ப்பதற்கும், விவசாய விஞ்ஞானிகளின் தூதுக் குழுக்களை பரஸ்பரம் பரிமாறிக்கொள்வதற்கும் பரவலான வாய்ப்புகள் இருக்கின்றன" என்றார் அவர்.

"சூரத்கரிலும், ஜெட்சாரிலும் பிரம்மாண்டமான விவசாயப் பண்ணைகளை அமைத்திடுவதற்கு சோவியத் யூனியன் உதவி புரிந்தது. சூரத்கரில் கிட்டியுள்ள அனுபவம், நீர்பாசன வசதிகள் நாளுக்கு நாள் பெருகி வரும் ராஜஸ்தானில் பரந்த பாலைவனப் பிரதேசங்களை செழுமை மிக்க பயிர் நிலங்களாக மாற்றுவதற்கு மிகவும் துணைபுரியும்" என்றார்.

'நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் போது, இந்தியாவிற்கு நைட்ரஜன் உரங்கள் சப்ளை செய்ய சோவியத் யூனியன் முன் வந்திருக்கிறது. விவசாய இயந்திரங்களைப் பழுதுபார்க்கும் நிலையங்கள் அமைப்பது சம்பந்தமாகவும் சோவியத் உதவியை இந்தியா நாடியுள்ளது. ஒவ்வொரு மாநிலத்திலும் இத்தகைய ஒரு நிலையத்தை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பூச்சிக் கொல்லி மருந்துகளை ஆகாயத்திலிருந்து தூவுவதற்காக கூட்டு முயற்சிகள் எடுத்துக் கொள்ளவும் ஏற்பாடாகி வருகிறது. மண்ணை வகைப்படுத்துவது சம்பந்தமாகவும் பூமிக்கடியில் தண்ணீர் கண்டு பிடிப்பது சம்பந்தமாகவும் கூட்டு ஆராய்ச்சிகள் நடத்துவதென்று திட்டமிடப்பட்டிருக்கிறது. ஆழ்கடல் மீன்பிடிப் படகுகள் வாங்குவதற்கும், இப்படகுகள் கட்டும் தளம் ஒன்றை அமைத்துக் கொள்வதற்கும் இந்தியா விரும்புகிறது. இது குறித்து தொடர்ந்து பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருவதாகவும், விரைவில் நற்பலன்கள் கிடைக்குமென எதிர்பார்ப்பதாகவும்" அவர் கூறினார்.

(நன்றி : "சோவியத் நாடு").

### கிராம வளர்ச்சி நெறியாளரின் சோவியத்நாடு பயணம்

கிராம வளர்ச்சி நெறியாளர் திரு கா. திரவியம், ஐ.ஏ.எஸ்., அவர்கள், செப்டெம்பர் 13-ம் தேதியன்று, புதுடெல்லியிலிருந்து, மாஸ்கோவுக்குப் பயணமானார். அவர் சோவியத் நாட்டில் நான்கு வாரங்கள் தங்கி, விவசாய வளர்ச்சி, கல்வி சம்பந்தமான முறைகள் பற்றி ஆராய்ந்தறிவார்.

ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தின் உணவு விவசாய நிறுவனத்தின் (Food and Agriculture Organisation) ஆதரவில், பாரத அரசாங்கத்தினால் இதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இருவர்களில், திரு கா. திரவியம் ஒருவர்.

# நிர்மாணத் திட்டத்தின் மாண்பு

[டாக்டர்
எஸ். விஜயலட்சுமி]

1922-ம் ஆண்டு. நாடு பூராவும் ஒரு கொந்தளிப்பான நிலை. 1920-ல் கூடிய நாகபுரி காங்கிரசில் ஒத்துழையாமை தீர்மானம் நிறைவேறியது. அதைத் தொடர்ந்து, காந்தியடிகளின் கருத்துக்களும் கொள்கைகளுமே சுதந்திர, இயக்கத்தின் போக்கை நிர்ணயித்து வந்தன. மகாத்மாவின் ஒத்துழையாமைப் போராட்டத்தின் குரல் நாட்டின் மூலைமுடுக்குகளில் எல்லாம் எதிரொலித்தது. கிராமங்கள் தோறும் இந்தக் குரல் பரவியது. நீண்ட தூக்கத்தில் ஆழ்ந்துகிடந்த இந்திய கிராமங்களிலே என்றுமே காணாத ஒரு விழிப்புணர்ச்சி தோன்றியது. பர்தோலியில் மக்கள் வரிகொடா இயக்கத்தை நடத்த முற்பட்டனர். நாட்டில் கரைபுரண்டோடின உற்சாக வெள்ளம், சில இடங்களில் தடம் புரண்டு ஓடத்தொடங்கியது. சௌரி சௌரா என்ற இடத்தில், மக்களுக்கும், போலீஸ்காரர்களுக்கும் ஏற்பட்ட மோதலில், சில போலீஸ்காரர்கள் கொல்லப்பட்டனர். மகாத்மாவுக்கு இந்தச் செய்தி பேரதிர்ச்சியைத் தந்தது. நாடெங்கும் நடந்துவந்த ஒத்துழையாமை இயக்கத்தை உடனே அவர் நிறுத்தி உத்தரவு போட்டார். இதைத் தொடர்ந்து எட்டாண்டுகளுக்கு அவர் அரசியலில் பிரவேசம் செய்யாமல், ஆக்க வேலைகளிலேயே கவனத்தைச் செலுத்தினார். அஹிம்சா தர்மத்தை மீறி மக்கள் போராடுவது கண்டு மகாத்மா மனம் குமுறினார். பலாத்காரச் செயல்களை வன்மையாக அவர் கண்டித்தார். ''சத்தியமும் அகிம்சையும் சத்தியாக்கிரஹியின் இரு கண்கள்'' என்ற உயரிய இலட்சியத்தை, மகாத்மா காந்தி தாரக மந்திரமாகக் கொண்டார். மக்களையும் தன்வழி திருப்ப முயற்சித்தார்.

ஆகவே, தேசத்திற்கு அவர் நிர்மாணத் திட்டம் ஒன்றினை தந்தார். மகாத்மா ஒத்துழையாமை திட்டத்தை வாபஸ் பெற்றது, சி. ஆர். தாஸ், மோதிலால் நேரு போன்ற தலைவர்களுக்குப் பிடிக்கவில்லை. சர்தார் படேல், ராஜாஜி, ராஜேந்திர பிரசாத் போன்றவர்கள் மகாத்மாவின் போக்கை ஆதரித்தனர். இந்த நிலையில், காந்தியடிகளின் நிர்மாணத் திட்டம் நாட்டு மக்களிடையேயும், போராட்ட வீரர்களிடையேயும், மிகுந்த செல்வாக்கினையும், முக்கியத்துவத்தையும் பெற்றது.

## நிர்மாணத் திட்டம் என்றால் என்ன?

தேசத்தின் விடுதலைப் போராட்டத்தின் ஓர் அங்கமாகவே கருதப்பட்டு தொடங்கப்பட்ட இந்த நிர்மாணத் திட்டம் என்பது தான் என்ன? அதன் அடிப்படை என்ன? அந்நியர் ஆட்சியை எதிர்த்து நடத்தும் சுதந்திரப் போராட்டத்தின் பிரதான அங்கமாக இந்த நிர்மாணத் திட்டத்தை ஏன் காந்திஜி கருதினார்? 'தேசீயத் தொண்டர்கள் சாத்வீக முறையில் பயிற்சி பெற்று பக்குவம் பெறும் வரை, சத்தியாக்கிரஹ போர் துவக்கமாட்டேன்' என்று முடிவெடுத்தார் காந்திஜி.

இந்தியாவின் சுதந்திரப் போராட்டம் அகிம்சை நெறி நின்று நடத்தும் போராட்டமாகத்தான் இருக்கவேண்டும் என்பது மகாத்மாவின் இலட்சியம். ஆகவே, இந்தப் போராட்டப்படை, அஹிம்சா வீரர்கள் அடங்கிய படையாகத்தான் இருக்க முடியும்; இருக்கவேண்டும் என்று மகாத்மா வலியுறுத்தினார். அப்படிப்பட்ட சத்தியாக்கிரஹிகளுக்கு பயிற்சிக்களமாக சபர்மதி ஆசிரமத்தை காந்தியடிகள் நிறுவினார். பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்துப் போராடுவதற்கு முன்னால், சத்தியாக்கிரஹிகளும் விடுதலைப் போராட்ட வீரர்களும் முதலில், தங்களைத் தாங்களே தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும்; ஒவ்வொரு தேசபக்தனும் தூய்மை நிறைந்தவனாகவும், தன்னைத்தானே தூய்மைப்படுத்திக்கொண்டவனாகவும், தனிப்பட்ட வாழ்க்கையிலும், பொது வாழ்க்கையிலும் உள்ள குற்றங்குறைகளை களைந்தெறிந்து, சீரிய நெறி நின்று ஒழுகுபவனாக தன்னை ஆக்கிக் கொள்ளவேண்டும் என்றும் காந்தியடிகள் விரும்பினார். ஒவ்வொரு சத்தியாக்கிரகியும், தீண்டாமை ஒழிப்பு, சமூக ஒற்றுமை, சுற்றுப்புரத் துப்புரவு, மாதர் முன்னேற்றம் ஆகியவற்றுக்காக உழைக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். "ஒருவன் தன்னுடைய வீட்டையும் சுற்றுப்புறத்தையும் தூய்மையாக வைத்துக் கொண்டால், அதன் பிறகு அந்நிய ஆட்சியை எதிர்த்து அவன் போராடுவது மிகவும் சுலபமானதாக இருக்கும்" என்று காந்திஜி கருதினார்.

## காந்தியின் பொருளாதார கண்ணோட்டம்

அகிம்சை, தன்னலமற்ற தன்மை, தானே பாடுபட்டு, தன் ஊதியத்தைக் கொண்டே வாழ்தல், சுதேசி



G.N.—2A

# நிர்மாணத் திட்டத்தின் மாண்பு

[டாக்டர்
எஸ். விஜயலட்சுமி]

1922-ம் ஆண்டு. நாடு பூராவும் ஒரு கொந்தளிப்பான நிலை. 1920-ல் கூடிய நாகபுரி காங்கிரசில் ஒத்துழையாமை தீர்மானம் நிறைவேறியது. அதைத் தொடர்ந்து, காந்தியடிகளின் கருத்துக்களும் கொள்கைகளுமே சுதந்திர, இயக்கத்தின் போக்கை நிர்ணயித்து வந்தன. மகாத்மாவின் ஒத்துழையாமைப் போராட்டத்தின் குரல் நாட்டின் மூலைமுடுக்குகளில் எல்லாம் எதிரொலித்தது. கிராமங்கள் தோறும் இந்தக் குரல் பரவியது. நீண்ட தூக்கத்தில் ஆழ்ந்துகிடந்த இந்திய கிராமங்களிலே என்றுமே காணாத ஒரு விழிப்புணர்ச்சி தோன்றியது. பர்தோலியில் மக்கள் வரிகொடா இயக்கத்தை நடத்த முற்பட்டனர். நாட்டில் கரைபுரண்டோடின உற்சாக வெள்ளம், சில இடங்களில் தடம் புரண்டு ஓடத்தொடங்கியது. சௌரி சௌரா என்ற இடத்தில், மக்களுக்கும், போலீஸ்காரர்களுக்கும் ஏற்பட்ட மோதலில், சில போலீஸ்காரர்கள் கொல்லப்பட்டனர். மகாத்மாவுக்கு இந்தச் செய்தி பேரதிர்ச்சியைத் தந்தது. நாடெங்கும் நடந்துவந்த ஒத்துழையாமை இயக்கத்தை உடனே அவர் நிறுத்தி உத்தரவு போட்டார். இதைத் தொடர்ந்து எட்டாண்டுகளுக்கு அவர் அரசியலில் பிரவேசம் செய்யாமல், ஆக்க வேலைகளிலேயே கவனத்தைச் செலுத்தினர். அஹிம்சா தர்மத்தை மீறி மக்கள் போராடுவது கண்டு மகாத்மா மனம் குமுறினர். பலாத்காரச் செயல்களை வன்மையாக அவர் கண்டித்தார். "சத்தியமும் அகிம்சையும் சத்தியாக்கிரஹியின் இரு கண்கள்" என்ற உயரிய இலட்சியத்தை, மகாத்மா காந்தி தாரக மந்திரமாகக் கொண்டார். மக்களையும் தன்வழி திருப்ப முயற்சித்தார்.

ஆகவே, தேசத்திற்கு அவர் நிர்மாணத் திட்டம் ஒன்றினை தந்தார். மகாத்மா ஒத்துழையாமை திட்டத்தை வாபஸ் பெற்றது, சி. ஆர். தாஸ், மோதிலால் நேரு போன்ற தலைவர்களுக்குப் பிடிக்கவில்லை. சர்தார் படேல், ராஜாஜி, ராஜேந்திர பிரசாத் போன்றவர்கள் மகாத்மாவின் போக்கை ஆதரித்தனர். இந்த நிலையில், காந்தியடிகளின் நிர்மாணத் திட்டம் நாட்டு மக்களிடையேயும், போராட்ட வீரர்களிடையேயும், மிகுந்த செல்வாக்கினையும், முக்கியத்துவத்தையும் பெற்றது.

### நிர்மாணத் திட்டம் என்றால் என்ன?

தேசத்தின் விடுதலைப் போராட்டத்தின் ஓர் அங்கமாகவே கருதப்பட்டு தொடங்கப்பட்ட இந்த நிர்மாணத் திட்டம் என்பது தான் என்ன? அதன் அடிப்படை என்ன? அந்நியர் ஆட்சியை எதிர்த்து நடத்தும் சுதந்திரப் போராட்டத்தின் பிரதான அங்கமாக இந்த நிர்மாணத் திட்டத்தை ஏன் காந்திஜி கருதினர்? 'தேசியத் தொண்டர்கள் சாத்வீக முறையில் பயிற்சி பெற்று பக்குவம் பெறும் வரை, சத்தியாக்கிரஹ போர் துவக்கமாட்டேன்' என்று முடிவெடுத்தார் காந்திஜி.

இந்தியாவின் சுதந்திரப் போராட்டம் அகிம்சை நெறி நின்று நடத்தும் போராட்டமாகத்தான் இருக்கவேண்டும் என்பது மகாத்மாவின் இலட்சியம். ஆகவே, இந்தப் போராட்டப்படை, அஹிம்சா வீரர்கள் அடங்கிய படையாகத்தான் இருக்க முடியும்; இருக்கவேண்டும் என்று மகாத்மா வலியுறுத்தினர். அப்படிப்பட்ட சத்தியாக்கிரஹிகளுக்கு பயிற்சிக்களமாக சபர்மதி ஆசிரமத்தை காந்தியடிகள் நிறுவினர். பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்துப் போராடுவதற்கு முன்னல், சத்தியாக்கிரஹிகளும் விடுதலைப் போராட்ட வீரர்களும் முதலில், தங்களைத் தாங்களே தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும்; ஒவ்வொரு தேசபக்தனும் தூய்மை நிறைந்தவனாகவும், தன்னைத்தானே தூய்மைப்படுத்திக்கொண்டவனாகவும், தனிப்பட்ட வாழ்க்கையிலும், பொது வாழ்க்கையிலும் உள்ள குற்றங்குறைகளை களைந்தெறிந்து, சீரிய நெறி நின்று ஒழுகுபவனாக தன்னை ஆக்கிக் கொள்ளவேண்டும் என்றும் காந்தியடிகள் விரும்பினர். ஒவ்வொரு சத்தியாக்கிரகியும், தீண்டாமை ஒழிப்பு, சமூக ஒற்றுமை, சுற்றுப்புரத் துப்புரவு, மாதர் முன்னேற்றம் ஆகியவற்றுக்காக உழைக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினர். "ஒருவன் தன்னுடைய வீட்டையும் சுற்றுப்புறத்தையும் தூய்மையாக வைத்துக் கொண்டால், அதன் பிறகு அந்நிய ஆட்சியை எதிர்த்து அவன் போராடுவது மிகவும் சுலபமானதாக இருக்கும்" என்று காந்திஜி கருதினர்.

### காந்தியின் பொருளாதார கண்ணோட்டம்

அகிம்சை, தன்னலமற்ற தன்மை, தானே பாடுபட்டு, தன் ஊதியத்தைக் கொண்டே வாழ்தல், சுதேசி

உணர்வு, இவைகளே காந்திஜியின் பொருளாதாரக் கொள்கையின் அடிப்படைத் தத்துவங்களாகும். தனக்குத்தானே உழைத்து தன் ஊதியத்தைக் கொண்டே வாழ்தல், சுதேசி உணர்வு, தன்னலமற்ற தன்மை ஆகிய இந்தக் கொள்கைகளில் காந்திஜி கொண்ட நம்பிக்கையினால் தான் மக்களைத் திரட்டி, அவர்களை ஒருமுகப்படுத்தி சிறந்த பயிற்சியை அவர்களுக்கு அளிக்கும் திட்டம் ஒன்றினை அவர் உருவாக்க முடிந்தது. தனக்குத்தானே உழைத்துப் பாடுபடுதல் என்ற கொள்கை, அதாவது ஒவ்வொருவரும், ஆணும் பெண்ணும் தான் வாழ்வதற்காக பாடுபடவேண்டும்; உழைக்க முடிந்த ஒவ்வொருவரும் தன்னுடைய உணவிற்காக வேலை செய்யவேண்டும் என்ற கொள்கையை காந்திஜி, டால்ஸ்டாயின் நூல்களைப் படித்து உணர்ந்து கொண்டார். உழைத்துப் பாடுபடுதல் என்ற இந்தக் கொள்கைதான், அவரை தினந்தோறும் நூற்க வைத்தது. எவ்வளவு கடுமையான அலுவல்களுக்கிடையேயும் அவர் தனக்கு வேண்டிய துணிக்கான நூலை, தானே நூற்றுக் கொண்டார். உழைத்துப் பாடுபடுதல் என்ற இந்தக் கொள்கை உணர்வு, உண்மை, அன்பு, தன்னடக்கம், பற்றின்மை ஆகியவற்றின் அடிப்படையில் அமைகின்ற பலாத்காரமற்ற, சுரண்டல் இல்லாத ஒரு சமுதாயத்தை உருவாக்க வித்தாக அமைந்தது எனலாம்.

## பிரச்னையைத் தீர்க்கும் மருந்து

நாட்டின் சுதந்திரப் போராட்டத்திற்கு உறுதுணையாக, மக்கள் சமுதாயத்திற்கு மகாத்மா காந்தி, திட்டவட்டமான ஆக்கரீதியில் பணியாற்றுகிற முறையில் ஒவ்வொரு மனிதனும் கடைப்பிடிக்கக்கூடிய வழிமுறைகளை வகுத்துத் தந்தார். அவருடைய நிர்மாணத் திட்டத்தின் மூலம் நாட்டின் சுதந்திரத்திற்கு மட்டுமின்றி, நாட்டின் பொருளாதார மறுமலர்ச்சிக்கும் வழிவகுக்கக்கூடிய திட்டத்தினை அவர் நாட்டிற்கு தந்தார். சீர்திருத்தம், புரட்சி என்றெல்லாம் முழக்கம் செய்யப்பட்டுக்கொண்டிருந்த அந்த நாட்களில், ஒவ்வொரு தனி மனிதனும், தான் இருக்கின்ற இடத்திலேயே இருந்து கொண்டு, தன்னால் இயன்ற அளவுக்கு நாட்டிற்கு சாத்வீகமான முறையில் என்ன சேவை செய்யலாம், என்ன சேவை செய்யமுடியும் என்பது தான் அன்றிருந்த பெரிய பிரச்னையாகும். மக்கள் திரண்டெழுந்து தொண்டு புரியத் தயாராக இருந்தாலும், அவர்களுடைய சக்தி அத்தனையும் ஆக்க ரீதியில் பயன்படாமல் வீணாகிக் கொண்டிருந்தது. அந்தச் சமயத்தில் மகாத்மா நாட்டின் முன்னால் நலிவைப் போக்கும் மருந்தாக, பிரச்னையைத் தீர்க்கும் மருந்தாக, நிர்மாணத் திட்டத்தை முன் வைத்தார். "போர்ப்படையினருக்கு யுத்தப் பயிற்சி எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியமானது, அஹிம்சைப் படைக்கு நிர்மாணத் திட்டம்" என்று காந்திஜி எழுதினார். சத்தியாக்கிரஹம், உருப்படியான திட்டவட்டமான பயனை அளிக்க வேண்டுமென்றால், தனிப்பட்ட வாழ்வு, நெறியோடு இயங்குவதும் அவசியமாகும். "உண்மையான சேவை உணர்வு, தொண்டார்வம் இல்லாமல், வெறும் சிறைக்குச் செல்வதோ, தடியடிபடுவதோ, சத்தியாக்கிரஹியின் அகிம்சா தர்மத்துக்கு முரண்பட்டது" என்பது காந்திஜியின் கருத்து.

அஹிம்சையை அடிப்படையாகக் கொண்ட நேரடி நடவடிக்கை (சத்தியாக்கிரஹம்), நம்முடைய பத்தாம் பசலி சமூக அமைப்பை மாற்றியமைக்க உதவுகிறது" என்று காந்திஜி கருதினார். நிர்மாணத் திட்டமானது, ஒவ்வொரு சத்தியாக்கிரஹியும் புதியதொரு சமுதாயத்தை அஹிம்சை முறையில் உருவாக்கும் பணியில் உறுதுணையாக அமைந்துள்ளது. அஹிம்சை முறையில் விடுதலைப் போர் நடத்தி அரசாங்கத்தைக் கைப்பற்றும் வரையில் நிர்மாண வேலை காத்துக்கொண்டிருக்கத் தேவையில்லை என்பது காந்திஜியின் கருத்து. அரசாங்கத்தின் வேலைப்பளுவைக்குறைத்து, அரசாங்க சார்பற்ற நிறுவனங்கள், தானே முன்வந்து செய்கின்ற பணிகளின் மூலமாகவே, நிர்மாண வேலையும், சுதந்திரப் போராட்டத்துடனேயே ஒன்றிணைந்து நடைபெற வேண்டும் என்று அவர் கருதினார். பழைய உளுத்துப்போன அமைப்பை எதிர்த்து ஒவ்வொரு சத்தியாக்கிரஹியும்போராடும் பொழுதே, புதியதொரு சமுதாயத்தை உருவாக்கிக் கொண்டே வருகிறான்" என்று காந்திஜி கருதினார். எதிரியுடன் போராடும் பொழுது ஒவ்வொரு சத்தியாக்கிரஹியும கூட்டு முறையில் பணி புரிந்து, தன்னைத்தானே தூய்மைப்படுத்திக் கொண்டு, அந்தப் பலத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

[12-ம் பக்கம் பார்க்க]




திரு சீனிவாசன்
*கிராம வளர்ச்சிப் பயிற்சி நிலையம், ஆடுதுறை*

தன்கையே தனக்குதவி தன்னுழைப்பே தன்வாழ்க்கை
என்கின்ற உண்மைதனை எடுத்தாண்டார் முன்னவர்கள்.
வன்பாடு ஒருவர்பட வருபயனைப் பிறரடைந்தே,
இன்புறுதல் தீதெனவே இயம்பினர்காண் முன்னவர்கள்.

உண்பதற்கு உழுதிடவும், உடுப்பதற்கு நூற்றிடவும்,
பண்பறியப் பயின்றிடவும் பகையொழியப் பழகிடவும்,
கண்புதைந்த மாந்தரெலாம் கருத்தொன்றி அன்புடனே,
நண்பர்களாய் வாழ்ந்திடவும் நவின்றனர்காண்
முன்னவர்கள்.

எம்மதமும் எக்குலமும் எவ்வினமும் எந்நிறமும்
சம்மதமே அன்றியலால் தாழ்வுமில்லை உயர்வுமில்லை
நன்மையெல்லாம் ஆக்கியவன் நமைப்பிரித் தாக்கவில்லை
மும்மையிலும் சேர்ந்துறைய மொழிந்தனர்காண்
முன்னவர்கள்.

கிராமத் தொழில் வளர்ச்சி:

# அண்ணலாரின் அடிச்சுவட்டில்

[திரு வி. பத்மநாபன், செயலாளர், மாநில கதர்—கிராம கைத்தொழில் போர்டு, சென்னை-9.]

காந்தி அண்ணலின் தலைமையின் கீழ் இந்தியா விழித்தெழுந்து முன்னேறிய வரலாறு, மனித வரலாற்றிலேயே ஒப்புவமையற்ற தொன்றாகும். ஆயுதமற்ற நூதனப்போர் மூலம், அடிமைத் தளையைக் களைந்தெறிந்து, இந்தியா சுதந்திரம் பெற்ற மகத்தான நிகழ்ச்சியை உலக மக்கள் அனைவரும் நன்கறிவார்கள். அஹிம்சையைப் பின்பற்றியது ஓர் ஆத்ம சோதனையாகும். கொடியவர்களின் உள்ளங்களைத் துளைத்து, அவர்களையே நல்லது செய்யத்தூண்டியது இச்சோதனை என்பதைச் சிலர் தான் உணர முடிந்தது.

காந்தி அண்ணல், கிராமங்கள் புது மலர்ச்சி பெற்று, புதுப்பொலிவுடன் திகழ, நிர்மாணத் திட்டம் ஒன்றை வகுத்து, நமக்குக் கொடுத்து உதவியிருக்கிறார். கிராமச் சுகாதாரம், ஆதாரக் கல்வி, வயதடைந்தவருக்குக் கல்வி, மாதர் முன்னேற்றம், கதர், கிராமத் தொழில்கள் போன்றவற்றில் அவர் காட்டிய வழியைப் பின்பற்றியே நாடு சுதந்திரம் பெற்றவுடன், பல திட்டங்கள் உருவாக்கப்பட்டன.

### அண்ணலின் அறிவுரை

குறிப்பாகக் கதரின் மாண்பைப் பற்றி காந்தி அண்ணல் எடுத்துக் கூறும்போது ''கிரகங்களுக்கெல்லாம் சூரியன் எப்படி உயிர்நாடியாகவும், நடுமையமாகவும் விளங்குகிறதோ, அதேபோல் கிராமத் தொழில்களுக்கு கதர் உற்பத்தி, உயிர்நாடியாகும். சூரியன் எவ்விதம் ஒளியையும் சூட்டையும் அளித்து, உயிர்களுக் கெல்லாம், வாழ்வளித்து வருகிறதோ, அதேபோல் கிராமத் தொழில்களுக்கு புத்துயிர் அளிப்பது, கதர்த் தொழிலேயாகும். கதர்த் தொழில் வளம் பெருகாவிடில், இதர கிராமத் தொழில்களும் நசித்துப் போகும்'' என்று வலியுறுத்திவிட்டு, மேலும் ''ஓய்வு நேரத்தில் ஏதோ சொல்ப ஊதியத்தைப் பெற விரும்புகிறவர்களுக்கு, கதர் நூல் நூற்றல் சிறந்ததொரு தொழிலாக விளங்குகிறது. நூல் நூற்பது எப்படி என்பது அநேகருக்குத் தெரியும். நூற்பதைச் சுலபமாகக் கற்றுக்கொள்ளலாம். நூற்பதற்காகவென்று முதலீடு செய்யும் தொகை மிகமிகச் சொற்பமே. ராட்டையைச் சுலபமாகவும் சிக்கனமாகவும் தயாரித்துக் கொள்ளலாம். இது, பஞ்ச தட்டுப்பாடு போன்ற அவல நிலைமைக்குத் துரிதமாக நிவாரணம் அளிக்கக்கூடியது. ஏழைகளுக்குக் கோடிக்கணக்கான ரூபாயை விநியோகிக்கக்கூடிய தொழிலாகும் இது. அவ்வப்போது, கதர் அணிவோரின் எண்ணிக்கை சிறுகச் சிறுகப் பெருகினாலும் போதும். அதன் மூலம் உடனடியாக, கிராம மக்களுக்கு நல்ல பலன் கிட்டும் என்பதில் ஐயமில்லை. கூட்டுறவு இயக்கம் பரவுவதற்கு, மக்களைத் தூண்டும் மகத்தான, சாதனமாக கதர் உற்பத்தி விளங்குகிறது. புது வாழ்வு பெறுவோம் என்னும் புத்துணர்ச்சியையும் புதிய நம்பிக்கையையும் கிராம மக்களுக்கு அளிக்கவல்லது, இத்தொழில். இலட்சக்கணக்கான மக்களுக்கு உணவு அளிக்கும் இத்தொழில், நம்மை கிராம மக்களுடன் நெருங்கி இணைத்து, அவர்களுடைய நல்வாழ்விலும் பங்கு கொள்ளச் செய்கிறது. ஏழ்மையை விட சோம்பேறித்தனம் நம்மை மிகவும் பாதிக்கவல்லது. ஏனெனில், சோம்பல் தான் எல்லாவித கேடுகளுக்கும் மூலகர்த்தாவாக விளங்குகிறது. மனமுறிவுற்று மருண்டு கிடக்கும் நிலையைப் போக்கி, புதிய உத்வேகத்தையும் புதியதொரு நம்பிக்கையையும் அளிப்பது, உயிர்நாடியாக விளங்கும் இராட்டை தான்'' என்று விளக்கியுள்ளார்.

கதர் உற்பத்தித் தொழிலின் முக்கியத்து

["கிராம வாழ்வை அபிவிருத்தி செய்து, மற்ற நாடுகளுடன் சமாதானமாய் வாழ்ந்து, எளிய ஆனால், உயர்ந்த வாழ்வுக்கு உதாரணமாக விளங்கினால்தான், உய்யும் வகை அறியாது உழலும் உலகுக்கு இந்தியா தன் கடமையைச் செய்யமுடியுமென்று நான் நம்புகிறேன். எளிய ஆனால் உயர்ந்த வாழ்க்கை நடத்த நாம் கற்றுக்கொண்டால்தான், வாழ்க்கைக் கலை பண்படும்" என்பது காந்தி வாக்கு. கதரும் கிராமக் கைத்தொழில்களும் எளிய ஆனால் உயர்ந்த வாழ்க்கை உருவாக வழி வகுக்கும் சாதனங்களாகும்—ஆசிரியர்]

வத்தை உணர்ந்து, நமது மாநில அரசுதான் இந்தியாவிலேயேமுதன் முதலாக, கதர் வளர்ச்சிக்கான ஏற்பாடுகளைச் செய்ய முற்பட்டது. 1946-ல் 1,800 நூற்போருடனும் 500 நெசவாளர்களுடனும் கூடிய நான்கு கதர் உற்பத்திக் கேந்திரங்களை, மாநில அரசு, அகில இந்திய கதர் நூற்போர் சங்கத்தினிடமிருந்து பெற்று, அவற்றை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டது. காந்தி அண்ணலின் ஆசி பெற்றே, இப்புனித முயற்சி துவங்கியது. இந்நிர்வாகம் பத்து ஆண்டுகளாக வெற்றிகரமாக நிறைவேறி வருவதைக் கண்டு, மாநில அரசு 1956-ல், கதர் உற்பத்தி தொழில் வளத்தைப் பெருக்கத் தனித்தவொரு துறையை உருவாக்கியது. 1957—ல் அகில இந்திய கதர், கிராமத் தொழில்கள் கமிஷன் அமைக்கப்பட்டதை யொட்டி, மாநில போர்டு ஒன்றை அமைக்க வேண்டிய அவசியத்தை, அரசு உணர்ந்தது. இதன் விளைவாக, 1960 ஏப்ரலில் மாநில போர்டு உருவாகி, காந்தி அண்ணல் துவக்கி ஊட்டமளித்த கதர்த்தொழிலை மேன்மேலும் வளர்க்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டது. நம் மாநிலத்தில் தற்போது மூன்று கோடி ரூபாய் மதிப்புள்ள கதர்த் துணி உற்பத்தி செய்யப்பட்டு விற்பனையாகி வருகிறது. நான்காவது திட்ட கால இறுதிக்குள், இத்தொகை இரட்டிக்கப்பட்டுவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### சிறு தொழில் வளர்ச்சிக்காக....

நமது மாநில போர்டு, கதர் உற்பத்தித் தொழில் வளர்ச்சிக்காக மட்டுமின்றி, கைக்குத்தலரிசி, எண்ணெய், தோல் சாமான்கள், மட்பாண்டங்கள், செங்கல், ஓடு, கையினால் தயாரிக்கப்படும் காகிதம், பனை வெல்லம், தேன், நாட்டுச்சர்க்கரை, தீப்பெட்டி, சோப், நார்ப் பொருட்கள், சுண்ணும்பு முதலியவற்றைக் கிராமங்களில் உற்பத்தி செய்வதற்கான கைத்தொழில்கள் பலவற்றை பெருக்குவதற்கான பொறுப்பையும் ஏற்றுள்ளது.

தொழில்கள் பெருக இயந்திரங்கள் தேவையா என்ற கேள்விக்கு, காந்தி அண்ணல் அளிக்கும் கருத்துச் செறிந்த பதில் குறிப்பிடத்தக்கதாகும். அவர் "எப்படி ஆன்மா பூரண விடுதலை பெற்றுப்பெரும்பேறு பெறுவதற்கு, உடல்உறுதுணையாக இருப்பதில்லையோ, அதேபோல் தொழில் வளத்துக்கு இயந்திரங்களின் உதவி தேவையற்றது என்பதுதான் எனது கருத்து. எல்லா இயந்திரங்களையும் புறக்கணிக்க வேண்டுமெனக் கருதினாலுங்கூட, உயிருக்கு உடல் எவ்விதம் இன்றியமையாததாக இருக்கிறதோ, அதேபோல் சிற்சில இயந்திரங்களும் தொழில் வளத்துக்கு இன்றியமையாதவையாயிருக்கின்றன. எனினும், இயந்திரங்களை, மனிதனின் உடலுறுப்புகள் செயலற்றுச் சோம்பிப் போகாத வகையில், பயன்படுத்துவதுதான் நல்லது. மனிதனைத் தான் சிறப்பாகக் கருத்தில் கொள்ள வேண்டும். ஏதோ சிற்சில இன்றியமையாத இயந்திரங்களை மட்டுமே பயன்படுத்துவது சிறந்த வழியாகும்'' என்று கூறியிருக்கிறார். ஆகவே, சில குறிப்பிட்ட இயந்திரங்களைத் தவிர்க்க முடியாது என்ற நிலைமை ஏற்படும்போது மட்டும் அவைகளைப் பயன்படுத்தி, கிராமத் தொழில்களை வளம்படுத்துவதில், நமது மாநில போர்டு ஈடுபட்டு வருகிறது.

## ஹஜ் யாத்திரை—ஹாஜிகளுக்கு உணவு வசதி

தற்சமயம் பம்பாய் துறைமுக ஹஜ் கமிட்டியினர், ஹஜ் யாத்திரிகர்களுக்கான உணவுப் பொட்டலங்களை இந்தியாவிலிருந்து சௌதி அராபியாவுக்கு எடுத்துச் சென்று, ஜெக்தா சேர்ந்ததும் சம்பந்தப்பட்ட யாத்திரிகர்களுக்குத் தருகின்றனர். அவரவர் விருப்பப்படி செயல்பட அனுமதிக்கப்பட்டிருப்பதால், பெரும்பாலான யாத்திரிகர்கள் இந்தப் பொட்டலங்களை வாங்குவதில்லை. சௌதி அராபியாவில் கிடைப்பதையே நம்பி இருந்தனர். முக்கியப் பொருள்களுக்கு அதிக விலை கொடுக்க வேண்டிய நெருக்கடிக்கு ஆளானூர்கள். எனவே, இந்தியாவிலேயே முக்கியப் பொருள்களை யாத்திரிகர் வாங்கிக்கொள்வதைக் கட்டாயமாக்குவதென முடிவு செய்யப்பட்டிருக்கிறது. பம்பாய் துறைமுக ஹஜ் கமிட்டியினர் வைத்திருக்கும் பொட்டலத்தில் சோப்பையும் சேர்க்கவேண்டும். சௌதிய அராபியாவுக்குச் செல்லும் வழியில் யாத்திரிகர்கள் தங்குமிடமான சாபூ சித்திக் முசாபர்கானு இல்லத்தில் பம்பாய் துறைமுக ஹஜ் கமிட்டியினர் முக்கியப் பொருள்களை வழங்குவர். உடையைப் பொறுத்தவரை, யாத்திரையின்போது ஒருவர் மூன்று அல்லது நான்கு செட் புதிய ஆடைகளை எடுத்துச் செல்ல வேண்டும். பம்பாயில் துறைமுக ஹஜ் கமிட்டி அதிகாரிகள் கேட்கும்போது, யாத்திரிகர்கள் இந்த உடைகளைக் காட்டவேண்டும்.

யாத்திரிகர்களின் நன்மையையும், க்ஷேமத்தையும் முன்னிட்டு, விண்ணப்பிக்கும் சமயத்தில், நான்கு மாதத்திற்கு மேலான கர்ப்பிணிகளையும், ஹஜ் போவதற்காக இந்திய கரன்சியில் ரூ. 800—க்கும் குறைவாக வைத்திருக்கும் நபர்களையும், நோயாளிகளையும், ஐந்து வயது முதல் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளையும், ஹஜ் யாத்திரைக்காக சௌதியா அராபியா போக அனுமதிப்பதில்லை என இந்திய அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

---

**"இந்தியாவைப் பொறுத்தவரை, இன்று நாம் காணும், கலகங்கள் முதலிய நாச நடவடிக்கைகள், பெரும்பாலும் வேலையில்லாதவரின் வேலையேயாகும். ஓய்வு நேரம் அதிகரிப்பதுடன், குற்றங்களும் எவ்வளவு அதிகரிக்கின்றன என்ற புள்ளி விவர ஆராய்ச்சி மிகவும் பலனளிக்கும். 'சோம்பலாயிருப்பவனை சைத்தான் தன் கருவியாக உபயோகித்துக் கொள்வான்' என்ற உண்மை மட்டும் இன்னும் பொய்ப்பிக்கப்படவில்லை".**

*—மகாத்மா காந்தி.*

# டிராக்டர்கள் வாடகைக் கிரயத் திட்டம்

## 85 பேருக்கு அரசாங்கம் அனுமதி

அரசாங்கம் டிராக்டர்களை வாங்கி, வாடகைக்கு கிரய முறையில் குடியானவர்களுக்கு வழங்கும் திட்டத்தின் கீழ் 1966-67ம் ஆண்டில் கீழ்க்கண்ட 85 நபர்களுக்கு டிராக்டர்களை வழங்க அரசாங்கம் அனுமதித்துள்ளது. ஒரு டிராக்டரின் விலை சுமார் ரூ. 20,000. ஒரு டிராக்டர் ரூ. 20,000 என்ற அளவுக்கு அதிகமாகப் போனால், அந்த அதிகத் தொகையை அந்தந்த நபர்களே ஏற்றுக்கொள்ளவேண்டும்.

### செங்கற்பட்டு மாவட்டம்

திரு. எ. பி. ஹரிநாராயணன், பழையவண்ணாரப் பேட்டை. திரு. என். எம். சுப்பிரமணிய நாயக்கர், புதுப் பட்டு. திரு ஆர். குப்புசாமி நாயக்கர், ஏச்சூர். திரு. எம். நரசிம்ம செட்டியார், சுரகாபுரம் திரு. டி. கே. ராமச்சந்திரன், திருக்கண்டலம். திரு சி. ஏழுமலை நாயக்கர், ஏச்சூர், திரு ஆர். பங்காரு நாயுடு, மஞ்சன்காரனை. திரு ஜி. எஸ். நாகையா நாயுடு, கல்யாணகுப்பம். திரு எஸ். குமாரசாமி முதலியார், திரு எஸ். தர்மலிங்கம் காட்டூர், பொன்னேரி தாலுகா, திரு பி. வெங்கட சுப்பாராம், மயிலாப்பூர். திரு ஆர். எஸ். பெருமாள் ரெட்டியார், எண்டாத்தூர்.

### தென் ஆர்க்காடு மாவட்டம்

திரு ஏ. வி. ஜோதி, காளை. திரு பி. ஞானசேகர முதலியார், வாலாபேட்டை. திரு பொன்னுசாமி கவுண்டர், திருத்துறையூர். திரு ஏ. நடராஜன். குன்னமங்கலம். திரு வாசுதேவ கவுண்டர், திரசு. திரு ஆர். பி. சுப்பையா நாயுடு, ரெங்கநாதபுரம். திரு எல். ராம தாஸ் ரெட்டியார், பேரப்பேரி. திரு பி. ராமசுவாமி நாயுடு, தெற்கு வேலூர், திரு எம். கோபால் கவுண்டர், தேவனூர்.

### மதுரை மாவட்டம்

திரு பி. கருத்தசாமி அம்பலம், ஒத்தவீடு.

### இராமநாதபுரம் மாவட்டம்

திரு ஏ. வெங்கிடசாமி, ஈ. புதுப்பட்டி. திரு டி. அழகிரி ராமாநுஜம், மம்சாபுரம். திரு கே. அரசப்ப தேவர், பனிக்கோட்டை.

### திருநெல்வேலி மாவட்டம்

திரு கே. வி. சீனிவாசன், திரு கே. வி. விசுவநாதன், பாளையங்கோட்டை. திரு எஸ். கே. எஸ். சீனிவாச நாயுடு, சவரிமங்கலம். திரு. ஆர். எம். செல்வபெருமாள் நாயுடு, கடம்பூர். திரு ஏ. ராமலிங்கசாமி நாயக்கர், குள்ளங்காட்டுக்குறிச்சி. திரு கே. சரவணப்பெருமாள் பிள்ளை, புளியங்குளம். திரு எஸ். சென்னி அய்யா தேவர், உமையத்தலைவன்பட்டு. திரு ஏ. சீனிவாசய்ய நாடார், தூத்துக்குடி.

### வட ஆர்க்காடு மாவட்டம்

திரு கே. ஜே. சின்னப்ப ரெட்டியார், சிறுகளம்பூர். திரு எம். ராமசாமி, அகியாந்தல். திரு எம் பாலகிருஷ்ண நாயுடு, நாராயணகுப்பம். திரு கே. ஜி. பன்னீர்செல்வம், திரு கே. ஜி. பாஸ்கரன், (சின்னராஜ்) கெக்கலூர். திரு ஏ. வெங்கடாத்திரி நாயுடு, கொடமிதா. திருமதி பி. டி. கமலம்மாள், பாலூர் திரு குருசாமி, திரு ஜி. மூர்த்தி (மைனர்) கார்டியன் தாயார் திருமதி அலமேலு அம்மாள் நாதரடி. திரு பி. அருணசலம், சோளிங்கர். திரு எம். வடிவேல் முதலியார், தெள்ளார்.

### திருச்சிராப்பள்ளி மாவட்டம்

திரு வி. மாரப்ப கவுண்டர், ராசிபுரம். திரு ஆர். சேஷாத்ரி, கணபதி நகர், அரியமங்கலம். திரு கே. ராமானுஜம், அங்கராயனல்லூர். திரு வி. எஸ். பாலகிருஷ்ணன், கனக்கிள்ளியனல்லூர். திரு சிவசாமி (மைனர்) கார்டியன் தாயார் திருமதி எம். திருப்பாத்தாள், காளிபாளையம். திரு கே. பெரியசாமி கவுண்டர், மோகனூர். திரு ஏ. கே. அப்துல் பஷித், திருச்சிராப்பள்ளி. திரு பி. சுப்பண்ண கவுண்டர், புஞ்சைப்புகழூர். திரு ஆர். வாசுதேவன், மருதூர். திரு ஆர். நாராயணன், புள்ளம்பாடி. திரு ஈ. சீனிவாச ரெட்டியார், வளையம் பட்டி.

### தஞ்சாவூர் மாவட்டம்

திரு பி. வி. ஆபத்சகாய உடையார், நார்த்தன்குடி. திரு ஆர். ராமநாதன், கபிஸ்தலம். திரு எஸ். தேசிகன் மலபுரம், திரு எம். மும்தாஜ், ராஜகிரி. திரு சுப்பிரமணிய தேவர், கிரங்குடி. திரு ஏ. வைத்தியநாத முதலியார், மஞ்சக்கொல்லை. திரு டி. கே. கிருஷ்ண, வங்கரமவாடி. திரு டி. சி. முருகையன், நன்னிலப் பாடி, பாலக்குறிச்சி. திருமதி காளியா சுந்தரத்தம்மாள் பேரளம். திரு வி. கே. ஞானகிராம அய்யர், பூங்குளம். திரு என். சுப்பிரமணியம், மரங்குடி. திரு வி. ராஜ கோபாலன், மஞ்சக்குடி. திரு ஏ. ஆதிமுத்து, சித்தமல்லி. திரு ஜி. சுப்பிரமணியம், மூலங்குடி. திரு ஆர். சுப்பிரமணியம், பூந்தலாங்குடி. திரு செவந்து சேர்வை, திருச்சிற்றம்பலம்.

### சேலம் மாவட்டம்

திரு பி. எஸ். சிவஞானம், புதுப்பட்டி. திரு டி. எம். வரதராஜ் பிள்ளை, தலவாய்ப்பட்டி.

### தர்மபுரி மாவட்டம்

திரு டி. ராமமூர்த்தி, எமக்கால்நத்தம். திரு எந்து செட்டி, பருகூர்.

### கோயமுத்தூர் மாவட்டம்

திரு ஜே. முத்துசாமி, திரு ஆர். நடராஜன், முத்து சமுத்திரம். திரு என். பழனி கவுண்டர், உடையம்பாளையம். திரு கே. நடராஜ கவுண்டர், ஆறுமுககவுண்டனூர். திரு. வி. டி. சங்கர், மேட்டுப்பாளையம். திரு கே. எம். சுப்பிரமணியம், குள்ளம்பாளையம். திரு வி. திருமலைசாமி, உலகாபுரம் திரு ஏ. கே. சுவாமிநாதன் செட்டியார், திரு ஏ. கே. கரும்புசாமி, திரு ஏ. கே. கதிரேசன், வேலம்பாளையம். திரு ஆர். உங்கண்ண கவுடர். நாயக்கன்பாளையம். திரு ஆர். சீனிவாசன், மேட்டுலட்சுமி நாயக்கன்பாளையம் திரு ஜே. எஸ். குருசாமி, திரு ஜே. எஸ். புருஷோத்தமன்லிங்கர்னவூர். திரு ஏ. ஆர். வெங்கடபதி, அருப்பாபட்டி. திரு ஆர் ராமசாமி கவுடர், கோபாலபுரம். மெஸர்ஸ் பாகியதயா பால்பண்ணை (பிரைவேட்) லிமிடெட் உடுமலைபேட்டை. திரு என். பி. சி. ரத்தினவேலு செட்டியார், செட்டிபாளையம்.

## நிர்மாணத் திட்டத்தின் மாண்பு :

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

அச்சமின்மையுடன் இருக்க, திருடாமை, தன்னலமற்ற தன்மை, உழைத்துப் பாடுபடுதல், சுதேசி உணர்வு ஆகிய வற்றை அடிப்படையாகக் கொண்ட சீரிய விரதங்களை ஒவ்வொரு சத்தியாக்கிரஹியும் அனுஷ்டிக்கவேண்டும். ஏழை எளியோரின் கஷ்டங்களைப் பகிர்ந்துகொள்கின்ற அளவுக்கு தன் வாழ்க்கையை வரையறுத்துக்கொள்ளும் பொழுது, ஒரு சத்தியாக்கிரஹி ஆத்மீகத் துறையில் பெரும் வளர்ச்சி பெறுகிறுன்.

### 18 அம்சத் திட்டம்

நிர்மாணத் திட்டத்தை, 1930-ல், காந்திஜி ' தேசியப் படைக்கலன் ' என்று அழைத்தார். " புரட்சிக்கு போர்ப் பயிற்சி எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியம் சத்தியாக்கிரஹத்துக்கு நிர்மாணத் திட்டம் " என்பது இதன் பொருள்.

பலாத்காரமற்ற, சரண்டலில்லாத உண்மையான ஒரு சமுதாயத்தை நிறுவ வேண்டுமென்றுல், கிராம மக்கள் 18 அம்ச வேலைத்திட்டத்தை ஏற்றுச் செயல்புரிந்தாக வேண்டும் என்று காந்திஜி உணர்ந்தார்.

**நிர்மாணத் திட்டத்தின் பதினெட்டு அம்சங்களாவன :**

1. சமூக ஒற்றுமை
2. தீண்டாமை ஒழிப்பு
3. கதர்
4. மதுவிலக்கு
5. மற்ற கிராமக் கைத்தொழில்கள்
6. நயிதலிம் (அல்லது) ஆதாரக் கல்வி
7. கிராமத் துப்புரவு
8. பிற்பட்ட மக்களுக்குச் சேவை
9. மாதர் முன்னேற்றம்
10. சுகாதாரம், துப்பரவு ஆகியவற்றில் பயிற்சி
11. ராஷ்டிர பாஷையை வளர்த்தல்
12. பிரதேச மொழி (தாய்மொழியின்) மீது அன்பு செலுத்துதல்.
13. பொருளாதார சமத்துவத்துக்காகப் பாடுபடுதல்
14. விவசாயி நலன்
15. தொழிலாளர் நலன்
16. மாணவர் நலன்
17. இயற்கை வைத்தியம்
18. குஷ்ட நோய் நிவாரணப் பணிகள்.

### அடிப்படை மாறுதல்

இந்த நிர்மாணத் திட்டத்தின் மூலம், தனி மனிதனை யும், சமுதாயத்தையும் முழுவதும் மாற்றியமைக்க காந்திஜி ஆசைப்பட்டார். பழைய நோக்கு, கருத்து, எண்ணங்கள், வாழ்க்கை முறைகளை வைத்துக்கொண்டே புதிய சமுதாயத்தில் மக்கள் வாழ்ந்தால், அந்தப் புதிய சமுதாயம் இலட்சிய சமுதாயமாக முடியாது. ஆகவே, மகாத்மாவின் நிர்மாணத் திட்டம் சமுதாயத்தையே திருத்தி அமைத்து—நீண்டகாலம் நிலைத்து நிற்கக்கூடிய, பயன்களை அளிக்கக்கூடிய பலமான அடிப்படைகளைக் கொண்டது. அந்தஸ்து, உடமை, வாழ்வு நிலை ஆகிய விஷயங்களில் தனிப்பட்ட மனிதனையும் மட்டுமல்லாமல், சமுதாயத்தையே மாற்றியமைத்து, தனி மனிதனுக்கும் சமுதாயத்துக்கும் இடையே நெருக்கமான பிணைப்பினை ஏற்படுத்துதலை நிர்மாணத் திட்டம் இலட்சியமாகக்கொண் டது. உண்மையான சத்தியாக்கிரஹிகளைக் கொண்ட சமுதாயம்—அச்சமின்மை, எந்தக் கஷ்டத்தையும் தாங்கக் கூடிய உள்ள உறுதி, கடினமான ஒழுங்கு முறையில் அமையப்பெற்ற வாழ்வு நெறி, தன்னைத்தானே பரித்தி யாகம் செய்துகொள்கின்ற தியாக உள்ளம்—ஆகியவற்றை தன்னகத்தே கொண்ட சத்தியாக்கிரஹிகள் அடங்கிய சமுதாயமாகத் திகழவேண்டும். அப்படிப்பட்ட சமுதாயத்தில் ஆசை, அச்சம், சுரண்டல், சுயநலம், ஆகியவற்றிற்கு இடம் இருக்காது. அதற்குப் பதிலாக, அச்சமின்மை, நம்பிக்கை, அன்பு, சகோதரத்துவம், தன்னடக்கம், ஆகியவை மிளிர்ந்து இருக்கும்.

### முழுமையான கிராம சேவை

மகாத்மாவின் நிர்மாணத் திட்டம், உண்மையையும், அகிம்சையையும் ஆயுதங்களாகச் கொண்டு பூர்ண சுதந்திரத்தை உருவாக்கும் திட்டம் என்றும் அழைக்கப் படும். நிர்மாணத் திட்டத்தில் கண்டுள்ள அம்சங்கள் அத்தனையும் ஒன்றேடொன்று இணைந்துள்ளவை. அவை வெற்றி அடைய, ஒவ்வொன்றும் மற்றென்றின்மீது சார்ந்து நிற்கின்றது. இத்திட்டமானது, வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டால், தனி நபரின் தூய வாழ்வு வளர்ச்சி பெறவும், சமுதாயத்தில் தன்னிறைவு நிலவும் படியான ஒரு சூழ்நிலையை உருவாக்கவும் முடியும். அகிம்சையை அடிப்படையாகக் கொண்ட சமுதாய அமைப்பில் அல்லது சர்வோதய சமுதாயத்தில், தனி நபரின் வாழ்வில் எல்லா அம்சங்களிலும் முழுமை பெற்ற வளர்ச்சியைக் காணுவதே, இந்த நிர்மாணத் திட்டத்தின் இலட்சியமாகும். மகாத்மாவின் வார்த்தை களில் சொல்லப்போனுல், "இத் திட்டமானது, முழுமை யான கிராம சேவை என்ற தத்துவத்தை அடிப்படை யாகக் கொண்டு திகழ்கிறது."



# மகாத்மா காந்தி நூற்றாண்டு விழா ஏற்பாடுகள்

காந்திஜி நூற்றாண்டு விழாவில் காந்தி நினைவு நிதியின் பங்கு மிக முக்கியமான தாக இருப்பது இயற்கை.

காந்தி நினைவு நிதி, 1964-ம் ஆண்டிலிருந்து தொடங்கிய ஓர் ஐந்தாண்டுத் திட்டத்தின் அடிப்படையில் செயலாற்றி வருகிறது. விழாத் திட்டத்தை இரண்டு பகுதிகளாகப் பிரித்து, நீண்ட கால வேலைத்திட்டம் 1964-ம் ஆண்டு அக்டோபர் 2-ம் தேதிமுதல் 1970 ஜனவரி முடியவும்; குறுகிய கால வேலைத் திட்டம் அக்டோபர் 2-1969 முதல் 1970 ஜனவரி 30 வரையும் என வகுக்கப்பட்டுள்ளது.

தேசிய அளவிலும், மாநிலங்களிலும், நிறுவனங்கள் வாரியாகவும் ஒருங்கு கூடி இணைந்த திட்டங்களைத் தயாரித்து செயலாற்றி நூற்றாண்டு விழாவைக் கொண்டாட காந்தி நினைவு நிதி விரும்புகிறது.

## திட்ட ஆலோசனைக் கூட்டம்

இவற்றின் அடிப்படையில், தமிழகத்தில் காந்தியடிகள் நூற்றாண்டு விழாத் திட்டம் குறித்து ஆலோசிக்க, 1965 ஜனவரி 1, 2 தேதிகளில் சென்னை காந்தி மன்றத்தில் ஒரு கூட்டம் நடத்தப்பட்டது. அக்கூட்டத்தில் தமிழ் நாட்டிலுள்ள பல்வேறு நிர்மாண ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும், நிர்மாண ஊழியர்களும், அன்பர்களும் கலந்து கொண்டார்கள்.

அக் கூட்டத்தில் கீழ்க் கண்டவாறு நீண்டகால வேலைத் திட்டங்கள் வரையப்பட்டன:

## நீண்டகால வேலைத் திட்டம்

1. நூற்றாண்டு விழா ஏற்பாடுகளைச் செய்வதற்காக நூற்றாண்டு விழாக் குழுக்களை மாநில அளவில், மாவட்ட அளவில், தாலுகா அளவில் முக்கிய நகரங்களில் முடிந்தால், கிராமந்தோறும் அமைப்பது.

2. கிராமந்தோறும் காந்திய—சர்வோதய கருத்துக்களைப் பரப்புவதற்கும் நூற்றாண்டு விழாவைப் பரவலாகக் கொண்டாடுவதற்கும் ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் இரண்டு தொண்டர்களையாவது கிடைக்க ஏற்பாடு செய்தல்.

3. நிர்மாணப் பணிகள் சிலவற்றிற்குத் தமிழ் நாட்டில் சங்கங்கள் இல்லை. முக்கியமாக, இயற்கை வைத்தியம், முதியோர் கல்வி போன்றவற்றிற்கு மாநிலச் சங்கங்கள் ஏற்படுத்துவது.

4. கிராமதானம், கதர், சாந்திசேனை என்கிற மும்முனைத் திட்டச் செய்தியை நாடெங்கும் பரப்புதல்.

5. சென்னையில் ஒரு முக்கிய இடத்தில் காந்திஜி ஞாபகார்த்த நிலையம் கட்ட வேண்டும். இங்கு, நிதியின் எல்லாவித வேலைகளுடன் பொருட்காட்சியும் இருக்கும்.

6. காந்திஜி நூற்றாண்டு விழாவின்போது, விசேஷ ஞாபகார்த்த மலர் ஒன்று வெளியிடுதல்.

7. பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் மாணவர்கள் காந்திஜி நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதற்குச் சௌகரியமாகக் கீழ்க்கண்ட புத்தகங்களை முன்னதாக வெளியிடவேண்டும்.

(அ) காந்திஜியின் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களை விளக்குகின்ற மாதிரியில் ஓரங்க நாடகங்கள்.

(ஆ) காந்திஜீயின் வாழ்க்கைச் சம்பவங்களைக் குறிக்கக் கூடிய நாடகம்.

(இ) மாணவர்கள் ஞாபகத்தில்வைத்து விழாவின் போது ஒப்புவிக்கக்கூடிய மாதிரியில் இருக்கும் காந்திஜியின் பேச்சுக்கள்.

8. கல்லூரி மாணவர்கள் தங்கி காந்தியத்தைப் படித்து ஆராய்ச்சி செய்வதற்குத் தகுந்த முறையில் கோவை சர்வோதய நிலையத்தை வளர்ச்சியடையச்செய்தல்.

9. ஜில்லாவின் தலைமையாக உள்ள இடங்களில் காந்தி இலக்கியக் கழகம் இருக்கிற மாதிரி நிதி வெளியீட்டுப் பிரிவை அபிவிருத்தி செய்தல்.

---

1969-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ம் தேதி காந்தியடிகள் பிறந்த நாள் நூற்றாண்டு விழா உலகத்தின் பல பகுதிகளில் கொண்டாடப்படும். நமது நாட்டிலும் இவ்விழாவிற்கான ஏற்பாடுகள் தொடங்கியிருக்கின்றன.

காந்தியடிகளின் பிறந்த நாள் நூற்றாண்டு விழா ஆர்ப்பாட்டம் நிறைந்த கண்ணைப் பறிக்கும் வெற்று விழாவாக அமைந்துவிடக் கூடாது. இவ்விழா மகாத்மாவின் புகழ் பாடுதலோடு நின்றுலும் பயன் இல்லை. இந்நூற்றாண்டு விழா, கடினஉழைப்பிற்குஓர் அறைகூவலாகும். காந்தியடிகள் என்ன இலட்சியத்திற்காக-என்ன என்ன கொள்கைகளுக்காக உழைத்து மறைந்தார் என்பதை உணர்ந்து, நாமும் அவற்றிற்காக உழைக்கவும், நமது வாழ்வை அந்தப் பணியில் அர்ப்பணித்துக் கொள்ளவுமே, இவ்விழாவை உயரிய முறையில் கொண்டாட வேண்டும்.

---

10. காந்தியடிகளின் வாழ்க்கையை விளக்கிச் சித்தரிக்கும் சிறந்த நாடகம், கவிதை ஆகியவற்றை எழுதுபவர்களுக்கு ரூ. 10,000 முதல் ரூ. 15,000 வரை பரிசு அளித்தல்.

11. சுவாமி விவேகானந்தர் நூற்றாண்டு விழா சமயத்தில் வெளியிட்டமாதிரி, காந்தியடிகளின் படங்களும் பொன்மொழிகளும் அடங்கிய உயர்தர பதிப்புக்களை மிக மலிவான விலையில் லட்சக்கணக்கான பிரதிகள் அச்சடித்து விற்றல்.

**குறுகிய கால செயல் திட்டம்**

1. காந்திஜி நூற்றாண்டு விழாவின்போது ஜில்லா, தாலுகா, பிளாக் இவைகளின் தலைமையிடங்களில் காந்தி பொருட்காட்சிகளை நடத்துதல்.

2. அந்தக் குறிப்பிட்ட வட்டாரத்தில் ஏக காலத்தில் எத்தனை அதிக இடங்களில முடியுமோ, அங்கெல்லாம் காந்தி மேளாக்கள் நடத்துதல்.

3. ஜில்லா தலைமை இடங்களில் அந்த வருடத்தில் ஒன்றன்பின் ஒன்றாக மகாநாடுகள் நடத்துதல்.

4. கால அட்டவணைப் பிரகாரம் கதாகாலட்சேபம், வில்லுப்பாட்டு, நாடகங்கள் முதலியனவற்றை ஆங்காங்கே நடத்துதல்.

5. பள்ளிகளில்—கல்லூரிகளில் ஜில்லா, மாநில அளவில் போட்டிகள் நடத்துதல்.

6. 1969-க்கு முன், குறைந்தது 1,000 காந்தி மன்றங்கள் ஏற்படுத்தி இந்த மன்றங்களின் பிரதிநிதிகள் அடங்கிய மாநாடு ஒன்றை 1969-ல் சென்னையில் நடத்துதல்.

7. மாநிலத்தில் ஏதாவதொரு நிர்மாண வேலை நடைபெறும் கேந்திரத்தில் நிர்மாண ஊழியர்கள் கன்வென்ஷன் ஒன்றை ஒரு வாரத்திற்கு நடத்துதல்.

**நிர்மாண ஊழியர் மகாநாடு**

தமிழ்நாட்டிலுள்ள காந்திய நிர்மாண ஸ்தாபனங்கள் மற்றும் நிர்மாண ஊழியர்கள் அனைவரும் பங்கெடுத்துக் கொள்ளும்படியான பெரியதொரு மகாநாடு ஒன்று நடத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

காந்தியடிகள் நூற்றாண்டு விழா நம் ஒவ்வொருவருக்கும் நமது பங்கைச் செலுத்த ஒரு நல்ல வாய்ப்பு. நூற்றாண்டு விழா வருவதற்கு முன்,நாம்ஒவ்வொருவரும் அயராது உழைத்து காந்தியதிட்டங்களை நிறைவேற்றுவதில் நல்ல முன்னேற்றம் காண வேண்டும். வெற்றி உணர்வோடும், புதிய நம்பிக்கையோடும், புத்தொளியோடும் அத்திருநாளை நாம் அனைவரும் வரவேற்போம்.

[தமிழ்நாடு காந்தி நினைவு நிதியின் (மதுரை) வெளியீடு ஒன்றின் சாரம்]

# கவிதை




[திரு வெ. குருசாமி, சென்னை-9]

கடன்தொல்லை ! நோய்த்தொல்லை ! கட்சி பேசிக்
கருத்தொவ்வாச் சச்சரவு ! பேதத் தொல்லை !
படும்பாட்டின் பலன்கொள்ள முடியாத் தொல்லை,
பண்ணையாள்—முதலாளி பங்குத் தொல்லை·

உடன்பிறந்தார் தம்முள்ளும் போட்டித் தொல்லை·
ஒவ்வாத சாதி மதக் கீழ்மேல்த் தொல்லை.
குடும்பங்கள் அணிஅணியாய்த் தொல்லைக் கஞ்சிக்
குடிபெயர்ந்து நகரத்திற் குவிதல் நோயே.

தீராத நோயில்லை. அண்ணல் காந்திச்
செந்நெறியில் தோல்வியில்லை ; சாதி பேதம்
பாராமல் ஒருதாயின் மக்கள் போலே
பாடுபடக் கூட்டுறவு ! பாலர் எல்லாம்

சோராமல் அறிவமுதம் அள்ளி உண்ணச்
சுவடிதரும் உணவுபெறப் பள்ளி. நோய்கள்
வாராமல் வளந்தேக்கும் இல்லம் ! வீதி
வழியெல்லாம் சுடர்வீசும் கிராமம் காண்போம்.

நலிவகல இன்றேநாம் மருந்து காண்போம்.
நாசத்தை வருமுன்னே தடுத்து நிற்போம்.
கலிதீர உணவூற்றின் தூர் எடுப்போம்.
காந்திசொன்ன கிராமநலத் திட்டம் ஏற்போம்.

சலியாத உழைப்பாலே சமைப்போம் வாழ்வு.
தாய்நாட்டின் சுதந்தரநாள் நம்மனோர்க்கு
வலிவூட்டி நினைவூட்ட வந்த நன்னாள்
மங்கலநாள் ! கிராமநலம் வளர்ப்போம் ! வாரீர்.




ஜபல்பூரிலிருந்து மிராஜ்பூர் போகும் சாலையில் 20-வது மைலிலுள்ள சிறிய கிராமம் தான் 'கோசால்பூர்.' இச் சிறிய கிராமம் மாவட்ட நிலையில், மிகச் சிறந்த கிராமம் என்று தெரிந்தெடுக்கப்பட்டு, மத்தியப் பிரதேச அரசாங்கத்தால் ரூ. 1,000 பரிசளிக்கப்பட்டுள்ளது.

சுயநலம் கருதாது, தளராமல் உழைக்கும் பஞ்சாயத்து உறுப்பினர்களுடன் மக்களின் ஒத்துழைப்பும் ஒன்று சேரும்போது இந்தியக் கிராமங்கள் வெகுவாக முன்னேற வாய்ப்பிருக்கிறது என்பதற்கு கோசால்பூர் கிராமம் ஒரு சிறந்த முன்மாதிரி. கோசால்பூர் கிராமம் வகுத்துள்ள பாதையை இந்திய கிராமங்கள் பின்பற்றினால் நம் நாட்டின் கிராமப்புற நிலையே அடியோடு மாறிவிடும்.

**உள்ளங்கை நெல்லிக்கனி**

கோசால்பூர் கிராமத்தின் மொத்த மக்கள் தொகை 1,874; இங்குள்ள குடும்பங்களின் எண்ணிக்கை 470 ஆகும். மேலோட்டமாக இக்கிராமத்தைப் பார்க்கும்போது இங்கு நடந்தேறியுள்ள வேலைகளைக் காண முடியாது.

ஆனால் பொறுமையுடன் நேரத்தையும் செலவழித்து பார்க்கும்போது தான், கோசால்பூர் ஆற்றியுள்ள அரும் பணிகள் தெள்ளெனத் தெரியும். இன்றைய கோசால்பூரை விட, இன்னும் அழகிய, செழிப்பான ஒரு கோசால்பூரை, தங்கள் சந்ததியினருக்கு விட்டுச் செல்ல, இவர்கள் அரும்பாடுபட்டு வருகிறார்கள்.

இக்கிராமத்தின் பஞ்சாயத்து தலைவர் திரு தீப்சாந்த் நாய்க் என்பவர். இவரன்றி பஞ்சாயத்து உறுப்பினர்கள் 6 பேர்களிருக்கின்றனர். இந்த அறுவரில் 2 பேர் பெண்கள், 2 பேர் மலைவாசி மக்கள் ஜாதியைச் சேர்ந்தவர்கள்; எஞ்சிய இருவர் ஹரிஜனங்கள். எனவே முக்கியமான எல்லா ஜாதியினரும் பஞ்சாயத்தில் பிரதிநிதித்துவம் பெற்றுள்ளனர். பஞ்சாயத்து தீர்மானங்களெல்லாம் ஏகமனதாகவே நிறைவேற்றப்படுவதால், எல்லா காரியங்களும் ஒழுங்காக, திறமையாக நடைபெற்று வருகிறது,

**வேளாண்மை**

விவசாயம் தான் இங்கு முக்கிய தொழில். பழங்கால முறைகள் எல்லாம் கைவிடப்பட்டு, புதிய வழிகளில் வேளாண்மை செய்யப்பட்டு வருகிறது. சுருங்கக் கூறின், பொறுக்கு விதைகள், ரசாயன உரங்கள் கிருமி நாசினிகள், போன்றவற்றிற்கு இங்கு ஏகப்பட்ட கிராக்கி யேற்பட்டுள்ளது. இந்த ஆண்டில் மட்டும் 10 டன் சூபர் பாஸ்பேட் வயலில் போடப்பட்டிருக்கிறது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! இதுவன்றி வயலின் செழிப்பை மேலும், பெருக்க 100 வண்டிச் சுமை 'கம்போஸ்ட்' உரமும் போடப்பட்டுள்ளது; 73 'கம்போஸ்ட்' குழிகளும் வெட்டப்பட்டுள்ளன.

கிராமத்திலுள்ள இரு கூட்டுறவுச் சங்கங்களும் விவசாயிகளுக்கு நவீன கருவிகளை வாடகைக்கு விடுகின்றன. இச்சங்கங்கள் அவற்றின் துவக்கத்திலிருந்தே செம்மையாக செயலாற்றி வருகின்றன. இவ்விரண்டில் ஒன்று, சேவைக் கூட்டுறவுச் சங்கமாகும். இதில் 150 உறுப்பினர்கள் இருக்கிறார்கள்; மூலதனம் ரூ. 20,000. நடப்பு ஆண்டில் விவசாயிகளுக்கு ரூ. 15,000 வரை கடன் வழங்கப்பட்டுள்ளது. உரங்களை வழங்குவதில் இதுதான் அந்த வட்டாரத்திலேயே சிறந்த கூட்டுறவுச் சங்கம் என்று சென்ற ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. சர்க்கரை, உணவு தானியங்களையும் இச்சங்கம் நியாய விலையில் விற்கிறது. ரூ 12,000 செலவில் இதற்கென ஒரு சொந்தக் கட்டிடமும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

கோழிப் பண்ணையைப் பிரபலமாக்குவதில் பஞ்சாயத்து மிகுந்த அக்கறைக் காட்டி வருகிறது. 100 பறவைகள் கொண்ட ஒரு கோழிப்பண்ணை இங்கு இருக்கிறது. இதற்கென ரூ. 2,500 செலவில் ஒரு 'ஷெட்' கட்டப்பட்டுள்ளது.

**முதியோர் கல்வி**

அறியாமையை அறவே அகற்ற கோசால்பூர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் போற்றுதற்குரியவை. இங்கு ஓர் உயர்தர பள்ளி, இரண்டு துவக்கப்பள்ளிகள் ஒரு பாலர் பள்ளி இருக்கின்றன. கட்டிடங்களைக் கட்ட மக்கள் தாராளமாக பொருளுதவி செய்திருப்பதுடன் தாங்களாகவே முன்வந்து சிரமதானமும் அளித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். முதியோர்கள் கல்வி கற்பதற்காக இங்கு ஓர் இரவுப் பள்ளியும் ஒழுங்காக நடந்து வருகிறது.

**புகையா அடுப்பு**

பஞ்சாயத்து ஒரு நூலகத்தை துவக்கியிருப்பதுடன், வானொலிப் பெட்டியையும் வாங்கி, மனமகிழ் மன்றத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.

புகையாத அடுப்புகள் 48 குடும்பங்களில் உள்ளன. தெருக்களெல்லாம் பளிச்சென்று சுத்தமாக இருக்கின்றன. குடிதண்ணீருக்காக இரு கிணறுகள் தோண்டப்பட்டு, அவற்றில் குழாய்க் கிணறுக்குள்ள வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இக்கிராமத்தில் ஒரு சிறிய மருத்துவமனையும், குழந்தை, குடும்பக் கட்டுப்பாடு நிலையமும் இருக்கின்றன. குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் பஞ்சாயத்து நல்ல ஆர்வம் காட்டிவருகிறது.

கோசால்பூர் நாளுக்கு நாள் வெகுவாக முன்னேறி வருகிறது. "தன் கையே தனக்குதவி" என்ற சித்தாந்தத்தை நன்குணர்ந்துள்ள இம் மக்களுக்கு, உலகில் நடக்காது எதுவுமேயில்லையெனலாம்.



# உர்சாகத்தோடு உழைப்பு

**"தன் கையே தனக்கு உதவி" என்பதில் நம்பிக்கைகொண்டு, விடா முயற்சியுடன் செயலில் முனைந்தால்தான் பேரும் புகழும், பயனும் கிடைக்கும் என்பதை, மத்தியப் பிரதேசத்திலுள்ள அர்வாலியா என்ற சிறிய கிராமம் நமக்கு எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. அர்வாலியா கிராமத்தையே ஒரு முன்மாதிரியாகக் கொண்டு, ஏனைய கிராமங்களும் உழைக்க முன்வரின், இந்தியாவின் கிராமப்புற சூழ்நிலையே அடியோடு மாறிவிடும். சுருங்கக் கூறின் அர்வாலியாவின் கதை, ஒரு காற்று விசையாலை (Windmill)–யின் கதையேயாகும்.**

இந்த உணர்வு அர்வாலியா மக்களுக்கு எப்போது ஏற்பட்டது ? எப்படி ஏற்பட்டது ? அயல்நாட்டுத் தொண்டர்களில் சிலர், நம் நாட்டு வளர்ச்சி வேலைகள் நிமித்தம், அவ்வூருக்கு வந்தபோது தான், இக்கதையே உருவாயிற்று என்று கூறலாம்.

இது நடந்தது 1964-ம் ஆண்டில் தான். அப்போது அமெரிக்க சமாதான படையைச் சார்ந்த திரு கிரேண்ட் என்பவர் இங்கு அடிக்கடி செல்வது வழக்கம் ; சிறிய அளவில் ஒரு கோழிப்பண்ணையை துவக்குவதற்குப் போதிய பயிற்சி அளிக்கவே, இவர் அடிக்கடி அங்கு சென்றுகொண்டிருந்தார். ஒரு சமயம், பஞ்சாயத்து அலுவலகத்திற்கு அவர் சென்றபோது, அங்கே மொட்டை மாடியில் சில இரும்புத் துண்டுகள், காற்றுடிகளின் இலைகள் போன்ற வேறு பல சாமான்களும் துருப்பிடித்துக் கிடப்பதைக் கண்டார். உடனே அவருடைய கவனம் அவற்றின்மீது பாய்ந்தது. உற்சாகத்தோடு அவற்றை ஆராய்ந்தார். அவையெல்லாம் ஒரு 'காற்று விசையாலையின் (wind mill) முக்கியமான பாகங்களே என்பதைக் கண்டார்.

### உழைப்பு ஆரம்பம்

அச்சமயம் வேறு இரு வெளிநாட்டுத் தொண்டர்களும், போப்பாலில் பணியாற்றி வந்தனர். போபால் இங்கிருந்து 10 கிலோ மீட்டர் தூரத்தில் தான் இருக்கிறது. திரு கைக் மேக்–இண்டயர், (Mr. Kike Mac–Intyre) திரு. ஃபில் லெபர் (Mr. Phil Leber) என்ற அவ்விருவர்களும் ஆசிரியர்கள். அவர்களை திரு கிரேண்ட் அணுகி, காற்று விசையாலையைப்பற்றி விவாதித்தார். இந்த மூவருக்கும் இது ஒரு சவால் போலத்தான்; ஏனெனில் இம்மூவரில் ஒருவர் கூட பொறியாளரும் அல்ல; அல்லது ஆலையைப் பொருத்தத் தெரிந்தவர்களும் அல்ல ; இன்னும் சொல்லப் போனால், இவர்கள் ஒரு காற்று விசையாலையைக் கூட நேரில் பார்த்தது கிடையாது.


பஞ்சாயத்து அலுவலகத்தில் துருப்பிடித்துக் கிடந்த, காற்று விசையாலையின் பாகங்களையெல்லாம் வெளிக் கொணர்ந்து, அவற்றை பூட்டும் வேலையைத் துவக்கியபோது தான், வேறு பல உதிரி பாகங்கள் காணவில்லை என்பது தெரியவந்தது. அவையெல்லாம் கிராமத்திலுள்ள பல வீடுகளிலும் இருந்தன. அவை பல விதங்களில் வீட்டுக் காரியங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டுவந்தன. மிகுந்த சிரமத்தின் பேரில் அவையெல்லாம் பெறப்பப்பட்டு சரி பார்த்ததில், மறைகளும் சுறைகளும் தவிர, மற்ற எல்லாப் பொருட்களும் சரியாகவே இருந்தன.

### நன்கொடை

இதற்கிடையில் ஆங்கிலேய உற்பத்தியாளர்களுக்கும், டில்லியிலுள்ள பிரிட்டிஷ் ஹைகமிஷனருக்கும் தொண்டர்கள் கடிதங்கள் எழுதி, எவ்வாறு காற்று விசையாலையைப் பொருத்துவது என்பது பற்றி தெரிந்துகொண்டனர். எனவே இப்போது ஆலைக்குரிய எல்லாப் பாகங்களும், அதை அமைக்கும் விதமும் தெரிந்து விட்டது ; ஆனால் அதற்கு அடிக்கல் நாட்டி வேலையைத் துவங்குவதற்குத் தான் பண வசதியில்லை. என்ன செய்வது ? புது டில்லியிலுள்ள சமாதானப்படை அலுவலகம் இச்செலவினங்களுக்காக் ரூ. 1,000

நன்கொடையளித்து உதவியது. பிறகு கேட்கவும் வேண்டுமோ? வேலை முழு மூச்சுடன் துவங்கியது.

கிராம வாசிகளிடையே புத்துணர்வும், புது வேகமும் காட்டுத் தீ போல் பரவியது. இதற்கு முக்கிய காரணமாக இருந்தவர்கள் இந்த மூன்று சமாதான படைத் தொண்டர்களேயாவர். வெயிலின் கொடுமையிலிருந்து தங்களைக் காத்துக்கொள்வதற்குக் கூட, அவர்கள் தங்களுக்கென ஒரு குடிசைக் கட்டிக்கொள்ளவில்லை. இரண்டே வாரங்கள் தானாயிற்று. அதற்குள் கிணற்று மட்டத்திலிருந்து 40 அடி உயரத்திற்கு "டவர்" உயர்ந்துவிட்டது. தண்ணீர்த் தொட்டியைக் கட்டுவதற்காக, வட்டார வளர்ச்சி அலுவலகம் ரூ. 400 மானியம் அளித்தது.



### விடாமுயற்சி

இதற்குப் பிறகு தான், ஒரு பெரிய இன்னல் ஏற்பட்டது. 'டவரி'ன் உச்சியில் இயந்திரங்களைக் கொண்டுபோய் அங்கே அவற்றைப் பொருத்தவேண்டும். உச்சி வரைக்கும் சாளரங்கள் அமைக்கப்பட்டன. ஆனால் இதில் இருவர் தான் நின்றுகொண்டு வேலை செய்யமுடியும். ஆனால் மேலே பொருத்த வேண்டிய பாகத்தின் எடையோ 40 பவுண்டுகள். அதையும் ஒரு வழுவழுப்பான இடத்தில் பொருத்தவேண்டும்! இதோடல்லாமல் மற்றொரு கனமான சக்கரத்தையும் அவ்வளவு உயரத்திற்கு கொண்டுபோய் அதையும் அங்கே மாட்டவேண்டும்.

விடா முயற்சியுடன் தீவிரமாக உழைத்து, எப்படியோ காரியத்தை முடித்து விட்டனர் தொண்டர்கள். சென்ற ஆண்டு நவம்பரில்தான் வேலை முடிவுற்றது.

அர்வாலியா கிராமத்திலுள்ள காற்று விசையாலை தண்ணீரை இறைத்துக் கொட்டியபோது, அவ்வூரே ஒரு விழாக்கோலம் கொண்டிருந்தது. இவ்வாலையைப்பற்றிக் கேள்வியுற்ற பக்கத்து கிராமவாசிகள் எல்லோரும், இத் தொண்டர்களைப் பேட்டி காண வந்துகொண்டேயிருக்கின்றனர். அவரவர்கள் ஊர்களிலும் காற்றுவிசையாலைகளை அமைத்துத் தருமாறு இவர்கள் வேண்டிக்கொள்கின்றனர். இதனால் போபாலிலுள்ள மற்ற வெளிநாட்டுத் தொண்டர்களும் இந்த மூன்று தொண்டர்களுடன் சேர்ந்து பணியாற்றி வருகின்றனர். திருவாளர்கள் நிக்பால்ட்வின் (Mr. Nick Baldwin, பிரென்டா பீச்சி (Mr. Brenda Beachy), பார்பரா ஃபால்க்னர் (Mr. Barbara Falkner), லோயல் பரேசா (Mr. Lowel Paresa) போன்ற முக்கிய தொண்டர்களெல்லாம் அவரவர்களின் கல்வி போதித்தல், கோழிப்பண்ணை அமைத்தல், ஆதார சுகாதார நிலையங்களில் உதவி செய்தல் போன்ற வேலைகளைச் செய்து முடித்த பிறகு, தங்களின் எஞ்சிய நேரங்களை, காற்று விசையாலைகளைப் பொறுத்துவதில் பயனுறச் செலவழித்து வருகின்றனர். கொண்டாமா கிராமத்தில் அநேகமாக வேலை முடிந்து விட்டதென்றே கூறலாம்; ராய்ப்பூர், ஆச்சபூர் என்ற இரு கிராமங்கள், போட்டி போட்டுக்கொண்டு திட்டத்தை நிறைவேற்றி வருகின்றன.

இப்போது ஆர்வாலியா கிராமத்தில், எதையும் தாங்களே செய்து முடித்துக்கொள்ள வேண்டுமென்ற ஒரு புது வேகம் பிறந்திருக்கிறது; அதற்காக உதவி செய்ய தொண்டர்கள் எப்போதும் காத்திருக்கிறார்கள்.

## திட்ட இலக்கிற்குமேல் 7,094 குழாய்க்கிணறுகள்

உத்தரப்பிரதேசத்திலுள்ள சர்க்கரை ஆலைகள் பகுதிகளில், 17,094 குழாய்க்கிணறுகள் மூன்றாவது திட்டக்காலத்தில் கட்டி முடிக்கப்பட்டன. கரும்பு வளர்ச்சித்துறையின் உதவியைக்கொண்டு கரும்புவளர்ச்சி மன்றங்கள், யூனியன்கள் இத்திட்டத்தை நிறைவேற்றி வைத்தன.

திட்டக்காலத்தில் கட்டி முடிக்கவேண்டிய இலக்கு 10,000 கிணறுகள் மட்டுமே.

மூன்றாவது திட்டக்காலத்தின், கடைசியாண்டான சென்ற ஆண்டுமட்டும் 6,608 குழாய்க்கிணறுகள் கட்டப்பட்டன.

கரும்பு உற்பத்தி, உணவு தானிய உற்பத்திப் பெருக்கத்திற்கு, இக்குழாய்க் கிணறுகள் பெரிதும் பயன்படுகின்றன.

# அழகிய சான்று

குண்டூர் மாவட்டத்திலுள்ள வேட்டபாலம் பஞ்சாயத்து யூனியன், 1964-65-ம் ஆண்டு ஒரு சிறந்த யூனியன் என்று தெரிந்தெடுக்கப் பட்டு, மாவட்ட அளவில் பரிசளிக்கப் பட்டுள்ளது. இதனுடைய புகழுக்கு, பரிசுக்கு முக்கிய காரணமாக அமைந்தவர்கள் அதனுடைய தலைவரும், அவரைச் சார்ந்த இதர தொண்டர்களுமேயாவர். இப்பஞ்சா யத்து யூனியன் தலைவர், திரு ரொண்டா ராமசாமி ரெட்டி.

இப் பஞ்சாயத்து சமிதியில், அதாவது பஞ்சாயத்து யூனியனில் 35 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. 1,25,548 ஏக்கர்களைக் கொண்ட இப் பஞ்சாயத்து யூனியனின் மொத்த மக்கள் தொகை 1,43,248 ஆகும். விவசாயம்தான் இங்குள்ளவர்களின் முக்கிய தொழில். இருப்பினும், சிலர் பீடி, அகர்பத்தி, தீப்பெட்டி தயாரித்தல் போன்ற தொழில் களிலும் ஈடுபட்டு வாழ்க்கையை நடத்தி வருகின்றனர்.

### மீனளம்—ஒரு நல்ல வருவாய்

பஞ்சாயத்து யூனியனிலுள்ள மொத்த நிலப்பரப்பான 1,25,548 ஏக்கர்களில் 70,060 ஏக்கர்களில் விவசாயம் நடைபெற்று வருகிறது. 67,340 ஏக்கர்களுக்கு போதிய நீர்ப் பாசன வசதியிருக்கிறது. இங்கு பக்கிங்ஹாம் கால்வாய்தான் முக்கிய நீர்ப்பாசன ஆதாரமாகும். தொட்ட வாரிப்பாலம் பாசனத் திட்டம், எம்மி லேறு பாசனத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப் பட்டு வருவதால், நெல் விளைச்சல் அமோகமாக பெருகி வருகிறது.

தீவிர விவசாய அபிவிருத்தித் திட்டமும் இங்கு செயல்பட்டு வருகிறது. விவசாயிகளின் தேவை களெல்லாம் குறித்த காலத்தில் பூர்த்தி செய்யப்படுகின்றன. நடப்பு ஆண்டில் 485 மூட்டை பொறுக்கு விதைகளும், 3,712 மெட்ரிக் டன் ரசாயன உரங்களும் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளன. தீவிர உரத் திட்டத்தின் கீழ் இதுவரை ரூ. 36,400 கடன் வழங்கப்பட்டிருக்கிறது. நிலச் சீர்திருத்தத்திற்காக ரூ. 3,03,940 ஒதுக்கப்பட்டுள்ளது.

வேடப்பாலம் பஞ்சாயத்து யூனியன் மீனளத் துறையில், பெரும் கவனம் செலுத்தி, பொருளீட்டி வருகிறது. 1963-ம் ஆண்டில் துவக்கப்பட்ட தீவிர மீனளத் திட்டம், இப்போது எல்லா நீர்நிலைகளிலும் அமுலாக்கப் பட்டு வருகிறது. கரைபோர மீனவர்கள், சாதனங்களை வாங்கிக் கொள்வதற்காக கடன் வசதி செய்யப் பட்டுள்ளது. 'நைலான்' மீன்வலைகள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. நூல்வலைகளும், சகாய விலையில் அளிக்கப்படுகின்றன.

கல்வித் துறையிலும் வேடப்பாலம் பஞ்சாயத்து யூனியன் பின்தங்கி விடவில்லை. இந்த யூனியனில் 157 ஆரம்பப் பள்ளிகள் இருக்கின்றன. பள்ளிகளுக்காக 17 கட்டிடங்களை, யூனியன் கட்டிமுடித்துள்ளது. அறியாமையிலும், தேவைகளிலும் உழன்று இன்னலுராதவகையில் தங்கள் குழந்தைகளின் வருங்காலம் செழிப்புற்று இருக்கவேண்டுமென் பதற்காக வேடப்பாலம் மக்கள் எதையும் செய்யத் தயாராகி, அதற் கேற்ப ஆவன செய்து வருகின்றனர்.

### இளைஞர் மன்றங்கள்

இங்குள்ள 48 பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள், யூனியனின் எல்லா பிரதேசங்களிலும் பணியாற்றி வருகின்றன. மலகுண்டா என்ற கிராமத்தில் ஒரு கூட்டுறவு விவசாயப் பண்ணை கூட இருக்கிறது.

எல்லா கிராமங்களிலும் குடி தண்ணீர் வசதி செய்யப்பட்டுள்ளது. அனேகமாக எல்லா கிராமங்களிலும் மின்சார வசதியிருக்கிறதென்றே கூறலாம். பஞ்சாயத்து ஆட்சியின் வளர்ச்சியில் நம்பிக்கைகொண்டு இளைஞர்கள் பெரும் பங்கேற்று மக்களுக்காக உழைக்கவேண்டும் என்ற அறைகூவலின் பேரில், 42 இளைஞர் மன்றங்கள் தோன்றி யுள்ளன. கோழிப்பண்ணை, சமை யலுக்கான காய்கறித் தோட்டம், சமூகநலக் காரியங்கள் போன்ற வற்றில் இவ்விளைஞர் மன்றங்கள் விசேஷமாக பணியாற்றியுள்ளன. வளர்ச்சித் திட்டங்களில் பெண்களும் பங்கு கொண்டு, கார்லபாலம் என்ற கிராமத்தில் ஒரு பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்தி யுள்ளனர். எல்லா பஞ்சாயத்துக் களுக்கும் வானொலிப் பெட்டிகள் அளிக்கப்பட்டுள்ளன. எல்லா கிராமங்களிலும் கிராம வானொலி மன்றம் நிறுவப்பட்டுள்ளது.

### அழகிய சான்று....

இவ்வாறாக, வேடப்பாலம் பஞ்சா யத்து சமிதி பல்வேறு துறைகளிலும் வெகுவாக முன்னேறி வருகிறது. நாட்டிலுள்ள பிற பஞ்சாயத்து யூனியன்களுக்கும், இது ஒரு முன்னோடியாக பணியாற்றி வருகிறது. தகுதி வாய்ந்த தலைமை, மக்க ளிடையே உண்மையான உழைப் பிருந்தால், இந்தியாவின் கிராமச் சூழ்நிலையே அடியோடு மாறிவிடும் என்பதற்கு வேடப்பாலம் ஓர் அழகிய சான்றாகும்.

# ஐந்தாண்டுத் திட்டங்களின் முக்கிய அம்சங்கள்

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நகல் வடிவத்தில் பிரசுரிக்கப் பட்டுள்ள விவரங்கள் சிலவற்றின் சுருக்கம் இங்கே கொடுக்கப் பட்டுள்ளது:—

1951-ம் ஆண்டிலிருந்து நிறைவேற்றப்பட்டு வந்துள்ள ஐந்தாண்டுத் திட்டங்களின்போது ஏற்பட்டுள்ள முன்னேற்றம், நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் குறியளவுகள் ஆகியவை பற்றிய பரிசிலனையானது, தேசிய வாழ்க்கையின் பல்வேறு பிரிவுகளில் ஏற்பட்டுள்ள திட்ட சாதனைகளை எடுத்துக் காட்டுகிறது.

பதினைந்தாண்டுகளாக நிறைவேறி வந்துள்ள திட்ட நடவடிக்கைகளின் பலனாக சாதாரண மக்களின் வாழ்க்கைத் தரம் எந்த அளவுக்கு அபிவிருத்தி யடைந்துள்ளது, இந்த முக்கிய கேள்விக்குப், இங்கே கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் பதிலளிக்கும்.

1960-61 விலைகளின்படி, நபர் விகித வருமானம் ரூ. 275–லிருந்து ரூ. 325 ஆக அதிகரித் திருக்கிறது. நான்காவது திட்ட இறுதியில், இது ரூ. 417 வரை உயரும்.

சென்ற பதினைந்தாண்டு காலத்தில் மொத்தம் சுமார் 2 கோடியே 80 லட்சம் புதிய வேலைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நான்காவது திட்ட காலத்தில், மேலும் ஒரு கோடியே 90 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மக்களின் வாழ்நாள் 32 ஆண்டிலிருந்து 50 ஆண்டுகளாக உயர்ந்திருக்கிறது. இப்போது 52,300 கிராமங்களுக்கும் சிறிய ஊர்களுக்கும் மின்வசதி அளிக்கப்பட்டிருக்கிறது; 1950-51ல் இந்த எண்ணிக்கை 3,700–ஆகத்தான் இருந்தது. நான்காவது திட்ட காலத்தில் மேலும் 57,700–கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் மின்வசதி அளிக்கப்படும்.

கிராமங்களில் மொத்தம் ஏழு லட்சம் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. மொத்தம் 17,000 கிராமங்களுக்குக் குழாய்கள் மூலமாக, குடிதண்ணீர் சப்ளை செய்யப்பட்டு வருகிறது.

## அறிவை வளர்க்கும் திருப்பணி

பள்ளிக்கூடங்களில் படிக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை இரண்டு கோடியே எண்பது லட்சமாக அதிகரித்திருக்கிறது; 1970–71 வாக்கில் இது ஒன்பது கோடியே எழுபத்தைந்து லட்சத்தை எட்டிவிடும். கல்லூரி மாணவர்களின் எண்ணிக்கை 3 லட்சத்திலிருந்து 11 லட்சமாக அதிகரித்திருக்கிறது.

இப்போது இந்நாட்டில் ஆண்டொன்றுக்கு 17,00,000 சைகிள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன; 15 ஆண்டுகட்கு முன்பு 99,000 சைக்கிள்களே உற்பத்தி செய்யப்பட்டன. நான்காவது திட்ட இறுதியில் இது 35,00,000 வரை உயர்ந்துவிடும்.

மருத்துவமனைகள், மருந்தகங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை 8,600–லிருந்து 14,600 ஆக அதிகரித்திருக்கிறது. இவை தவிர, 8,000 தாய்–சேய் நல நிலையங்களும், 4,800 கிராம ஆரம்ப சுகாதார நிலையங்களும் இயங்கி வருகின்றன. முன்பு குடும்பக் கட்டுப்பாடு நிலையங்கள் ஒன்றுகூடக் கிடையாது; இப்போது தோ 11,474 குடும்பக் கட்டுப்பாடு நிலையங்கள் இயங்கி வருகின்றன; நான்காவது திட்ட இறுதியில், இது 48,000 க்கு மேல் அதிகரித்துவிடும்.

நிலம் இல்லாத விவசாயிகள் மொத்தம் 33 லட்சம் பேர்களுக்கு 37 லட்சம் ஏக்கரா சொந்தமாக வழங்கப்பட்டிருக்கிறது. ஜமீந்தாரிமுறை முற்றிலும் ஒழிக்கப் பட்டு விட்டது.

## சுகாதார வசதிகள்

இப்போது இந்நாடெங்கிலும் உள்ள ஆஸ்பத்திரிகளிலும் மற்ற மருத்துவமனைகளிலும் மொத்தம் 2,40,000 படுக்கைகள் உள்ளன; இங்கே மொத்தம் 86,000 டாக்டர்களும், 45,000 நர்சுகளும் பணியாற்றி வருகிறார்கள். நான்காவது திட்ட இறுதியில் ஆஸ்பத்திரிப் படுக்கைகளின் எண்ணிக்கை 3,00,000 ஆகவும், டாக்டர்களின் எண்ணிக்கை 1,31,000 ஆகவும் நர்சுகளின் எண்ணிக்கை 87,000 முதல் 90,000 வரையிலும் அதிகரிக்கும்.

உணவுப் பண்டங்களின் தனிநபர் விகித உபயோகம் நாள் ஒன்றுக்கு 1,759 கலோரியிலிருந்து 2,145 கலோரியாக அதிகரித்திருக்கிறது. நபர் விகித உணவு சப்ளை நாள் ஒன்றுக்கு 12.8 அவுன்சிலிருந்து 15.4 அவுன்சாக அதிகரித்திருக்கிறது. கிடைக்கும் துணியின் நபர் விகித அளவு ஆண்டொன்றுக்கு 11 மீட்டரிலிருந்து 15 மீட்டராக அதிகரித்திருக்கிறது.

## சாதாரண மக்கள் நிலை உயர..

போக்குவரத்து—தகவல் தொடர்பு வசதிகள், விவசாய அபிவிருத்தித் திட்டங்கள், சமுதாயநல அபிவிருத்தித் திட்டங்கள் முதலியவற்றில் செய்யப்பட்டுள்ள அபிவிருத்திகள் மூலமும், பல்வேறு வகையான தொழில் துறை அபிவிருத்திகள் மூலமும் சாதாரண மக்கள் பல வழிகளிலும் நன்மையடைந்திருக்கிறார்கள். ''மக்கள் தொகை மிகப்பிரமாண்டமான அளவில் அதிகரித்துள்ள போதிலும் (15 ஆண்டுகளில் 13.4 கோடி—ஆண்டொன்றுக்கு 2.5 சதவிகித அதிகரிப்பு), 15 ஆண்டுகளுக்கு முந்தைய நிலையுடன் ஒப்பிடுகையில், மக்களுக்கு உண்ண உணவும், உடுக்கத் துணியும் அதைவிடச் சிறந்த முறையிலேயே அளிக்கப்பட்டு வருகின்றன என்பதில் ஐயமே இல்லை'' என்று நான்காவது திட்ட நகல் வாசகம் கூறுகிறது.

## விளைபொருள் உற்பத்தி

விளைபொருள் உற்பத்திக் குறியளவு (1950–51ல்), 96 ஆக

## பதினைந்தாண்டுக்கால முன்னேற்றம்

இருந்தது, 1964-65-ல் 158 ஆக அதிகரித்தது. அதாவது, 14 ஆண்டுகளில் 65 சத விகிதம் அதிகரித்திருக்கிறது. நான்காவது திட்ட இறுதியில் இது 207·8 வரை அதிகரிக்கக் கூடும்.

உணவுத் தானியங்களின் உற்பத்தி 5 கோடியே 50 லட்சம் டன்னிலிருந்து 9 கோடி டன்னாக அதிகரித்திருக்கிறது. நான்காவது திட்ட இறுதியில், மேலும் 3 கோடி டன் உணவுத் தானியங்கள் கிடைக்கும்.

### நீர்ப்பாசனத் திட்டங்கள்

பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்களின்கீழ் மேலும் ஒரு கோடியே 39 லட்சம் ஏக்கரா நிலம் பாசனத்திற்கு வந்திருக்கிறது. நான்காவது திட்டக் காலத்தில் மேலும் 90 லட்சம் ஏக்கராவுக்குப் பாசன வசதி கிடைக்கும். சிறு பாசனத் திட்டங்களின் கீழ் 3 கோடியே 16 லட்சம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெற்றிருக்கிறது. நான்காவது திட்ட காலத்தில் மேலும், 1 கோடியே 70 லட்சம் ஏக்கராவுக்கு பாசன வசதி கிடைக்கும். நான்காவது திட்ட காலத்தில், திருந்திய வித்துக்களின் சாகுபடியின்கீழ் 27·4 கோடி ஏக்கரா நிலம்வரும்; மூன்றாவது திட்ட இறுதியில் இப்பரப்பளவு 12·0 கோடி ஏக்கராவாக இருந்தது. மின்சக்தி உற்பத்தித் திறன் 23 லட்சம் கிலோ வாட்டிலிருந்து 102 லட்சம் கிலோ வாட்டாக அதிகரித்திருக்கிறது; நான்காவது திட்ட இறுதியில் இது 200 லட்சம் கிலோவாட்டாக அதிகரிக்கும். மூன்றாவதுதிட்டகாலத்தில் மொத்தம் 4·8 லட்சம் தண்ணீர் பம்புகளுக்கு மின்சக்தி இணைப்புக் கொடுக்கப்பட்டது; நான்காவது திட்ட இறுதிவாக்கில் மொத்தம் 11·8 லட்சம் பம்புகள் மின்சக்தி இணைப்பு பெற்றிருக்கும். நைட்ரஜன் ரக ரசாயன உரங்களின் உற்பத்தி 56,000 டன்னிலிருந்து 6,00,000 டன்னாக அதிகரித்தது. நான்காவது. திட்ட இறுதியில், இது 20,00,000 எண்ணை எட்டிவிடும். 15 ஆண்டுகட்கு முன்பு, பயிர்ப் பாதுகாப்புக்கான நடவடிக்கைகள் எதுவுமே எடுக்கப்படவில்லை. சென்ற மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் பலனாக பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மொத்தம் 4.1 கோடி ஏக்கரா நிலப்பரப்புக்கு வியாபித்துள்ளன; நான்காவது திட்ட இறுதியில், இந்த அளவு 13.7 கோடி ஏக்கராவை எட்டிவிடும்.

### பாசனமும், மின்சக்தியும்

பெரிய நடுத்தரப் பாசன வசதி திட்டங்கள் மூலம் இறுதியாக மொத்தம் சுமார் 11.2 கோடி ஏக்கரா நிலப்பரப்புக்குப் பாசன வசதி அளிக்க முடியும். 1950–51-ல முதல் திட்டத் துவக்கத்தின்போது, எல்லா நீர் ஆதாரங்களிலிருந்தும் மொத்தம் சுமார் 5.6 கோடி ஏக்கராவுக்குப்பாசன வசதி அளிக்கப்பட்டது; அதில், 2.4 கோடி ஏக்கரா நிலப்பரப்பு பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்களின் மூலம் பாசன வசதிபெற்றது. மேலும், பாசன வசதிகள் ஏற்படுத்தப்பட்டதன் மூலம் சென்ற மூன்று திட்டகாலங்களிலும் அந்தகைய திட்டங்களின் மூலம் அதிகப்படியாக 1.8 கோடி ஏக்கரா நிலப்பரப்புக்கு பாசன வசதி கிடைத்தது. பெரிய, நடுத்தர பாசனத் திட்டங்களின் மூலம் எதிர்காலத்தில் அபிவிருத்தி செய்யப்படுவதற்காக மொத்தம் சுமார் 7 கோடி நிலம் விடப்பட்டிருக்கிறது.

### தொழிலும், கனிப்பொருள்களும்

இந்நாட்டில், நிலக்கரி உற்பத்தி 3.28 கோடி டன்னிருந்து 7 கோடி டன்னாக அதிகரித்திருக்கிறது. நான்காவது திட்ட இறுதியில், மேலும் 3.6 கோடி டன் நிலக்கரி கிடைக்கும். வேலை தீர்ந்த உருக்கு உற்பத்தி 10·4 லட்சம் டன்னிலிருந்து 46 லட்சம் டன்னாக அதிகரித்திருக்கிறது. நான்காவது திட்ட உருக்கு உற்பத்திக் குறியளவு 88 லட்சம் டன் ஆகும். அலுமினிய உலோக உற்பத்தி 4000 டன்னிலிலிந்து 65,000-டன்னாக அதிகரித்திருக்கிறது. 4-வது திட்ட இறுதியில், 330,000–டன் அலுமினியம் கிடைக்கும். இயந்திரக் கருவிகளின் உற்பத்தி ரூ. 30,00,000–லிருந்து ரூ. 2300 லட்சமாக அதிகரித்திருக்கிறது.

1950-51ல் விவசாய காரியங்களுக்கான ட்ராக்டர் எதுவுமே உற்பத்தி செய்யப்படவில்லை. 1965-66-ல் மொத்தம் 5,600 டிராக்டர்கள் உற்பத்திச் செய்யப்பட்டன. நான்காவது திட்ட இறுதியில் 35,000 டிராக்டர்கள் உற்பத்தி செய்யப்பட இருக்கின்றன.

இப்போது, கைத்தறி, விசைத்தறி கதர்—ஆகியவை மூலம் மொத்தம் 314.6 கோடி மீட்டர் துணி உற்பத்தியாகிறது; 15 ஆண்டுகட்கு முன்பு, இவை மூலம் 91.7 கோடி மீட்டர் துணியே உற்பத்தியாயிற்று. நான்காவது திட்ட இறுதியில், இந்த உற்பத்தி 457.2 கோடி மீட்டர் ஆக இருக்கும். நான்காவது திட்ட இறுதியில், நாட்டில் மொத்தம் 550 தொழில் பேட்டைகள் இயங்கிவரும். 1965–66-ல் 300 தொழில் பேட்டைகள் இருந்தன. 15 ஆண்டுகட்கு முன்பு இந்நாட்டில் தொழில் பேட்டை எதுமே இல்லை.

### போக்குவரத்தும் தகவல் தொடர்பும்

இந்நாட்டில் தளம் பாவப்பட்ட சாலைகளின் மொத்த நீளம் முன்பு 1,56,000 கிலோ மீட்டராக இருந்தது, இரண்டு லட்சத்து 84 ஆயிரம் கிலோ மீட்டராக அதிகரித்திருக்கிறது; நான்காவது திட்ட இறுதியில் இது 3 லட்சத்து 34 ஆயிரம் கிலோ மீட்டராக அதிகரிக்கும்.


ரயில்வேக்களின் சரக்கேற்றிச் செல்லும் திறன 9.3 கோடி டன்னிலிருந்து; 20.5 டன்னாக அதிகரித்திருக்கிறது நான்காவது திட்ட இறுதியில் இது 30·8 கோடி டன்னாக அதிகரிக்கும். இந்நாட்டிலுள்ள கப்பல்களின் மொத்த எடை 3 9 லட்சம் ஜி. ஆர். டன்னாக இருந்தது, 15.4 லட்சம் ஜி. ஆர். டன்னாக அதிகரித்திருக்கிறது. நான்காவது திட்ட இறுதியில், இது இரு மடங்காக அதிகரிக்கும். சாலைகளில் செல்லும் வர்த்தக உபயோக மோட்டார் வண்டிகளின் எண்ணிக்கை முன்பு 1,16,000 ஆக இருந்தது 3,20,000–ஆக அதிகரித்திருக்கிறது, 4-வது திட்ட இறுதியில், இது 5,25,000 மாக அதிகரிக்கும். 1950–51ல் இந்நாடெங்கிலும் மொத்தம் 36,000 தபால் நிலையங்கள் இருந்தன; 1965–66–ல் தபால நிலையங்களின் எண்ணிக்கை, கிட்டத்தட்ட 98 ஆயிரமாக அதிகரித்திருக்கிறது; 1970–71–இறுதியில், இந்நாட்டில் மொத்தம் 1,10,000 தபால் நிலையங்கள் இயங்கி வரும். இதுபோலவே, தந்தி காரியாலயங்களின் எண்ணிக்கையும், 3,600–லிருந்து 8,700–ஆக அதிகரித்திருக்கிறது; அது 10,600–ஆக அதிகரிக்கும். டெலிபோன்களின் எண்ணிக்கை 1,68,000–லிருந்து 8,73,000–ஆக அதிகரித்திருக்கிறது; 4-வது திட்ட இறுதியில, இது 15,23,000–அளவை எட்டிவிடும்.

### தொழில்களில் அரசாங்கத்துறையின் முதலீடு

தொழில்களிலும், சுரங்கங்களிலும் போடப்பட்டுள்ள அரசாங்கத்துறையின் முதலீடு முதல் ஐந்தாண்டு திட்ட காலத்தில 55 கோடியாக இருந்தது, இரண்டாவது திட்ட காலத்தில் ரூ. 938 கோடியாகவும், 3-வது திட்ட காலத்தில் ரூ. 1,520 கோடியாகவும் அதிகரித்தது. நான்காவது திட்டத்தில் மொத்தம ரூ. 3,936 கோடி முதலீடு செய்யப்படும. தனியார் துறையில், தொழில் முதலீடு முதல் திட்டகாலத்தில் ரூ. 233 கோடியாக இருந்தது, 3-வது திட்ட காலத்தில் ரூ. 1050 கோடியாக அதிகரித்தது; 4-வது திட்டத்தில இது ரூ. 2350 கோடியாக அதிகரிக்கும. இயந்திரக் கருவிகளின இறக்குமதி மொத்த சப்ளையில் 91·6 சதவிகிதத்திலிருந்து 44.6 சதவிகிதமாக குறைக்கப்பட்டிருக்கிறது; சர்க்கரை ஆலை இயந்திரங்களின் இறக்குமதி 100 சதவிகிதத்திலிருந்து 4.1 சதவிகிதமாகவும், ஜவுளி ஆலை இயந்திரசாதனங்கள் 100 சதவிகிதத்திலிருந்து 56 5 சதவிகிதமாகவும், வர்த்தக உபயோக மோட்டார் வண்டிகளின் இறக்குமதி 35·7 சதவிகிதத்திலிருந்து 0.5 சதவிகிதமாகவும், பெட்ரோலியப் பொருள்களின் இறக்குமதி (மண்ணெண்ணெய் நீங்கலாக) 91.5 சதவிகிதத்திலிருந்து 1.6 சதவிகிதமாகவும், அலுமினியம் இறக்குமதி 74.8 சதவிகிதத்திலிருந்து 29.7 சதவிகிதமாகவும் குறைக்கப்பட்டிருக்கின்றன.

—o—








படம் 1.—தமிழ்நாடு பஞ்சாயத்து வளர்ச்சி அலுவலர்கள் சங்க இரண்டாவது மாநில மகாநாடு, சேலத்தில், 30—6—66, 1—7—66 தேதிகளில் நடைபெற்றது. முதலமைச்சர் திரு எம். பக்தவத்ஸலம் மகாநாட்டைத் துவக்கி வைத்தார். சங்கத் தலைவர் திரு டி. நாகலிங்கம் மகாநாட்டில் பேசுகிறார்.

படம் 2.—இராஜபாளையம் பஞ்சாயத்து யூனியனில் ஜமீன் கொல்லம்கொண்டான் பஞ்சாயத்தில், மேல் நிலை நீர்த் தொட்டியை, 17—8—66 ல், கிராம வளர்ச்சி நெறியாளர் திரு கா. திரவியம், ஐ. ஏ. எஸ்., திறந்து வைத்தார்.

படம் 3.—மூன்று நோய்த் (கக்குவான் இருமல், தொண்டை அடைப்பு நோய், இழுப்பு வாதம்) தடுப்பு ஊசிகள் (Triple Antigen) போட்டுக் கொள்வது, கிராமப் புறங்களில் பிரபலமாகி வருகிறது.

# தென் ஆர்க்காடு மாவட்ட தொழில் வளர்ச்சிக் கருத்தரங்கு





படம் 1.— 31-8-66-ல் கடலூரில் நடைபெற்ற தென் ஆர்க்காடு மாவட்ட தொழில் வளர்ச்சிக் கருத்தரங்கினை, முதலமைச்சர் துவக்கி வைத்தார். தொழில் அமைச்சர் திரு ஆர். வெங்கட்ராமன் தலைமை வகித்தார்.


படம் 2.—அக் கருத்தரங்கினை ஒட்டி நடைபெற்ற கண்காட்சியினை முதலமைச்சர் பார்வையிடுதல்.

படம் 3.—தென் ஆர்க்காடு மாவட்டம் குறிஞ்சிப்பாடியில் உள்ள பிரம்பு, மூங்கில் சாமான்கள் தயாரிக்கும் நிலையம்.














படம் 1.—சென்னை நகரப் போலீசாரின் வருடாந்திர விளையாட்டு விழா. 3—9—66-ல் நடைபெற்றது. தமிழ் நாடு அரசாங்கத்தின் தலைமைச் செயலாளரின் மனைவியார் திருமதி ஸி. ஏ. இராமகிருஷ்ணன் அவ்வமயம் பரிசுகள் வழங்கினர்.

படம் 2.— 21-8-66-ல் சென்னையில் ‘மீனள வாரத்தை’ தமிழ்நாடு ஆக்டிங் கவர்னர் திரு. உஜ்ஜல்சிங் துவக்கி வைத்தார். அவ்விழாவினை ஒட்டி நடைபெற்ற அலங்கார வண்டிகள் அணிவகுப்பு.

படம் 3.— 25-8-66-ல் சென்னையை அடுத்த அலமாடியில், விசேஷ ஆயுதப் படையினர் முகாமில், நீச்சல் குளத்தை, போலீஸ் இன்ஸ் பெக்டர் ஜெனரல் திரு அருள் திறந்து வைத்தார்.





1



2

# திருவெறும்பூரில்




3





4

# தீவிர விவசாயம்



5



6

# திருவெறும்பூர் யூனியனில்

## தீவிர விவசாயப் பணிகள்

திருச்சி நகரிலிருந்து கிழக்கு நோக்கி மைல் தொலைவில் அழகுற5 அமைந்துள்ளது திருவெறும்பூர். இவ்வூர் மையத்தில் அமைந்திருக்கும் ஒரு குன்றின்மீது "திருவெறும்பீஸ்வரர்" எழுந்தருளியுள்ள, சிவன் கோயில் பார்ப்போர் அனைவரின் கண்ணையும் கருத்தையும் கவரும் கம்பீரம் வாய்ந்தது. சைவ சமயக் குரவர்கள் பாடிச் சென்ற சிவத்தலமாகிய இவ்வூரின் பெயரால் அழைக்கப் பெறுவதுதான் "திருவெறும்பூர்" பஞ்சாயத்து யூனியன் ஆகும். இந்த யூனியனைச் சேர்ந்த மூன்று பஞ்சாயத்துக்களில் காய்கறி உற்பத்தி மிகத் திறம்பட நடைபெறுவதோடு, புதிய விஞ்ஞான கருவிகளின் துணையால், விவசாயம் தீவிரமாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். பக்தவத்ஸலம் அவர்களால், இப்பஞ்சாயத்து யூனியனைச்சேர்ந்த கொட்டப்பட்டு கிராமத்தில் காய்கறி விதைப் பண்ணை ஆரம்பிக்கப்பட்டது. இப்பண்ணை, விவசாயிகளுக்கு வேண்டிய தரமான விதைகள் கிடைப்பதற்கும், காய்கறிகள் மலிவு விலையில் கிடைக்கும்பொருட்டும் ஆரம்பிக்கப்பட்டது. இப்பண்ணையில் வெண்டை, தக்காளி, பீட்ரூட், குச்சி வள்ளிக்கிழங்கு முதலிய காய்கறிகள் பயிரிடப்பட்டு வருகின்றன. பயிரின் மூலம் ரூ. 3,000 வருமானம் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இங்கே வளர்ந்து வரும் காய்கறிப் பண்ணையின் மூலம் இரண்டு ஆண்டுகளில் கிடைத்த வருமானம் ரூ. 1,989·79 ஆகும். இதற்காக, 4,500 ரூபாய் செலவு செய்து நீர் இறைக்க மின்சார பம்பு செட்டும், மின்சார இணைப்பும் பொருத்தப்பட்டுள்ளது. இப் பண்ணைக்கு உதவியாக ஒரு டிராக்டரும், அதற்குரிய உழவுக் கருவிகளும் ரூ. 30,954·75 செலவு செய்து வாங்கப்பட்டு, பயன்படுத்தப்பட்டு வருகிறது.

கொட்டப்பட்டு காய்கறிப் பண்ணையில் உற்பத்தியான 1 கிலோ கத்தரிக்காயை 1966-ம் ஆண்டு ஜனவரி மாதம் 5-ம் தேதி முதலமைச்சர் அவர்களால் ஏலம் விட்டதில் அதன் மூலம் 2 பவுன் தங்கம் வாங்கும் அளவிற்கான ரூ. 225 கிடைத்தது. அத்தொகை தேசிய பாதுகாப்பு நிதிக்காகக் கொடுக்கப்பட்டது. இதே போன்று இப்பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த அரசங்குடி கிராமத்தில் 1956-ம் ஆண்டு மே மாதம் 25-ம் தேதி பறங்கிக்காய் ஒன்றை ஏலம் விட்டதில், ரூ. 501 கிடைத்தது. அத்தொகை அவ்வூர் பள்ளிக் கட்டிடத்திற்கு உதவியது.

பஞ்சாயத்து யூனியன் சார்பால், நியாய விலைக்கடைகள் இரண்டு திறக்கப்பட்டு, மக்களுக்குக் குறைந்த விலையில் காய்கறிகள் விற்பனை செய்து வருகின்றனர். இக்காய்கறி மாதிரிப் பண்ணையை அமைச்சர்கள், அதிகாரிகள் முதலியோர் பார்வையிட்டு மிகவும் பாராட்டியுள்ளனர்.

இந்தப் பண்ணைக்கென, டிராக்டர் (Tractor) வாங்கப்பட்டு, விவசாயிகளுக்கும், பஞ்சாயத்துக்களுக்கும் குறைந்த வாடகைக்கு விடப்படுகிறது. இன்றுவரை டிராக்டரால் யூனியனுக்கு வருமானம் ரூ. 3,180. இவ்வட்டாரத்தைச் சேர்ந்த கிராமங்களில் 258 ஏக்கர் நிலங்களிலும் டிராக்டர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது. டிராக்டரினால் விவசாயிகளுக்கு அதிகப் பணம் செலவழியாமல் மிகக்குறைந்த பணமே செலவாகிறது.

இப்பஞ்சாயத்து யூனியனில் தண்ணீர் பஞ்சத்தைப் போக்க மின்சார டிரில் செட் ஒன்று வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. பம்பு செட்டுகளும், பவர் ஸ்பிரேயர்களும் வாங்கப்பட்டு குறைந்த வாடகைக்கு விவசாயிகளுக்குத் தரப்படுகிறது.

இப் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த மற்றொரு கிராமமான, கூத்தப்பார் என்னுமிடத்திலும் ஒரு காய்கறித் தோட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதில் கிளிரிசிடியா தழைக் கன்றுகளும் தென்னம் பிள்ளைகளும் வைக்கப்பட்டுள்ளன. சத்துள்ள காய்கறிகள் பயிரிடப்படுகின்றன. இக்கிராமத்தில் கிடைக்கும் தழை மற்றும் கழிவுப் பொருட்களைக் கொண்டு பஞ்சாயத்து மூலம் "கலவை உரம்" தயாரிக்க அரசினர் ரூ. 3,300 கடனுதவி வழங்க வேண்டிய ஏற்பாடு செய்துள்ளனர்.

அரசங்குடி பஞ்சாயத்தில் 1966-ம் ஆண்டு மே மாதம் 25-ம் தேதி காய்கறித் தோட்டம், தழை உற்பத்தித் தோட்டம் திரு. எம். பக்தவத்ஸலம் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. இப்பண்ணையைச் சுற்றி 100 தென்னம் பிள்ளைகளும் 500 வாழைகளும் இருக்கின்றன. இப்பஞ்சாயத்தின் பாசன வசதிக்காக புதிய கிணறு வெட்ட ரூ. 3,000, மின்சார பம்பு செட் அமைக்க ரூ. 2,500 மாநில சர்க்காரால் கடனுதவி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

---

**எதிர்ப்பக்க படங்கள் விளக்கம்:**

**படங்கள் 1, 3, 4.—திருவெறும்பூர் பஞ்சாயத்து யூனியன் கொட்டப்பட்டு காய்கறிப் பண்ணையில் உற்பத்தியாகும் காய்கறிகள் "திருச்சிராப்பள்ளி நகரில்" நியாய விலைக் கடை மூலம் விற்பனையாகின்றன.**

**படம் 2.—திருவெறும்பூர் பஞ்சாயத்து யூனியன் வாங்கியுள்ள டிராக்டர்.**

**படம் 5.—கொட்டப்பட்டு பண்ணையில் உற்பத்தியான காய்கறிகள் ஏலத்தில் விடப்பட்டன.**

**படம் 6.—அப் பண்ணையை, அதிகாரிகள், யூனியன் தலைவர் ஆகியோர் பார்வையிடுதல்.**

## சிறுகதை

# முதல் பரிசு

[பெருமழை நமசு]

"மதுரை ஆட்சியா? ஸ்ரீரங்கம் ஆட்சியா? என்ன நினைத்துக்கொண்டு இருக்கிறாய்?" பொரிந்து தள்ளினான் சேது.

"எந்த ஆட்சியாயிருந்தால் என்ன? நல்லபடியாக நடந்தால் சரிதான்" பதிலுரைக்காமலிருப்பாளா துணைவி?

சேதுவுக்கு எரியும் நெருப்பில் பெட்ரோலை ஊற்றியது போல் ஆனது "ஏய் ராஜம்! நாவை அடக்கிப் பேசு. குடும்பமா யோக்கியதையாக இருக்கணும், தெரியுமில்லே. பிசாசு".

இவ்வளவும் பேசியவன் கடைசியில் 'பிசாசு' என்று முடிக்கவேண்டும்? அவன் அப்படி வர்ணித்ததில் தவறு ஒன்றும் இல்லைதான்; இருந்தாலும் கறுக்கை கிறுக்கு என்று கூறமுடியுமா? முட்டாளை முட்டாள் என்று கூற முடியுமா? கூறினால் நமக்கு நம் உடம்பு இல்லை. அப்படி இருக்கும்போது அப்படிக் கூறிவிட்டால் என்ன?

ராஜமும் இதுவரை பிசாசுக்கு நிழலாக இருந்தவள் பிசாசாகவே மாறிவிட்டாள். "ம்.. இனிமே இந்த வீட்டிலே குப்பை கொட்ட எனக்கு யோக்கியதை இல்லை. நீங்கள் ஒன்றும் அப்படி பேசவேண்டாம். நான் ஊருக்குப் போகிறேன். நீங்கள் எதைவேண டுமோ அதை செய்து கொள்ளுங்கள்."

வேதாளம் முருங்கை மரம் ஏறின கதை தான்!

அணையும் விளக்கு சுடர்விட்டெரிவதுபோல் சேதுவுக்கு அணையும் கோபம் பொங்கி எழுந்தது. "இதோ பார். ராஜம்....நான் ஆபீசுக்குப் போகிறேன்..உன் சௌகர்யப்படி செய்." சட்டையை மாட்டிக்கொண்டு கிளம்பி விட்டான் சேது!

ராஜம் அப்படியே உட்கார்ந்துவிட்டாள் "ஹோ" என்ற சப்தமும் "ங்ம்" "ங்ம்" என்ற விசும்பலும் தொடர்ந்து கொஞ்சநேரம் கேட்டுக்கொண்டே இருந்தது!..

* * * * * * * * * *

"சார்..உங்களை மானேஜர் கூப்பிடுகிறார்." மானேஜர் கூப்பிடுகிறாரா? சேதுவை அடிக்கடி மானேஜர் கூப்பிடுகிற வழக்கம்தான். ஆனால் வந்ததும் வராததுமா காலையிலே கூப்பிடக் காரணம் என்னவாயிருக்கும்? சேதுவின் மூளை குடைந்தது. மானேஜர் அறையினுள் நுழைந்தான்.

மானேஜரை நோக்கினான். அவரிடம் அசாதாரணமான அமைதி நிலவி ஏதோ புயல் கிளம்புவதற்கு அறிகுறியாய் இருந்தது. சேதுவின் மனம்மட்டும் அவருடைய தோற்றம் கண்டு சூறுவளியில் அகப்பட்ட காற்றாடி போல் படபடத்தது.

"வா சேது. உட்கார்."

"ஆச்சர்யமாயிக்கே! மானேஜரா இப்படிப் பேசுகிறார்"

நாற்காலி இழுபடும் சத்தம், சேது உட்காரும் சத்தம் கேட்டதே தவிர, மானேஜர் தலை நிமிரவில்லை.

குரலைக் கனைத்துக்கொண்டே மானேஜரின் குரல் வெளிவந்தது. "சேது. நான் உன்னிடம் மானேஜர் என்ற முறையில் இப்போது பழகவில்லை; இனிமேலும் பழகப்போவதுமில்லை. நான் உன்னிடம் பலதடவை. என் சொந்த விஷயங்களைக் கூறியுள்ளேன் தெரியுமல்லவா?" மீண்டும் அவர் தலை குனிந்தது.

"ஆமாங்க"

"சேது உன்னிடம் ஒரு விஷயத்தை மறைக்காமல் சொல்லப்போகிறேன். அதைக் கூறும் நிலையில் நான் இல்லைதான். இருந்தாலும் கூறிவிட்டால் என்மனம் அமைதிபெறுது. ஆகையால் 'டிடன்' நேரத்தில் வந்து போ தெரியுதா?..

"சரி சார்" என்று கூறினனேதவிர, சேதுவின் மனம் ஒரு நிலையில்லை. என்ன விஷயமோ தெரியவில்லை. ஏன் இந்த பீடிகை?

"டன்" என்ற மணியோசை. நிமிர்ந்து நோக்கினான் சேது. மணி ஒன்று. பைலை தள்ளி வைத்துவிட்டு டிபன் கேரியரை தேடினான். எடுத்து வந்தால் தானே? கோபந்தான் சாப்பாட்டை மறக்க வைத்துவிட்டதே! ஹோட்டலையாவது நாடலாம் என்றால் கையில் அவ்வளவு காசு இல்லையே! மானேஜரின் கட்டளைவேறு; டிபன் நேரத்தில் வரச்சொன்னாரே! அவருடைய அறையினுள் நுழைந்தான்..

அதே அமைதி. அதே சூழ்நிலை. சாப்பிட்டுவிட்டாரா? இல்லையா? பனிரெண்டு மணிக்கே சாப்பிடுபவர் ஒன்றும் சாப்பிடாமல அப்படியே உட்கார்ந்திருக்கிறார்..காரணம்?

"சார்" சாப்பாடு ஆகிவிட்டதா?"

"இல்லை சேது, இன்று சாப்பாடு வரவில்லை."

"நம்ப நிலைமைதான்? சரிதான்." ஏழை நெஞ்சுக்கு ஒரு சிறு ஆறுதல்.."ஏங்க..கேட்கிறேன்னு.."

"சேது அதுபற்றிச் சொல்லத்தான் உன்னைக் கூப்பிட்டேன். வீட்டில் நிலைமை வரவர மோசமாய் போகிறது".

"என்ன சார். விஷயத்தைச் சொல்லுங்கள்"

பேச்சின் தடம் தெரியவே, சேதுவின் மனத்துடிப்பு அதிகரித்தது.

"சேது, என் மனைவியைப் பற்றி உனக்குச் சொல்லத் தேவையில்லை. அவள் உடல் நிலையோ சொல்லவே தேவையில்லை. மகாமோசமான வியாதி. பிழைப்பாளோ பிழைக்கமாட்டாளோ என்ற பயம் வேறு- நல்ல டாக்டரிடம்தான் காண்பித்தேன். மருந்தும் வாங்கிக்கொடுத்

தேன். இதுவரை செலவு ஏகப்பட்டது ஆகிவிட்டது. மாதச் சம்பளமோ போதவில்லே. வேலூரில் ஆஸ்பத்திரியில் கொண்டுபோய் சேர்த்தால்தான் பிழைப்பாளாம்! டாக்டர் சொல்லிவிட்டார். என்ன செய்வதென்று புரியவில்லே. யாரிடம் கேட்கவும் தயக்கமாய் உள்ளது. அதனுல்தான் உன்னைக் கூப்பிட்டேன்''..மென்று விழுங்கினுர் அவர். ஒரு மானேஜர் ஒரு குமாஸ்தாவிடம் பேசுகிற பேச்சா இது?

''சார் நான் என்ன செய்யவேண்டும்? சொல்லுங்க, என்னுல் முடிந்ததை உசிரைக்கொடுத்தாவது செய்வேன் சார். நீங்க எதையும் மறைக்காமல் சொல்லுங்கள் சார்'' சேதுவின் குரல் கரகரத்தது. அதில் ஓர் உறுதியும் தொனித்தது.

''சேது, என்னடா இப்படி சொல்றுனேன்னு வருத்தப் படாதே. நான் நானூறு ரூபாய் சம்பளம் வாங்கிறவன். நீயோ இருநூறு ரூபாய் வாங்குகிறவன. ஆனுல் நான் இதுவரை வாங்கிய வைத்திருந்த பணம் அத்தனையும் செலவழிச்சிட்டேன். அதனுலே நீ ஏதாவது பணம் வைத்திருந்தால்..எப்படியும் 500 ரூபாயாவது வேண்டி யிருக்கும் ரொம்ப அவசரச் செலவு'' அவர் முடிக்க வில்லே.

பணமா, மாசக்கடைசியில் அதுவும் ஏழைக் குமாஸ்தா விடம் 500 ரூபாய் எங்கிருந்து வரும் ''சார்?..'' மென்று விழுங்கினுன் சேது.

**ஆபீஸ் மானேஜர், குமாஸ்தாவிடம் 500-ரூபாய் கடன் கேட்கிறுர்! குமாஸ்தா கொண்டு வந்து கொடுக்கிறுர். எதற்கு மானேஜருக்குப் பணம்? உண்மையாகவே அவருக்குத் தேவை தானு? மானேஜரும் அவர் மனேவியும் சேர்ந்து ஒரு சிறு நாடகமே ஆடிவிடுகிறுர்கள்! கதையின் முடிவு, எல்லாச் சிக்கல்களையும் அவிழ்த்து விட்டு விடுகிறது.**

''சேது, இல்லேன்னு சொல்லாதேப்பா. பிறத்தியார் யாரிடமாவது கேட்டா என் கௌரவம் குறைந்திடு மென்று யாரையும் இது நாள்வரையில் கேட்கவில்லே. உன்னே என் சகோதரனேப்போல நினைச்சிருக்கேன். ரொம்ப அவசரம். நோயிலே கிடக்கிற என் மனேவி பிழைத்தெழ வேண்டும். வேலூருக்கு கொண்டுபோய் சிகிச்சை செஞ்சாத்தான் பிழைப்பாள். அதுக்காகத்தான்''. அவர் குரல் விம்மியது.

''எப்படியும் பார்க்கிறேன் சார், காலேயிலே வந்து சொல்றேங்க..'' அவன் அறையைவிட்டுப் புறப்பட எத்த னித்தான்.

''சேது, இந்த விஷயம் யாருக்கும் தெரியவேண்டாம், நமக்குள்ளேயே இருக்கட்டும். வரும்போது வெற்றியோட வரணும். நாளேக்கு நம்ப ஆபீசுக்கு லீவுதானே. வீட்டுக்கே வா.''

''பார்க்கிறேன் சார்''

ஆபீசைவிட்டு நடந்து போகும்பொழுது அவன் மனமும் தெரிந்தவர்கள், நண்பர்கள் வீடெல்லாம் நோக்கி நடக்கத் தொடங்கியது.

'இரவு 9 மணி அடித்துவிட்டது. ஆபீசுக்குப் போனவரை இன்னும் காணுமே, என்று ஏங்கியது ராஜத்தின் மனது. 'காலேயில் கோபமாகப் போனவர் நான் ஊருக்குப் போய்விட்டேன் என்று நினைத்து விட்டாரோ என்னவோ? எப்படி எப்படியோ ஓடியது அவள் மனம். பெண் மனதே ஒரு விசித்திரக் கலவை! மணி 9-30 என்பதைச் சுவர்க்கடிகாரம் சுட்டிக்காட்டியது. தெருக்கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. ராசம் கதவைத் திறந்தாள்.

கலேந்த கேசம், சோர்ந்த முகம் துவண்ட உடல், அலேந்த உள்ளம் இவையனைத்தையும் சுமந்து வந்த சேதுவைப் பார்த்தவுடன், என்னவோ ஏதோ என்று துடித்துப்போய்விட்டாள் ராசம்!

''என்னங்க உடம்புக்கு'' ராசத்தின் வினு சேதுவின் காதில் விழாமலில்லே உடம்புக்கு ஏதாவது என்றுல் தானே பதில் கூறமுடியும்?

''சாப்பிட வாங்க..''

''சாப்பாடு வேண்டாம், பால்மட்டும் கொண்டுவா'' குரலில் சுரத்தில்லே.

சட்டையைக் கழற்றிப்போட்டுவிட்டு அப்படியே படுத்து விட்டான். மனம் ஊசலாடியது. ''நான் எப்படி மானேசருக்கு உதவமுடியும்'' 500 ரூபாய்க்கு எங்கே போவது? நல்ல மனுசன், இந்த அவசரத்தில் உதவினுல் பின்னுல் நமக்கே எவ்வளவோ பிரயோசனமாக இருக்கும்.'' இந்தப் பாசுரை அவன் மனச்சுவர்தோறும் மோதி மோதி எதிரொலித்தது.

''ஏங்க, இந்தாங்க பால், கோவிச்சுக்காம சொல் லுங்க. உடம்புக்கு என்னங்க'' பாச உணர்வு காலேச் சண்டையை மூட்டைகட்டி வைத்துவிட்டது.

''உடம்புக்கு ஒண்ணுமில்லே எல்லாம் மனசுக்குத் தான்''

'என்னங்க..எதையாவது மனசிலே போட்டுக் குழப் பிக்காதீங்க, எங்கிட்டே சொல்றதுக்கு என்னுங்க.'' அவள் முகத்தைக் கூர்ந்து நோக்கினுன் சேது. தாலி கட்டின மனேவியின் தாபம், ஆர்வம் எல்லாம் அதிலே இருந்தது. ஆனுல் பயன்? இந்த விஷயத்தில் அவளால் எப்படி உதவ முடியும்?

''என்னங்க. நான் கேட்கிறேன், ஒண்ணுமே சொல்ல மாட்டேங்குறீங்க'' குரலில் ஒரு நடுக்கம். என்னவோ ஏதோ? பெண் மனசு எப்படி எப்படியோ அலே மோதியது.

''ராசம் உன்னிடம் கூறவும் தயக்கமாக இருக்கிறது, கூருமலிருக்கவும் முடியவில்லே, என் மானேசரைத் தெரியுமில்லே. அவர் மனேவி......''

''தமிழ்மணி அம்மாளேத்தானே சொல்றீங்க, அவங் களேயா தெரியாது. எங்கள் மாதர் சங்கத் தலேவியே அவங்கதானே. ஆனுல் நான் கொஞ்ச நாளா அவங் களேப் பார்க்கவேயில்லே''

''ஏன் நீ அவங்களேப் பார்க்கமுடியலே தெரியுமா? அவங்க இப்ப உசிருக்கு ஊசலாடிக்கிட்டு இருக்காங்க''

''என்ன?'' அதிர்ச்சி, ஆச்சரியம், அனுதாபம் அனைத்தும் சேர்ந்து ஒலித்தது அவள் குரலில்.

''ஆமாம் ராசம், இன்று மானேசரே சொன்னுர். அவங்க உயிர் ஊசலாடுறதினுலே தான் என்னே உதவி செய்யச் சொல்லிக் கேட்டார்.''

''என்னங்க உதவி....''

''என்ன உதவி....இந்தக் காலத்திலே எதிர்பார்க் கிறதெல்லாம் ஒரே உதவிதானே..பண உதவிதான். அந்தம்மாளுக்கு மோசமான வியாதியாம். வேலூர் ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோய் காண்பிச்சாதான் பிழைப்

பாங்களாம். 500 ரூபாய் அவசரமா வேணுமாம். அதாக் குறையாய்க் கேட்கிறார். எங்கிட்டே ஏது பணம்? உன்னிடம் நான் மாதாமாதம் பணத்தை முழுவதையும் கொடுத்துவிடுகிறேன். நீ ஏதோ குடும்பத்தை நடத்தி வாரே. இப்படி இருக்கும்போது நம்மகிட்டே ஏது இவ்வளவு பணம்"?

"500 ரூபாயா? நல்ல மனுசர். அத்தோட அந்த அம்மா தங்கமானவங்க" ராசத்தின் எண்ணத்திவலைகள் சிதறடித்தன, சில நிமிடம் மௌனம்.

"இருங்க வர்றேன்" என்னவோ முடிவுக்கு வந்தவள் போல் உள் அறைக்குள் போனாள். சேது கண் கொட்டாமல் அவள் என்ன செய்கிறாள் என்பதையே பார்த்துக்கொண்டிருந்தான். போனவள் திரும்பி ஒரு புத்தகத்தை எடுத்துக்கொண்டு வந்து, "இந்தாங்க, இது சேமிப்புப் பாஸ் புத்தகம், அப்பப்ப கிடைக்கிறதை சிறு சேமிப்பிலே போட்டுவைச்சால் பின்னாலே அவசரத்துக்கு உதவும்னு" அந்தத் தமிழ்மணி அம்மா தான் அடிக்கடி சொல்லுவாங்க. அதைக் கேட்டுட்டு, நானும் அப்பப்ப கிடைச்சதை சேமிப்பு பாங்கிலே போட்டுவச்சிட்டு வந்தேன். உங்ககிட்டே இது நாள்வரையில் சொல்லாதது தவறுதாங்க, என்னை மன்னிச்சுடுங்க"

"ராசம், ஏது இது. நீயா இவ்வளவு சேர்த்துவைச்சே" ஆச்சரியம் மேலிட அதைப் பிரித்துப் பார்த்தான். அதில் ரூ. 540. அவள் சேமிப்புக் கணக்கில் இருந்தது.

"இவ்வளவு ரூபாயும் நீங்க கொடுத்ததுதான், அவ்வப்பொழுது கொஞ்சங்கொஞ்சமாகச் சேர்த்து வச்சது. பக்கத்திலே தபால் ஆபீஸ் இருக்கிறது சௌகரியமாய் இருந்தது"

"ராசம். என்னாலே நம்பவே முடியவில்லை, இவ்வளவு தூரம் நீ கெட்டிக்காரியா இருப்பேன்னு நான நினைக்கவே இல்லை. ரொம்ப தேங்ஸ். நாளைக்கு அவருக்கு இதிலேயிருந்து எடுத்து 500 ரூபாய் கொடுத்திடலாம். நீயே போய் காலையிலே பணத்தை வாங்கிக் கொண்டு வா"

காலையில் தபாலாபீசில் பணத்தைப் பெற்றுக் கொண்டு ராசம்கொண்டுவந்து கொடுக்க, அதையும் பாஸ் புத்தகத்தையும் எடுத்துக்கொண்டு, மானேசரின் வீட்டை நோக்கி ஓடினான்...

"சார். சார்"

"யாரது, என்ன சேதுவா? இந்தக் காலை நேரத்தில்...."

"சார் நீங்க கேட்டீங்களே 500 ரூபாய், அதைக் கொண்டாந்திருக்கேன். அம்மாவை வேலூருக்கு அழைத்துப்போயி பத்திரமா பாத்துங்க சார்".

அவருக்கு சொல்லமுடியாத ஆச்சரியம்! திகைப்பு! ஓர் ஏழைக் குமாஸ்தாவிடம், அதுவும் மாதக் கடைசியில் இவ்வளவு பணம் எப்படி இருந்தது?

"ஏது சேது இவ்வளவு பணம்"

"சார்..என் மனைவிதான் மீதம் கொடுக்கும் பணத்தில் சிக்கனமாகச் செலவு செய்து மிச்சத்தை சிறு சேமிப்பிலே போட்டிருந்தா சார், இதோ பாருங்க பாஸ் புத்தகம்"

"அப்படியா....உட்கார் சேது" நாற்காலியில் உட்கார்ந்தான்.

"சார்....அம்மாவுக்கு எப்படி?"

"சேது நன்றாகத்தான் இருக்கிறாள். அவளுக்கென்ன?" என்றவர், "தமிழ்மணி, தமிழ்மணி...." என்று கூப்பிட்டார். அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை! இது என்ன கூத்து? உயிருக்கு ஊசலாடுகிறாள் மனைவி.. இந்த மனிதன் என்ன இப்படி?

"ஏங்க, அடடே வாங்க சேது" என்றவாறு முன்னே வந்து நின்றாள் தமிழ்மணி அம்மாள்?

சேதுவுக்கு தூக்கி வாரிப்போட்டது. உயிர் ஊசலாடுகிறது என்று மானேசர் சொன்னார். ஆனால் இங்கே பார்த்தால்? "சார் என்ன சார் இது, நீங்க உடம்பு சரியில்லேன்னு சொன்னீங்களே?"

"சேது என்னை மன்னிச்சுடு. ஒரு சிறு நாடகம் நடத்தினோம் நாங்க. என்மனைவிதான் இந்த நாடகத்தின் ஆசிரியை. அவள் மாதர் சங்கத் தலைவி என்பது உனக்குத் தெரியும். அதில் ஓர் உறுப்பினள் உன் மனைவி. சங்க உறுப்பினர்களில் யார் சிறுசேமிப்பு அதிகமாக சேர்த்துள்ளாரோ அவருக்கு ஒரு 'பரிசு' அளிக்கப்போவதாக ஒரு திட்டம் தீட்டினாள் என் மனைவி. ஆனால் அதை இரகசியமாகவே வைத்துக்கொண்டு காரியத்தை ஒப்பேற்றிவிட்டாள். இந்தப் போட்டியில் உன் மனைவிக்குத்தான் முதல் பரிசு! மற்றவர்களையெல்லாம் சோதித்துப் பார்த்தாகிவிட்டது. எல்லோரையும் விட உன் மனைவி தான் அதிகமாக சேமித்து வைத்திருக்கிறாள். இந்த நாடகத்தில் என்னையும் நடிக்கச் சொன்னாள் என் மனைவி. நல்ல விஷயம்தானே என்று நானும் நடித்தேன்!"


சேதுக்கு மகிழ்ச்சி ஒரு பக்கம், சந்தேகம் ஒரு பக்கம். "என் சார், அவங்க நேராகவே செய்தியைச் சொல்லிக் கேட்கலாமே".

அதற்கு அவர் பதிலுரைக்கவில்லை. அவர் மனைவிதான் பேசினாள். "மிஸ்டர் சேது, நான் விஷயத்தை வெளியே முன்பே சொல்லியிருந்தால், "பரிசு"க்காக எங்காவது பணம் வாங்கி ஒரே நாளிலே சேமிப்பிலே கணக்கிலே போட்டுவிட்டு, அதைக் காண்பிக்கமாட்டார்களா? சிறுகச் சிறுக சேமித்திருக்கிறார்களா? சிறு சேமிப்பு வழக்கம் இயற்கையாகவே ரத்தத்தில் ஊறியிருக்கிறதா என்பதைப் பார்க்கத்தான் இப்படி ஒரு நாடகம். உண்மையான சேமிப்பை அறியவே இப்படிச் செய்தேன் அதிலே உங்க மனைவிக்குத்தான் அவார்டு கிடைச்சுது. ரொம்ப அதிஷ்டக் காரங்க நீங்க....இவ்வளவு அறிவான மனைவி இருக்கும்பொழுது உங்களுக்கென்ன குறை? போங்க..பணத்தை எடுத்துக்கிட்டு போயி உங்க மனைவிகிட்ட கொடுங்க.. அத்தோடு முதல் பரிசும் அவுங்களுக்குத்தான்னு சொல்லிடுங்க!"

..பரிசளிப்பு விழாவில் தனக்கு அளிக்கப்பட்ட பெரிய பரிசை வாங்கிக்கொண்டு வந்த ராஜத்திடம்.... அன்று இரவு விச்ராந்தியாக இருக்கும்பொழுது, மெள்ள நிமிண்டினான் சேது. "அவார்டு வாங்கிட்டிங்களா, அவார்டம்மா! எனக்கு ஒன்னும் பரிசு கிடையாதா?"

அவள் கன்னங்குழியச் சிரித்தாள். அந்தச் சிரிப்பிலே வெட்கமும்—கிரக்கமும் இழையோடியது.

பெருவாழ்வின் அடிப்படை சிறுசேமிப்பே



**“இன்றைய சந்ததியினர் கஷ்டப் பட்டு உழைப்பதற்காகவே பிறந்த் வர்கள்” என்று அமரர் நேருஜி ஒரு புறை கூறினர். “இன்றைய உழைப்புத்தான், நாளைய வள மிக்க இந்தியாவிற்கு அடிக்கல்” என்று நேருஜி அடிக்கடி கூறிய தெல்லாம் வீண்போகுமா ?**

இச் சொற்கள், இன்று இந்தியாவின் மூலைமுடுக்களிலெல்லாம் முரசறைந்தவண்ணமிருக்கின்றன. இதற்கு ஓர் உதாரணம் ‘டாலெய்புட்’ கிராமம்.

‘டாலெய்புட் கிராமம் ஒரிஸ்ஸாவில் குர்தா என்ற கோட்டத்தில் இருக்கிறது. ‘முனைந்தால் முடியாதது’ ஒன்றுமில்லை என்பதனை கடந்த ஆறு ஆண்டுகள் வரை உணராதிருந்தனர் அம்மக்கள். ஆனல் இன்றைய நிலை என்ன ? ஆறு ஆண்டுகளுக்கு முன்பிருந்த டாலெய்புட் கிராமம் வேறு, இன்றைய டாலெய்புட் கிராமம் வேறு ! இரண் டிற்கும் எவ்வளவு வேறுபாடு !

எப்படி பார்த்தாலும் டாலெய்புட் கிராமம் ஒரு சிறிய கிராமமே. 85 குடும்பங்கள் மட்டுமே கொண்ட இக் கிராமத்தின் மக்கள் தொகை 500 தான். இந்த 500 பேர்களும், ஒரு சிறந்த தலைவரின் கீழ் அயராது உழைத்ததில், அக்கிராமம் இன்று புதுப்பொலிவு பெற்று விளங்குகிறது.

### வானொலி மன்றம்

டாலெய்புட்டின் மண்வளம் மிகவும் மோசமானதுதான். இதை விவசாயத் திற்கு தகுதியுடையதாக்கி, வேளாண்மை செய்வது பெரும்பாடு. இருப்பினும் அவர்கள், வானொலி மூலம் கேட்டறிந்த அறிவை பயன் படுத்தியே தங்கள் நிலங்களை விளைநில மாக்க முன்வந்தனர். இந்த நிலத்தில் பயரும், உளுந்தும் பயிரிடலாம் என்று மேலும் கேள்விப் பட்டபோது அவர்கள் உற்சாகம் கரை புரண்டோடியது. கிராமத்திலுள்ள இளைஞர்களெல்லாம வட்டார அதிகாரிகளை அணுகி தொழில் நுட்ப உதவியும், விவசாயத்திற்கு ஏற்ற மற்ற உதவிகளும் அளிக்குமாறு வேண்டினர். அவர்களும் இவர்களின் உற்சாகத்தைக் கண்ணுற்று, அவ்விளைஞர்களுக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் செய்தனர். வட்டார அதிகாரிகள், கட்டாக் அகில இந்திய வானொலி அதிகாரிகள் ஆகியோரின் துணைக் கொண்டு கிராமத்தில் ஒரு வானொலி மன்றத்தையும் ஏற்படுத்திக் கொண்டனர். திரு சனதான் சுபதி, திரு பிரபாகர் என்பவர்களே இம் மன்றத்தின் தோற்றத்திற்கு முக்கிய மானவர்கள்.

“ இந்த நிலத்திலா பச்சைப்பயிறு!” என்று முணுமுணுத்தார்கள் முதியவர்கள்.

“ ஆம் . . . . இதில்தான், இதில் காய் கறிகூட பயிரிடலாம் ” என்று பதிலளித்தனர் இளைஞர்கள். “ இதில் பயிரிடத்தான் போகிறோம் ” என்று சபதமிட்டுக் கூறினர்கள், அவர்கள்.

### செயல் வீரர்கள்

வட்டார அதிகாரிகள், வானொலி அதிகாரிகள் மூலம் தேவையான உதவிகள், அறிவைப் பெற்று, காரியத்தில் இறங்கிவிட்டனர், டாலெய் புட் இளைஞர்கள். மனித சமுதாயத்தின் விரோதிகளான சோம்பேறித்தனம், ஏழ்மையைப் போக்க வேண்டும் என்ற வெறியுடன் செயலில் முனைந் தனர். பயன் ? இன்று டாலெய் புட்டில் 442 ஏக்கர் நிலங்களில் நெல், பயறு, உளுந்து, காய்கறிகள் விளைந்து குலுங்குகின்றன. கண் களுக்கு அழகாய், கருத்திற்கு விருந்தாய் அவை காட்சியளிப்பதை, டாலெய்புட் மக்கள் காணும்போது, அவர்களுக்கே அவை பெரிய ஆச்சரியமாயிருக்கிறது.

### வீட்டுக்கு வீடு காய்கறித் தோட்டம்

இங்கு ஒரு மாதர் சங்கம் இருக் கிறது. அது கோழிப்பண்ணையை நடத்தி வருகிறது. பெண்களுக்கென ஒரு தனி வாசகசாலைகூட நிறுவப் பட்டுள்ளது: ஒவ்வொரு வீட்டிலும் சமையலுக்கான காய்கறித் தோட்டம் இருக்கவேண்டுமென்று முயற்சி செய்ததின்பேரில், மொத்தம் 85 குடும்பங்களிலும் 85 காய்கறித் தோட்டம் இருக்கிறது.

[32-ம் பக்கம் பார்க்க]

"இதுதான் பிரசித்திப் பெற்ற பைஜ்நாத் கோயில்" என்றுர், என்னுடன் வந்த வழிகாட்டி. "இது ஒரு புராதன கோயில்; தாங்கள் உள்ளே சென்று சுவாமியை தரிசிக்கவில்லையா?"

"இல்லே.... இல்லே.. இப்போது வேண்டாம்.... நான் முதலில் பஞ்சாயத்து அலுவலகத்திற்குச் செல்ல வேண்டும். எனக்காக அங்கே எல்லோரும் எதிர்ப்பார்த்துக்கொண்டிருப்பார்கள்.. வாருங்கள் போகலாம்" என்றேன் நான்.

"சரி உங்கள் விருப்பப்படியே செய்யலாம்".

சாலேயில் நாங்கள் வலதுபுரம் திரும்பினேம். அது ஒரு கப்பிச்சாலே; மக்களாலேயே போடப்பட்டது என்று எனக்கு பிறகு தான் தெரியவந்தது.

ஒரு அழகிய கட்டிடத்தின் முன்னுல் சென்று எங்களுடைய ஜீப் நின்றது. அங்கே பைஜ்நாத் பஞ்சாயத்து உறுப்பினர் எல்லோரும் என்னே வெகு உற்சாகத்துடன் வரவேற்றனர். பைஜ்நாத் என்ற கிராமம் பஞ்சாபிலுள்ள கங்க்ரா மாவட்டத்திலிருக்கிறது; இங்குள்ள கோயில், இயற்கை வளங்களேக் காண, நாடெங்கிலுமிருந்து உல்லாசப் பிரயாணிகள் இங்கு வந்த வண்ணமாயிருக்கின்றனர்.

## சிறந்த பஞ்சாயத்து

ஆனுல், சமீபகாலமாக பைஜ்நாத் கிராமத்திற்கு கிடைத்துள்ள பெயரும், புகழும் அந்த பஞ்சாயத்தின் காரணமாகத்தான். இப்பஞ்சாயத்துத்தான் இம் மாவட்டத்தின் சிறந்த பஞ்சாயத்து என்று 1965-66 ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்டது.

பஞ்சாயத்து உறுப்பினர்களே நான் சந்தித்தபோது, அவர்களெல்லாம் தங்களுடைய வெற்றிச் சாதனேகளேப் பற்றி தெளிவாக விவரித்துக் கூறினுர்கள்; வட்டார அபிவிருத்தி அதிகாரியும் இதில் பறகு பெற்றுக் கொண்டார்; அவர்களெல்லோரும் அன்று மிகவும் சந்தோஷமாக என்னுடன் அளவளாவினுர்கள். இப் பஞ்சாயத்துத் தலேவர் திரு ஜகதீஸ் சாந்த் என்பவர்.

பைஜ்நாத்தின் மக்கள் தொகை 3,400. இது ஒரு மலேப் பாங்கான பிரதேசமாகையால், இங்குள்ள 1,491 ஏக்கர்களில், 276 ஏக்கரில் மட்டுமே விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. பொதுவாக இங்குள்ள விவசாயிகள் எல்லோரும் நெல், சோளம், கோதுமையையே பயிரிடுகின்றனர். இதுதவிர, காய்கறிகளும் இங்கு விளேவிக்கப்படுகின்றன. இப்பஞ்சாயத்துடன் சம்பந்தப்பட்ட கிராமசேவக் கடந்த 4 ஆண்டுகளாக இங்கேயே பணியாற்றி வருபவர். கடந்த சில ஆண்டுகளாக 50 சதவீதத்திற்கு மேல் உணவு உற்பத்தி அதிகரித்துள்ளதாகவும், 60 சதவீதத்திற்கு மேற்பட்ட விவசாயிகள் நவீன முறைகளின்படியே விவசாயம் செய்து வருவதாகவும் கிராம சேவக் மேலும் கூறுகிறுர்.



திரு ஏ. பி.

## உரப் பற்றுக்குறை

"உணவில் சுயதேவையைப் பூர்த்தி செய்துக்கொள்ள ஏதேனும் இடையூறுகள் இருக்கின்றனவா?" நான் கேட்டேன்.

"ரசாயன உரங்களின் விலேயுயர்வாலேயே விவசாய உற்பத்தி பெரிதும் பாதிக்கப்படுகிறது. ஒரு டன் நைட்ரஜன் உரம் ரூ. 310-க்கு விற்றதானது, இப்போது ரூ. 395-க்குத் தான் கிடைக்கிறது. மேலும் விலே நாளுக்கு நாள் உயரலாம்..யார் கண்டார்கள்? இது தவிர, ரசாயன உரங்களுக்கு அரசாங்கம் அளித்து வந்த உதவியும் ரத்து செய்யப்பட்டு விட்டது. அடுத்த ஆண்டிற்குள், உணவுத் துறையில் இப்பஞ்சாயத்து சுயதேவையைப் பூர்த்தி செய்துக்கொள்ள எல்லா ஏற்பாடுகளேயும் செய்துவந்தோம்; ஆனுல் அவையெல்லாம் இப்போது தரைமட்டமாகி விட்டன".

அதிக விலேக்கொடுத்து ரசாயன உரங்களே வாங்க முன்வந்தாலும், உரம் கிடைப்பதில்லே யென்றே இங்குள்ளவர்கள் எனக்குக் கூறினர்.

"நவீன விவசாய முறையில் பயிர் செய்யப்படவில்லே என்று இவ்வளவு நாட்களும் சொல்லிக்கொண்டிருந்தார்கள். இனிமேல் அவற்றை பின்பற்றி விவசாயம் துவங்கிய போது, எனனயின புதுப்புது பிரச்னேகள் கிளம்பி விட்டன என்ன செய்வது?" என்று குறைபட்டுக்கொண்டார் ஒரு பஞ்சாயத்து உறுப்பினர்.

"மண்வளப் பரிசோதனே செய்யும் ஆராய்ச்சிக்கூடம் இங்கிருந்து 11 மைல் தூரத்தில்தானே இருக்கிறது..அங்கே இலவசமாகத்தானே மண் பரிசோதனே செய்கிறுர்கள். அதை பயன்படுத்திக் கொள்ளக்கூடாதோ?" என்றேன் நான்.

"நாங்கள் சோதனேக்காக மண்ணே அனுப்பிவைத்தோம் ..பொறுத்திருந்துதான் பார்த்தோம். ஆனுல் சோதனேயின் முடிவுதான் இன்னும் எங்களுக்குக் கிடைக்கவில்லே" என்று சிரித்துக் கொண்டே கூறினுர் ஒருவர்.



ஸோம்.

"பாசன வசதிகளெல்லாம் எப்படியிருக்கிறது?"

"நாங்கள் மழையையே நம்பி பயிர் செய்து வருகிறோம். நீர்ப்பாசனத் துறையின் கட்டுப்பாட்டில், சில பாசன வசதித் திட்டங்களும் இருக்கின்றன. அவற்றால் பாசனம் நடந்து வருகிறது."

### கல்வி, கூட்டுறவு, சுகாதாரம்

கல்வியைப் பொருத்தவரையில் பைஜ்நாத்திற்கு எவ்வித பிரச்னையும் கிடையாது. இங்கே இரண்டு ஆரம்பப்பள்ளிகள் ஒரு உயர்நிலைப்பள்ளி, ஒரு ஆதாரப்பள்ளி, ஒரு பாலிடெக்னிக், ஒரு கல்லூரியாக கல்விக் கூடங்களுக்கு இங்கே ஒரு குறையுமில்லை.

இங்கே மூன்று கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. அவையெல்லாம் நல்லமுறையில் செயல்பட்டு வருகின்றன.

பைஜ்நாத்திற்கு மின்சார வசதியிருக்கிறது. குடிதண்ணீர் குழாய் மூலம் வினியோகிக்கப்படுகிறது. நல்ல சுகாதார வசதியிருக்கிறது. ஆனால் வைத்திய வசதியே இங்கு இல்லை. ஓர் ஆயுர்வேத மருந்தகம் இருந்தும் அதனால் எவ்வித பயனும் இருப்பதாகத் தெரியவில்லை. வைத்தியத்திற்காக பாலம்பூர் (11 மைல்) அல்லது மண்டி (40 மைல்) என்ற இடங்களுக்கு செல்லவேண்டியுள்ளது. வட்டாரத்தைச் சார்ந்த ஆதார சுகாதார நிலையம் கூட, இங்கிருந்து 40 மைல் தூரத்தில்தான் இருக்கிறது.

### பஞ்சாயத்தின் வருமானம்

கிராமத் தொழில்கள் சரிவர கவனிக்கப்பட்டு வருகின்றன. இங்கு காலணிகள் தயாரிப்போருக்கு பஞ்சாயத்து நவீனக் கருவிகளை அளித்து உதவியுள்ளது. தேயிலை தோட்டத்திற்கு நல்ல வாய்ப்பிருக்கிறது. ஆனால் அதில் பஞ்சாயத்து போதிய உற்சாகம் காட்டுவதாகத் தெரியவில்லை.

"உங்கள் பஞ்சாயத்திற்கு கிடைக்கக்கூடிய முக்கிய வருமானம் என்னவென்று கூறுவீர்களா?" பஞ்சாயத்துத் தலைவரைக் கேட்டேன.

"பஞ்சாயத்து சில கடைகளையும்,வீடுகளையும் கட்டியுள்ளது அவைமூலம் ஒழுங்காக வாடகை வந்துகொண்டிருக்கிறது. வீட்டுவரி மூலம் ஆண்டொன்றுக்கு ரூ. 775 கிடைக்கிறது. இப்போது மீன் வளர்ப்புத் துறையிலும் ஈடுபட்டு வருகிறோம். 100 அடி நீளம் 50 அடி அகலம் 6 அடி ஆழத்தில் ஒரு குளம் கட்டியுள்ளோம். 1000 மீன் குஞ்சுகள் இதில் வளர்க்கப்பட்டு வருகின்றன. அடுத்த ஆண்டில் இது கணிசமான வருவாயைத் தரும் என நம்புகிறோம்" என்று பதிலளித்தார் பஞ்சாயத்துத் தலைவர்.

"எனக்கு அந்த குளத்தைப் பார்க்கவேண்டும்போலிருக்கிறது" என்று என் ஆவலை வெளியிட்டேன்.

### சங்கீத ரசிகர்

"அங்கே உங்களை அழைத்துப் போவதில் எங்களுக்கு பெரு மகிழ்ச்சியே..ஆனால் அதற்கு முன் ஒரு சிறு வேண்டுகோள். எங்களுடைய சங்கீத வித்யாலயாவின் சார்பாக ஒரு சங்கீத நிகழ்ச்சிக்கு தங்களை நான் வரவேற்கிறேன்" என்று உவகையுடன் கூறினர், பஞ்சாயத்துத் தலைவர்.

"மிக்க நன்றி! எனக்கும் சந்தோஷமே."

உடனே ஹார்மோனியம், தபலா போன்ற சங்கீத கருவிகளெல்லாம் கொண்டு வரப்பட்டன. அங்குள்ள பள்ளி ஆசிரியர் ஒருவர் சாஸ்திரீய சங்கீதத்தை வெகு இனிமையாக, திறமையாக பாடினர். ஒரு பஞ்சாயத்து உறுப்பினர், கிராமிய சங்கீதத்தை பாடியபோது எழுந்த கரகோஷம் அடங்குவதற்கு வெகு நேரமாயிற்று. வட்டார அலுவலர் ஒருவர் ஒரு பஜனை கீதத்தைப் பாடினர்.

அந்த புன்னகைத் ததும்பும் முகங்களை நான் பெருமிதத்துடன் கண்டபோது, இந்தியாவையே அங்கு கண்டது போலாயிற்று. இதையடைவதற்குத்தான் இன்றைய இந்தியா முயன்று வருகிறது. பைஜ்நாத் மக்களிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு கிளம்பியபோது, எனக்கு சற்று வருத்தமாகத்தானிருந்தது.

---

" பஞ்சாயத்து ராஜ் " இதழிலிருந்து இடம் பெறுபவை :
பக்கங்கள் : 15, 16, 17, 18, 29, 30, 31, 32

**Articles reproduced from " Panchayat Raj " on pages: 15 to 18 and 29 to 32**

**பிரச்னைகள் தீர**

[29-ம் பக்கத் தொடர்ச்சி]

முந்திரிப் பயிரினால் அன்னியச் செலாவணி கிட்டும் என்பதைக் கேள்வியுற்ற டாலெய்புட் மக்கள், உடனே அதுபற்றி விசாரிக்க வட்டார அலுவலகத்திற்கு சென்றுவிட்டனர். இவர்களின் உற்சாகத்தைக்கண்ட அதிகாரிகள், அரசாங்க நிலமான 5 ஏக்கர் நிலத்தையும் முந்திரி சாகுபடிக்காக ஒதுக்கி கொடுத்து, ஏனைய எல்லா உதவிகளையும் செய்து தந்தனர்.


**மீனளம்**

மீன் வளர்ப்புத் துறையில் டாலெய்புட் இளைஞர்களுக்கு அதிக கவனம் உண்டு. மீன்களை விற்றது மூலம் ரூ. 2,300 லாபம் கிடைத்தபோது அவர்களின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. மேலும் இலாபத்தை பெருக்க, புதிதாக ஒரு குளத்தை புதுப்பித்து அதில் 5,000 மீன்குஞ்சுகளை வளர்த்து வருகின்றனர்.

சத்துணவுத் திட்டத்தின்கீழ் 50 குழந்தைகளுக்கும் 20 பேறுகால மாதர்களுக்கும் சத்துணவு அளிக்கப் பட்டு வருகிறது.

ஓரளவிற்கு அகலமாகவே அமைக்கப்பட்டுள்ள டாலெய்புட் சாலைகள் அழகியத் தோற்றத்துடன் சுத்தமாக காட்சியளிக்கின்றன. பள்ளிக்கூடத் தோட்டத்தில் மா, வாழைப்போன்ற பழ மரங்கள் அழகுக்கு அழகு செய்து வருகின்றன.

கிராமங்கள் மலிந்துள்ள இந்தியாவில், ஏதோ ஒரு கிராமத்தில் நடைபெற்று வருவது மற்ற கிராமங்களின் பிரச்னைகளை தீர்த்துவிடாது தான். டாலெய்புட்டில் நடப்பது போன்ற காரியங்கள் வேறு கிராமங்களிலும் நிச்சயமாக நடக்கலாம். அவ்வாறே நடந்து வந்தால், இந்தியாவை முன்னோக்கியுள்ள பிரச்னைகளில், பாதி தானாகவே தீர்ந்து போகும்.




# மணிக்கு 1300 குழந்தைகள்!

இந்நாட்டில் ஒவ்வொரு மணி நேரத்திலும் 1,300 குழந்தைகள் பிறக்கின்றன. அதாவது இந்தியாவின் மக்கள் தொகை ஒவ்வொரு நாளும் 30,000 பேர்கள் விதம் அதிகரித்துக்கொண்டே வருகிறது. இவ்வாறு பெருகிக்கொண்டே போகுமாயின், இந்தியாவின் மக்கள் தொகை, ஆண்டொன்றுக்கு 12 மிலியன் விதம் அதிகமாகிக்கொண்டே போகும். உலகத்தின் மொத்த நிலப் பரப்பில் இந்தியாவின் நிலப்பரப்பு 2·2 சதவிதம் மட்டுமே; ஆனால் உலக மக்கள் தொகையில் 12·8 சதவீதத்திற்கு மேற்பட்டவர்கள் இங்குதான் இருக்கிறார்கள். நம் நாட்டில் சுகாதாரப்பணிகள் பெருகிவருவதால், இறப்புவிகிதமானது ஆயிரத்திற்கு 48-ஆக இருந்தது. ஆயிரத்திற்கு 16-ஆக குறைந்துவிட்டது. எனவே பிறப்பு விகிதமானது, ஆயிரத்திற்கு 18-ஆக குறைக்கப்படா விட்டால், ஐந்தாண்டு திட்டங்கள் மூலம் கிடைக்கும் நன்மைகளெல்லாம், பெருகிவரும் மக்களுக்கே போதுமானதாக இருக்காது.

*கருத்தடை வளையங்கள்*

எனவே பெருமளவில் குடும்பக் கட்டுப்பாடு நிலையங்களை நாடெங்கிலும் ஏற்படுத்துவது மிகவும் அவசியமாகிறது. இவ்வாண்டு ஜனவரியில், 16,970 குடும்பக் கட்டுப்பாடு நிலையங்கள் இருந்தன. இவை குடும்பக்கட்டுப்பாடு பற்றி யோசனைகள் கூறி வருவதுடன், ரப்பர் கருவிகளையும் அளித்து வருகின்றன. இதில் 14,830 நிலையங்கள் கிராமங்களில் தானிருக்கின்றன. இந்தியாவிற்கு கருத்தடைவளையங்களே சாலச்சிறந்தவை என்று விரிவான ஆராய்ச்சிக்குப்பிறகு முடிவுசெய்யப்பட்டுள்ளது. 1965-ம் ஆண்டில், அரைமிலியன் கருத்தடை வளையங்கள் பெண்களுக்கு பொருத்தப்பட்டுள்ளன. 1975—76-ல், ஆண்டு ஒன்றுக்கு 13 மிலியன் வளையங்கள் பொருத்தப்படவேண்டும் என்பது திட்ட இலக்காகும். இவற்றை தேர்ந்த டாக்டர்களே பொருத்துகின்றனர்: நாளொன்று 15,000 பிளாஸ்டிக் வளையங்களை உற்பத்தி செய்யக் கூடிய ஒரு தொழிற்சாலையொன்று நிறுவப்பட்டுள்ளது. கருத்தடை அறுவைச் சிகிச்சைக்கும் போதிய ஊக்கமளிக்கப்பட்டு, அறுவைச் சிகிச்சைகளும் நடைபெற்று வருகின்றன.

இவற்றின்மூலமாக, இந்தியாவின் மக்கள்தொகை 1975-ல் 605 மில்லியனாகவும், 1985-ல் 693 மில்லியனாகவும் இருக்க வேண்டும் என்பது திட்டத்தின் இலட்சியமாகும்.

பஞ்சாயத்து அரசிதழ்
PANCHAYAT GAZETTE

(பஞ்சாயத்து அபிவிருத்திபற்றிய அரசாங்க ஆணைகள், விதிகள் முதலியவற்றின் சுருக்கம் இந்தப் பகுதியில் இடம் பெறுகிறது.)

——(o)——

## நான்காவது ஐந்தாண்டுத் திட்டம்—பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களின் விவசாயம், விலங்கின வளர்ச்சி, மீனளத் திட்டங்கள்—யூனியன்களால் தயாரிக்கப்பட்ட திட்ட வரைவுகள்—உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன.

## Fourth Five-Year Plan—Formulation Schemes Under Agriculture, Animal Husbandry and Fisheries by Panchayats and Panchayat Unions—Draft Plans proposed by Unions—Orders issued.

விவசாயத்திற்கு முக்கிய முதன்மையளித்து, விவசாய உற்பத்தியைப் பெருக்குவது மக்களின் பொறுப்பாகும். பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்களுக்குள்ள மிக முக்கியமான பொறுப்புக்களில், உணவு உற்பத்தியைப் பெருக்குவதும் ஒன்றுகுமென 1958-ம் ஆண்டு தமிழ் நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் பீடிகை வலியுறுத்திக் கூறுகிறது. தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்திலுள்ள 65-வது பிரிவின்படி, அதனுடைய பிரதேசத்தில், விவசாய வளர்ச்சியைக் கவனிப்பது, பஞ்சாயத்து யூனியனின் பொறுப்பேயாகும். இதுதவிர சமுதாய வளர்ச்சித் திட்டத்தில் அடங்கும், தேசிய வளர்ச்சிப் பணித் திட்டங்களில், குறிப்பாக விவசாயம், விலங்கின வளர்ச்சி, மீனளம் ஆகிய திட்டங்களை நிறைவேற்ற, மேற்கொள்ளவேண்டிய எல்லா நடவடிக்கைகளையும்கூட சட்டத்திலுள்ள 66-வது பிரிவின்படி, அரசாங்கம், பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைத்துள்ளது.

(2) கிராம நல தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2460-ல் குறிப்பிடப்பட்டுள்ள உற்பத்தித் திட்டங்களை மூன்றுவது திட்டகாலத்தில் நிறைவேற்றுவதற்காக, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் அரசாங்க மானியமாக, ரூபாய் இரண்டு லட்சத்தை, அரசாங்கம் அளித்தது. இம் மானியத்துடன் பஞ்சாயத்து யூனியன் ரூ 50,000-ஐ நன்கொடையாக சேர்த்து, அரசாங்கத்தால் யோசனை கூறப்பட்டுள்ள திட்டங்களை நிறைவேற்றின. இவ்வாறு திட்டங்களை நிறைவேற்றுகையில் பிரதேசத்திற்குப் பிரதேசம் ஏற்படக்கூடிய மாறுபாடுகளும், பல்வேறு பிரதேசங்களுக்கு வேண்டியுள்ள விசேஷத் தேவைகளும் கருத்தில் கொள்ளப்படவில்லை. மாநிலம் முழுவதற்கும் ஒரே சீரான முறை பின்பற்றப்பட்டது. இதனுல் எதிர்பார்த்த பலனை முழுமையாக அடைய முடியாமல் போய்விட்டது.

(3) உள்ளூர் நிலைமைகளுக்கு எற்ற வேலைத் திட்டங்களை உருவாக்கவும், நான்காவது திட்டத்தை தயாரிப்பதிலேயே பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடும், உற்பத்தித் திட்டங்களைத் தயாரித்து, அவற்றை அரசாங்கத்தின் பரிசீலனைக்காகவும், அவற்றின்பேரில் உத்தரவுகள் பிறப்பிப்பதற்காகவும், அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கும்படி கிராம நல நிர்வாகத் துறையின் 1965-ம் வருடம் செப்டம்பர் மாதம் 17-ம் தேதியிட்ட அரசாங்கக் குறிப்பாணை எண் 158605-ல் பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டன. (மேற்குறிப்பிட்டுள்ள குறிப்பாணையின் தமிழாக்கத்தை, "கிராமநலம்" செப்டம்பர் மாதம் 1965 இதழ், பகுதி II பக்கம்(i)-ல் காண்க.) பஞ்சாயத்து யூனியன்களால் அனுப்பி வைக்கப்பட்ட உற்பத்தித் திட்டங்களெல்லாம், கிராம வளர்ச்சி நெறியாளர், விவசாய நெறியாளர், விலங்கின வளர்ச்சி நெறியாளர், மற்றும் மீனளத்துறை நெறியாளர் ஆகியோருடன் கலந்து விரிவாகப் பரிசீலனை செய்யப்பட்டன. இந்த பரிசீலனையின் விளைவாக, நான்காவது திட்டக்காலத்தில், விவசாய மானியத்தைக் கொண்டு நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்களெல்லாம், இவ்வாணையின் இணைப்பு 1-ல் உள்ளவாறு இருக்க வேண்டுமென்று, அரசாங்கம் இப்போது ஆணை பிறப்பிக்கிறது.

(4) இணைப்பு I-ல், விவசாய அபிவிருத்தி, விலங்கின வளர்ச்சிப்பற்றிய திட்டங்களெல்லாம் இருவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது: அவை "இன்றியமையாத் திட்டங்கள்" (Essential), "விருப்பத் திட்டங்கள்" (Optional) என இருவகையாகும். சில திட்டங்களை நிறைவேற்றும் வேலை பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன; வேறு சில, மூன்றுவது திட்டத்திலிருந்தது போன்றே பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கப் படுகின்றன. பெருவாரியான பஞ்சாயத்து யூனியன்களால் கொண்டு வரப்பட்டுள்ள திட்டங்களில், எல்லா வட்டாரங்களிலும் செயல்படுத்தப்படக் கூடியவைகளும், உற்பத்தியைப் பெருக்குவதற்கு மிக அவசியம் எனக் கருதப்படுகிற திட்டங்களும், "இன்றியமையாத்" திட்டங்களின் வரிசையில் வகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. எனவே இத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள செலவினங்களின் உச்ச வரம்புகளை குறைக்காமலும், அவற்றில் எதுஒன்றையேனும் விட்டுவிடாமலும், அத் திட்டங்களையெல்லாம் பஞ்சாயத்து யூனியன்கள் நிறைவேற்ற வேண்டும். இருப்பினும், "கிராம சகாயக்", "உள்ளூர் உர ஆதார அபிவிருத்தி செய்தல்—பசுந்தாள் உர விதைகள் வழங்குதல்" ஆகிய இரு திட்டங்களிலும், உள்ளூர் தேவைகளை அனுசரித்து, மாவட்ட விவசாய அதிகாரி மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருடன் கலந்தாலோசித்த பின் உச்ச வரம்பைக் குறைத்துக்கொள்ளலாம்.

(5) பெருவாரியான அளவில் செயல்படுத்த முடியாத திட்டங்களெல்லாம் "விருப்பத்" திட்டங்களாகும்; அவற்றிலிருந்து, யூனியன்களுக்கு தேவையான திட்டங்களை பஞ்சாயத்து யூனியன்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். இவ்வகையில் ஒவ்வொரு திட்டத்திற்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ள செலவின உச்ச வரம்பானது, அதற்குமேல் போகாமல் சரிவர பின்பற்றப்பட வேண்டும்.

(6) இணைப்பு I-ல் குறிப்பிடப்படாமல், ஆனால் தங்கள் பகுதியின் குறிப்பிட்ட தேவைகளை பூர்த்தி செய்யும் அளவிற்கு, மேலும் திட்டங்களை வகுத்துக் கொள்ளும் வகையில் பஞ்சாயத்து யூனியன்களுக்கு வசதியளிக்க, "பிரதேசங்களுக்குரிய சிறப்புத் திட்டங்கள்" (Special Schemes Specific to the areas) என்ற தலைப்பில் ரூ. 40,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இத் தொகையைப் பயன்படுத்திக் கொள்வதற்கு பஞ்சாயத்து யூனியன்கள் விரிவான திட்டங்களைத் தயாரித்து, அவற்றை மாவட்ட அபிவிருத்தி மன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும்; அபிவிருத்தி மன்றங்கள், இக் கோரிக்கைகளை பரிசீலனை செய்து, அவற்றையெல்லாம் தொகுத்து கிராம வளர்ச்சி நெறியாளருக்கு அனுப்பி வைக்கவேண்டும். "இன்றியமையாத் திட்டங்கள்" அல்லது "விருப்பத்" திட்டங்களில், செலவழிப்பதற்காக அவற்றுக்காக ஒதுக்கப்பட்டுள்ள உச்ச வரம்பை அதிகரித்துக் கொள்ள வேண்டுமென்று விரும்பினாலும், அதற்காக இத்தொகையை யூனியன்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால் இத்திட்டங்களில் சேர்க்கப்பட்டுள்ள கட்டிட வேலைகளுக்காக இத்தொகையை உபயோகிக்கக்கூடாது. ஆனால் மாவட்ட அபிவிருத்தி மன்றங்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட மட்டில், அப்படிப்பட்ட செலவினங்கள் கிராம வளர்ச்சி நெறியாளரின் முன் அனுமதியின்றி செய்யப்படக்கூடாது.

(7) இணைப்பு ஒன்றில் வரிசைப்படுத்தப்பட்டுள்ள வேலை திட்டங்களை நிறைவேற்றவேண்டி, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிடமும், 1966-ம் ஆண்டு எப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் தொடங்குகிற ஐந்தாண்டுக் காலத்திற்கு ரூ. 2 லட்சத்தை மானியமாக வழங்கும். ஆனால், இந்த மானியத்தைப் பெற, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் 50,000 ரூபாய்க்கு குறையாமல் ஈட்டு நன்கொடையாகத் திரட்டித்தர முன்வரவேண்டும். அதனால், நான்காவது திட்டக்காலத்தில் உற்பத்தித் திட்டங்கள் செயல்படுத்துவதற்காக வேண்டி, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கு இரண்டரை லட்சம் ரூபாய் கிடைக்க ஏதுவாகும்.

(8) இணைப்பு ஒன்றில் சொல்லப்பட்டுள்ள திட்டங்களையும் கிடைக்கக்கூடிய மொத்த ஆதாரங்களையும் கருத்தில் கொண்டு, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் ஓர் உற்பத்தித் திட்டத்தினை உருவாக்க வேண்டும். அத் திட்டத்தில்:—

(அ) விவசாயம், விலங்கின வளர்ச்சி பற்றிய அவசியமான வேலைத்திட்டங்கள் சேர்க்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) 'விருப்பத்' திட்டங்களில், விவசாயம் கால்நடை வளர்ச்சி, மீனளம் ஆகிய துறைகளின்கீழ் அந்தந்த பிரதேசங்களுக்கு எவை எவை உபயோகமானதாக இருக்குமோ, அவைகளைத் தேர்ந்தெடுத்து, சேர்த்துக் கொள்ள வேண்டும்.

(இ) ரூ. 40,000-க்கு "பிரதேசத்திற்கு விசேஷமாக உரித்தான சிறப்புத் திட்டங்களை" (Special Schemes Specific to the areas) உருவாக்கி அவைகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

**9.** மேற்சொன்ன அ, ஆ, இ ஆகிய மூன்று அம்சங்களின் கீழ் மேற்கொள்ளப்படுகிற வேலைத் திட்டங்களுக்கான மொத்த நிதி அளவானது, அரசாங்க மானியம் மூலமானதாகவும், பிரதேச அமைப்புகளின் மூலமாக, நன்கொடை மூலமாகவும், கிடைக்கக்கூடிய தொகையின் அளவுக்கு சமமாக இருக்கவேண்டும். எக்காரணத்தை முன்னிட்டும், அந்த அளவிற்குமேல் போகக்கூடாது. பஞ்சாயத்து யூனியன் உற்பத்தித் திட்டம் 1966-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 15-ம் தேதிக்குள் தயாராகிவிடவேண்டும். அத்திட்டத்தின் நகல்கள் வருவாய்க்கோட்ட அதிகாரி, மாவட்ட விவசாய அதிகாரி, மாவட்ட விலங்கின அதிகாரி, மாவட்ட கலெக்டர், மற்றும் கிராம வளர்ச்சி நெறியாளர் ஆகியோருக்கு தகவலுக்காக அனுப்பப்படவேண்டும். "சிறப்புத் திட்டங்களை" உடனடியாக உருவாக்க இயலாத தாகையால் இந்த வேலைத் திட்டங்களுக்காக ஒரு மொத்தமாக 40 ஆயிரம் ரூபாயை ஒதுக்கி வைத்துவிட்டு, உற்பத்தித் திட்டத்தை உருவாக்கவும், இந்த விவசாய திட்டங்களுக்கான விவரங்களை பின்னால் 1966-67 ஆண்டிற்குள்ளாக தயாரித்து, அவை சம்பந்தமான கோரிக்கைகளை மாவட்ட அபிவிருத்தி மன்றங்களுக்கு அனுப்பிவைக்குமாறும், பஞ்சாயத்து யூனியன்களுக்கு அரசாங்கம் யோசனை கூறுகிறது.

(10) இணைப்பு ஒன்றில் கண்டுள்ள பல்வேறு திட்டங்களை செயல்படுத்துகின்ற முறை, அளவு எல்லாம் பற்றிய விவரங்கள் இணைப்பு இரண்டில் சொல்லப்பட்டுள்ளன. பஞ்சாயத்து யூனியன், உற்பத்தித் திட்டத்தை உருவாக்கும் பொழுது, பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் அதில் சொல்லப்பட்ட விவரங்களை கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும் என்று அரசாங்கம் அந்த நிறுவனங்களுக்கு யோசனை கூறுகிறது. பல்வேறுபட்ட திட்டங்களை செயல்படுத்தும் விஷயத்தில் பஞ்சாயத்து யூனியன்களுக்கு உதவியாக இருக்கும் பொருட்டு, மேற்கொண்டும் தேவையான யோசனைகளை விளக்கமான முறையில், அவைகளுக்கு கொடுக்குமாறு, கிராம வளர்ச்சி நெறியாளரை அரசாங்கம் கேட்டுக்கொள்கிறது.

(11) மூன்றாவது திட்டகாலத்தில், பஞ்சாயத்து யூனியன்களும், பஞ்சாயத்துக்களும் குறிப்பிட்டதொரு வேலைத் திட்டத்தை நிறைவேற்ற மேற்கொள்கையில், செலவில் அவர்களது பங்குத் தொகையை செலுத்திவந்தன. வேலை நிறைவேற்றப்பட்ட பிறகு அரசாங்க மானியத்தைப் பெற்று, பின்பு திரும்ப தங்கள் கணக்கில் ஈடு செய்துகொண்டன. இவ்வாறு கணக்கு வைப்பதில் சில சிக்கல்கள் ஏற்பட்டன. ஐந்தாண்டுக் கால அளவில் எவ்வளவு நன்கொடையாக கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறதோ, அந்தத் தொகையை முன்கூட்டியே பஞ்சாயத்து யூனியன்கள் செலுத்திவிடவேண்டும் என்று இப்பொழுது யோசிக்கப்பட்டுள்ளது. ஆகவே, நான்காவது திட்டத்தில் பஞ்சாயத்து உற்பத்தித் திட்டத்தின்கீழ் உள்ள பல்வேறு வேலைத் திட்டங்களைச் செயல்படுத்து வதற்காக, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும், உற்பத்தி நிதிக்காக, உள்ளூர் நிதி டிபாசிட் I-ல் ஒவ்வொரு ஆண்டும், முன்பணமாக, பத்தாயிரம் ரூபாய்க்குக் குறையாமல் மொத்தமாக ஒரு பங்குத் தொகையை செலுத்த வேண்டுமென அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது. இந்தத் தொகையை ஒரு மொத்தமாக 10 ஆயிரம் ரூபாயாக, ஒரே தடவையில் செலுத்தலாம். அல்லது நான்கு கால் ஆண்டுத் தவணைகளாக 2,500 ரூபாய் என்ற விகிதத்தில் நான்கு தவணைகளாகவும் கட்டலாம். 1966-67-ம் ஆண்டுக்கு முதல் இரண்டு கால் ஆண்டுகளுக்கான பங்கு தொகையை 1966-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ம் தேதி முடியும் கால் ஆண்டுக் காலத்தில் செலுத்தி விடவேண்டும். இந்தப் பங்குத் தொகையில் பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள வேலைத் திட்டங்களுக்காக, பஞ்சாயத்துக்களின் பங்குத் தொகையும் அடங்கியுள்ளது. முன்பு செய்து வந்தது போலவே, அரசாங்க மானியத் தொகையை வேலையை நிறைவேற்றி முடிந்த பிறகு, பெற்றுக்கொண்டு திரும்ப தங்கள் கணக்கில் ஈடு செய்து கொள்ளவேண்டும்.

(12) தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் 119 (3)-வது பிரிவில் கண்டுள்ள விதிமுறைகளை, பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்களின் கவனத்திற்குக் கொண்டுவர அரசாங்கம் விரும்புகிறது. கூடுதலான உற்பத்தித் திட்டங்களுக்காக வேண்டி, நான்காவது திட்டத்தில் குறைந்தபட்சமாக தேவைப்படுகிற 50 ஆயிரம் ரூபாய்க்கு மேலும் அந்த நிறுவனங்கள் நிதி திரட்டும் என அரசாங்கம் நம்புகிறது.

(13) பஞ்சாயத்துக்கள் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் சம்பந்தப்பட்ட வரையில், கிராமப் பஞ்சாயத்துக்கள் தம் பங்கினைச் செலுத்த வேண்டியுள்ள ஒரு குறிப்பிட்ட வேலைத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு அவைகளுக்கு அனுமதி அளிப்பதற்கு முன்பேயே, கிராமப் பஞ்சாயத்துக்கள் தரவேண்டியுள்ள பங்குத் தொகையை பஞ்சாயத்து யூனியன்கள் அவைகளிடமிருந்து முன் பணமாகவே வசூல் செய்து, அந்தத் தொகையை பஞ்சாயத்து யூனியன் கணக்குகளில் வரவு வைத்துக்கொள்ள வேண்டும்.

(14) விவசாயக் கருவிகள் வழங்குதல், பழச்செடி நாற்றுகள் அளித்தல், பொலி இனக்காளைகள் விநியோகம் போன்று குறைந்த விலையில் தனிப்பட்ட நபர்களுக்கு அளிக்கப்படும் விஷயத்தில், அதனால் பயன் பெறுவோர் களிடமிருந்து (Beneficiaries) நன்கொடைத் தொகையை முன் பணமாகவே வசூல் செய்துகொள்ள வேண்டும். இணைப்பு I-ல் குறிப்பிட்டுள்ள அளவுக்கு குறைந்த அளவிற்கான தொகையை பஞ்சாயத்து யூனியன்களோ பஞ்சாயத்துக்களோ வசூல் செய்யக்கூடாது.

(15) பொதுவாக, ஒவ்வொரு ஆண்டுக்கும் வரையறை செய்யப்படுகிற செலவினமானது, திட்டக்கால முழுமைக்கும் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டில் கிட்டத்தட்ட ஐந்தில் ஒரு பாகமாக இருக்கவேண்டும் என அரசாங்கம் எதிர்பார்க்கிறது. ஆனால், அரசாங்க மானியத்தைப் பொறுத்த வரையில், மாநில வரவு செலவுத் திட்டத்தில் (State Budget) முன்பேயே நிதி வசதி செய்யப்பட்டுள்ள கீழ்க்கண்ட அம்சங்களில், தங்களுடைய செலவினங்களை, பஞ்சாயத்து யூனியன்கள் கட்டுப்படுத்திகொள்ளவேண்டும் :—

ஒவ்வொரு யூனியனுக்கு :

| | | ரூ. |
|---|---|---|
| விவசாயம் | .. | 30,200 |
| விலங்கின வளர்ச்சி | .. | 6,300 |

(16) பல்வேறு வேலைகளுக்கான செலவுத்தொகையானது கீழ்க்கண்ட முறையில் பற்று வைக்கப்பட வேண்டும் :—

### விவசாயத் திட்டங்கள்

| முதல் நிலை—இரண்டாம் நிலை வட்டாரங்கள் | இரண்டாம் நிலைக்குப் பிந்திய வட்டாரங்கள் |
|---|---|
| 31. விவசாயம்-ஒ-அபிவிருத்தித் திட்டங்கள்—II —நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் திட்டங்கள்—எஸ்—பஞ்சாயத்து யூனியன்களுக்கு மானியங்கள். (முதல் நிலையும், இரண்டாம் நிலையும்) | 31. விவசாயம்—ஒ-அபிவிருத்தித் திட்டங்கள்—II. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் திட்டம்—டி. பஞ்சாயத்து யூனியன்களுக்கு மானியங்கள். (இரண்டாம் நிலைக் குப் பிந்திய வட்டாரங்கள்) |
| (i) இன்றியமையாத் திட்டங்கள். | (i) இன்றியமையாத் திட்டகள். |
| (ii) விருப்பத் திட்டங்கள். | (ii) விருப்பத் திட்டங்கள். |

### விலங்கின வளர்ச்சியின் கீழ் வருகிற திட்டங்கள்

| முதல்நிலை—இரண்டாம் நிலை வட்டாரங்கள் | இரண்டாம் நிலைக்குப் பிந்திய வட்டாரங்கள். |
|---|---|
| 37. சமுதாய அபிவிருத்தித் திட்டம், தேசிய வளர்ச்சிப்பணி, உள்ளூர் அபிவிருத்தி வேலைகள்—II—அபிவிருத்தித் திட்டங்கள்—(ii) நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் திட்டங்கள்—(பி) விலங்கின வளர்ச்சி—3-பஞ்சாயத்து யூனியன்களுக்கு உதவி மானியம். | 33. விலங்கின வளர்ச்சி—எச். அபிவிருத்தி வேலைகள்—II—நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் திட்டங்கள்—Z— இரண்டாம் நிலைக்குப் பிந்திய வட்டாரங்களுக்கு பஞ்சாயத்து யூனியன்களுக்கு மானியங்கள் |
| (i) இன்றியமையாத் திட்டங்கள். | (i) இன்றியமையாத் திட்டங்கள் |
| (ii) விருப்பத் திட்டங்கள். | (ii) விருப்பத் திட்டங்கள் |

இன்றியமையாத் திட்டங்கள் இந்த ஆணையின் இணைப்பு I-ன் (அ) பகுதியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன. வருப்பத் திட்டங்கள் (பி) பகுதியில் குறிக்கப்பட்டுள்ளன. செலவுத் தொகையை ஈடுசெய்ய அனுமதி வழங்குகையில், வருவாய்க் கோட்ட அதிகாரி தகுந்த தலைப்பின்கீழ், அதாவது திட்டத்தின் தன்மையை ஒட்டி சம்பந்தப்பட்ட கணக்குத் தலைப்பின்கீழ், இன்றியமையாத் திட்டம் அல்லது விருப்பத் திட்டத்திற்கு பற்று எழுதப்படுகிறதா என்று கவனித்துக்கொள்ள வேண்டும். செலவுத் தொகையை ஈடுசெய்து வழங்குகையில் ஒவ்வொரு திட்டத்தின்கீழ் அரசாங்க மானிய நிதி வரையறையையும், திட்டத்திற்கான வரையறையையும் கருத்தில் கொள்ளவேண்டும். 1966-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27-ம் தேதியிட்ட டி. ஆர். டி. (கணக்குகள்—1) அறிக்கை எண் 38770-ல் பிற்சேர்க்கை இரண்டை வருவாய்க் கோட்ட அதிகாரிகள் பார்க்கவும். 1966-67-ல் இயங்கி வந்துள்ள இரண்டாம் நிலைக்கு பிந்திய வட்டாரங்களின் பட்டியல் அந்த பிற்சேர்க்கையில் கொடுக்கப்பட்டுள்ளது. வட்டாரங்களின் நிலையின் அடிப்படையில் செலவினங்களை வரிசைப்படுத்துகையில், வருவாய்க் கோட்ட அதிகாரிகள் இந்தப் பட்டியலைப் பயன்படுத்திக் கொள்ளலாம். பஞ்சாயத்து யூனியன்கள் கணக்கு வைக்கும் முறை பற்றியும், திட்டங்களுக்கான செலவினத்தை படிப்படியாக எப்படிச் செய்தல் என்பது பற்றியும் விரிவான அறிவிப்புகளை பிறப்பிக்குமாறு, கிராம வளர்ச்சி நெறியாளர் கேட்டுக்கொள்ளப் படுகிறார்.

(17) மாற்றியமைக்கப்பட்ட தலைப்புகளுக்கான நிதி ஒதுக்கம், மானிய மிச்சத்தை மறு ஒதுக்கம் செய்வதின் மூலம் ஏற்பாடு செய்யப்படும். கருவூலக் கணக்குகளில் மேற்சொன்ன திருத்தியமைக்கப்பட்ட தலைப்புகளை துவக்குமாறு கருவூல அதிகாரிக்கு தக்க உத்தரவுகளைப் பிறப்பிக்குமாறு சென்னை மாநில கணக்கு ஆய்வுத் தலைவருக்கு (Accountant-General) வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

(18) பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் நிறைவேற்றவேண்டிய மீனைத் திட்டங்கள் பற்றி தனியாக உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன.

(19) எல்லா பஞ்சாயத்து அபிவிருத்தி வட்டாரங்களிலும், 1966-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1-ம் தேதி முதல் இந்த உத்தரவு அமுலுக்கு வரும் என அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது. உற்பத்தித் திட்டங்கள் பற்றி 1966-ம் ஆண்டு மே மாதம் 7-ம் தேதியிட்ட கிராம நல-தல நிர்வாகத்துறையின் அரசாங்க ஆணை எண் 1180-ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளை ரத்து செய்து, அவற்றிற்குப் பதிலாக இந்த ஆணை அமுலுக்கு வரும்.

# இணைப்பு I

## விவசாயம், விலங்கின வளர்ச்சி, மீனளம் ஆகியவற்றின் அபிவிருத்தி பற்றி பஞ்சாயத்து யூனியன்களின் வேலைத் திட்டம்

ஒத்துக்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்கள்—அவற்றின் நிதி ஒதுக்கீடுகளுடன்.

| வரிசை எண்ணும் திட்டத்தின் விவரமும். (1) | அரசாங்க மானியம். (2) | செலவுக்கு வரையறை (அரசாங்கமானியமும், பஞ்சாயத்து யூனியன் பஞ்சாயத்துக்களின் பங்குத் தொகையும் சேர்த்து.) (3) | குறிப்புகள். (4) |
|---|---|---|---|
| **அ. இன்றியமையாத் திட்டங்கள் (ESSENTIAL SCHEMES)** | | | |
| | ரூ. | ரூ. | |
| 1. பஞ்சாயத்துத் தோட்டங்களை ஏற்படுத்துதலும், பராமரித்தலும். | 20,000 | 30,000 | கிராமப் பஞ்சாயத்துக்களால் செய்யப்பட வேண்டியவை. செலவில் மூன்றில் ஒரு பங்கை, அவை தங்கள் நிதிகளிலிருந்து ஏற்றுக் கொள்ள வேண்டும். |
| 2. விவசாய டிப்போக்கள், கிடங்குகள் கட்டுதல். | 20,000 | 20,000 | முழுமையும் மானியமாகவே அளிக்கப்படுகிறது. (விவரங்களுக்கு இணைப்பு II பார்க்கவும்.) |
| 3. கிராம சகாயக் பணி. | 30,000 | 30,000 | ஒரு குவிண்டால் பொறுக்கு விதைகள் விநியோகிக்க ரூ. 5 என்று அளவில் கிராம சகாயக்குகளுக்கு நிதி உதவி வழங்குவதற்காக கிராம சகாயக் திட்டத்தை செயல்படுத்த எவ்வளவு தொகை உண்மையாக தேவைப்படுகிறதோ, அந்தத் தொகைக்குதான் வசதி செய்யப்பட வேண்டும், |
| 4. உள்ளூர் எரு ஆதாரங்களை அபிவிருத்தி செய்தல், தனிப்பட்ட நபர்களுக்கு பசுந்தாள் உர விதைகள் வழங்கல். | 3,000 | 3,000 | 15 சத விகித குறைந்த விலையில் பசுந்தாள் உர விதைகள் விநியோகம் செய்யப்பட வேண்டும். இதற்கு உண்மையாக எவ்வளவு தேவைப்படுமோ அந்த நிதி அளவு என்னவென்று பார்க்க வேண்டும். அதே சமயத்தில், அந்தப் பிரதேசத்தில் பசுந்தாள் உர அபிவிருத்திக்கான சாதகக்கூறுகள் உண்டா என்பதும் பார்க்கப்பட வேண்டும். |
| 5. தனிப்பட்டவர்களுக்கு விவசாயக் கருவிகள் வழங்கல். | 7,500 | 7,500 | பயிர்ப் பாதுகாப்பு உபகரணங்களையும், தரமான கருவிகளையும் 50 சதவிகித குறைந்த விலையில் வழங்குதல். |
| 6. காய்கறிச் செடிகள், நாற்றுகள், பழச்செடிகள் கொண்ட நாற்றங்கால் விதைப் பண்ணைகள். | 2,500 | 2,500 | கிராம சேவக்குகள் இப்படிப்பட்ட காய்கறி விதைப் பண்ணைகளை ஏற்படுத்தவும், விதைகளை இனமாக வழங்கவும், முழுமானியம் அளிக்கப்படுகிறது. |
| 7. விவசாய வளர்ச்சி பற்றிய செய்முறை விளக்கப் பண்ணைகள். | 15,000 | 15,000 | நெல், சோளம், வேர்க்கடலை பற்றி செய்முறை விளக்கப் பண்ணைகள் நிறுவ வேண்டும். விவசாயிகளுக்கு இணைப்பு II-ல் கண்டுள்ளபடி உதவி அளிக்கப்பட வேண்டும். |
| 8. விலங்கின மருந்தகங்கள் கட்டுதல்.— | | | |
| (அ) புதிதாக கட்டப்படுபவை | 30,000 | 40,000 | விவரங்களுக்கு இணைப்பு II பார்க்கவும். |
| (ஆ) பழையவற்றை அபிவிருத்தி செய்தல். | | | |
| (1) முதல் கட்டம். | 10.000 | 10,000 | |
| (2) இரண்டாவது கட்டம். | 10,000 | 10,000 | |
| மொத்தம் .. | 1,48,000 | 1,68,000 | |

| வரிசை எண்ணும் திட்டத்தின் விவரமும். (1) | அரசாங்கமானியம். (2) | செலவுக்கு வரையறை (அரசாங்கமானியமும், பஞ்சாயத்து யூனியன் பஞ்சாயத்துக்களின் பங்குத் தொகையும் சேர்த்து.) (3) | குறிப்புகள். (4) |
|---|---|---|---|
| **பி. விருப்பத் திட்டங்கள் (OPTIONAL SCHEMES).** | | | |
| | ரூ. | ரூ. | |
| 1. பஞ்சாயத்துகளுக்கு விவசாயக் கருவிகள் வழங்கல். | 750 | 1,500 | கிராமப் பஞ்சாயத்துக்களால் செயல்படுத்தப்பட வேண்டும். கருவிகளின் விலையில் 50 சதவிகித அளவை பஞ்சாயத்துக்கள் அளிக்க வேண்டும். |
| 2. பஞ்சாயத்துக்களில் வைக்கப்பட்டுள்ள கருவிகளைப் புதுப்பித்தலும் பராமரித்தலும். | 500 | 1,000 | கிராமப் பஞ்சாயத்துக்களால் செயல்படுத்தப்பட வேண்டும். அதற்கான செலவில் 50 சதவிகித அளவை, பஞ்சாயத்துக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். |
| 3. பழவிதைகள், காய்கறி விதைகளை தனிப்பட்டவர்களுக்கு விநியோகம் செய்தல். | 2,000 | 2,000 | தென்னம் பிள்ளைகளையும் சேர்த்து, பழவிதைகளை 25 சதவிகித குறைந்த விலையிலும், 50 சதவிகித குறைந்த விலையில் காய்கறி விதைகளையும் விநியோகம் செய்வதற்காக. |
| 4. விசையினால் இயங்குவதும், பெரிய கனரகக் கருவிகளும் தவிர, மற்ற கருவிகளை பஞ்சாயத்து யூனியன்கள் வாங்குதல். | 750 | 1,500 | தரமான விவசாயக் கருவிகளை, வட்டாரத் தலைமையிடத்திற்கும், கிராம, சேவக்குகளுக்கும் வாங்குவதற்காக. |
| 5. பஞ்சாயத்து யூனியன்களுக்கு கருவிகள்—விசையினால் இயங்குபவை போன்றவை. | 7,000 | 14,000 | ஒன்று அல்லது இரண்டு (Knapsack) விசைத் தெளிப்பான்களும், ஒரு calyx இயந்திர டிரில்லும், அல்லது கையால் இயங்கும் "போரிங்" இயந்திரமும் வாங்க. |
| 6. கருவிகளைப் பாதுகாக்க பொதுவான இடம். | 5,000 | 10,000 | செலவில் 50 சதவிகிதத்தை சம்பந்தப்பட்ட கிராமப் பஞ்சாயத்துக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். இரண்டு கூடங்களைக் கட்டவும், அவற்றிற்கு வேண்டிய உபகரணங்கள் வாங்கவும். |
| 7. பஞ்சாயத்து யூனியன்கள் தோட்டங்கள் ஏற்படுத்துதல். | 2,500 | 5,000 | பஞ்சாயத்து யூனியன் தோட்டங்களில் பயிரிட ஒரு கிணறு தோண்டி, ஒரு பம்பு செட்டு பொருத்துவதற்காக. |
| 8. விஸ்தரிப்பு உதவிகள்-கண்காட்சிகள்-போட்டிகள் நடத்துதல். | 1,250 | 2,500 | பொருட்காட்சிகள், போட்டிகள் நடத்துதல்; பயிர்ப்பாதுகாப்பு முறைகள் பற்றி சிறு வெளியீடுகள் அச்சடித்து, விநியோகம் செய்தல். |
| 9. இனவிருத்தி செய்யும் காளைகளை தனிப்பட்டோருக்கு விநியோகம் செய்தல். | 7,500 | 7,500 | இனவிருத்தி செய்யும் காளைகளுக்காகும் செலவில் 50 சதவிகிதத்தைச் சமாளிக்க; அதனால் பயன்பெறுவோர் மிச்ச 50 சதவிகிதத்தைத் தர வேண்டும். |
| 10. தீவன அபிவிருத்தித் திட்டம்-பாசனம் பெற்று எப்பொழுதும் வளரக் கூடிய புல்வகைகள், செடி வகைகள். | 5,000 | 5,000 | அப்படிப் பயிரிடும் ஒரு செண்ட் நிலத்திற்கு இரண்டு ரூபாய் வீதம் பயிரிடுவோருக்கு முழு மானியம் அளிக்க. |
| 11. மாட்டுக் கொட்டகை கட்டுதல். | 7,500 | 7,500 | தனிப்பட்டோருக்கும், பஞ்சாயத்துகளுக்கும் ஒரு கொட்டகைக்கு 150 ரூபாய்க்கு மேற்படாத முறையில், 25 சதவிகித குறைந்த விலையில் அளிப்பதற்காக. |

| வரிசை எண்ணும் திட்டத்தின் விவரமும். (1) | அரசாங்க மான்யம். (2) | செலவுக்கு வரையறை (அரசாங்கமானியமும், பஞ்சாயத்து யூனியன் பஞ்சாயத்துக்களின் பங்குத் தொகையும் சேர்த்து.) (3) | குறிப்புகள். (4) |
|---|---|---|---|
| 12. செம்மறியாடுகள் விநியோகித்தல். | 1,500 | 1,500 | ஒரு மிருகத்திற்கு 15 ரூபாய் என்ற குறைந்த அளவில் பஞ்சாயத்துக்கள் தேர்ந்தெடுக்கும் தனிப்பட்ட நபர்களுக்கு செம்மறியாடுகள் வழங்க. |
| 13. பரிவர்த்தனை முறையில் சேவல் குஞ்சுகளை விநியோகம் செய்தல். | 1,500 | 1,500 | உள்ளூர் சேவல் குஞ்சுகளுக்குப் பதிலாக, இன விருத்தி செய்யக்கூடிய சேவல் குஞ்சுகள் பரிவர்த்தனை செய்யும் செலவைச் சமாளிக்க. |
| 14. தனிப்பட்ட முறையில் கோழிப் பண்ணை வளர்ப்போருக்கு நிதி உதவி. | 7,500 | 7,500 | ஒரு கோழிப்பண்ணை ஏற்படுத்த ஒரு நபருக்கு 500 ரூபாய்க்கும் மேற்படாத அளவில் 50 சதவிகித நிதி உதவி அளித்தல். |
| 15. கிராமப் பஞ்சாயத்துக்களில் கோழிப் பண்ணைகள் ஏற்படுத்துதல். | 2,000 | 4,000 | ஒரு கிராமக் கோழிப்பண்ணைக்கு வரையறை ரூ. 2,000 ஆகும். மொத்தச் செலவில் 50 சதவிகிதத்தை கிராமப் பஞ்சாயத்துக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். |
| 16. ஆண் பன்றிகள் விநியோகம் செய்தல். | 2,000 | 2,000 | ஒரு மிருகத்திற்கு 10 ரூபாய் என்ற குறைந்த விலையில், கிராமப் பஞ்சாயத்துக்கள் தேர்ந்தெடுக்கும் தனிப்பட்டோருக்கு. |
| 17. மீனளம். | .. | .. | அனுமதிக்கப்பட்ட வேலைத் திட்டங்களின் பட்டியலும் மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் பற்றியும் உத்தரவுகள் தனியாகத் தெரிவிக்கப்படும். |
| மொத்தம் .. | 54,250 | 74,000 | |

**சி. சிறப்புத் திட்டங்கள்**

| | | | |
|---|---|---|---|
| பிரதேசத்திற்கான சிறப்புத் திட்டங்கள் | .. | 40,000 | பிரதேசத்தின் குறிப்பிட்ட தேவைகளை பூர்த்தி செய்வதற்கான சிறப்புத் திட்டங்களை செயல்படுத்த. |
| மொத்தம் .. | .. | 40,000 | |

## இணைப்பு II

### இணைப்பு 1-ல் கொடுக்கப்பட்டுள்ள பல்வேறு உற்பத்தித் திட்டங்களை உருவாக்கி நடத்துவது பற்றிய அறிவிப்புகள்

# இன்றியமையாத் திட்டங்கள்

பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள புறம்போக்கு நிலங்களில் பஞ்சாயத்துத் தோட்டங்களை ஏற்படுத்திப் பராமரித்தல்.—பழமரங்கள், விறகுக்கான மரங்கள், தீவனத்திற்கு வேண்டியவை, பசுந்தாள் உரத்திற்கான மரங்கள் ஆகியவற்றை ஏற்படுத்துதலே, இத்திட்டத்தின் நோக்கமாகும். பஞ்சாயத்துத் தோட்டங்களை ஏற்படுத்தி அவைகளைப் பராமரிப்பதற்கான மீளும் இனச் செலவுகள், மீளா இனச்செலவுகள் ஆகிய இரண்டையும் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதிகளிலிருந்தே சமாளித்துக் கொள்ளலாம். மரங்கள் வைத்ததிலிருந்து மூன்றாண்டுக் காலம் வரைக்குத்தான் பராமரிப்புச் செலவுகளைச் செய்யலாம். தென்னஞ்செடிகளுக்கு மட்டும், கலெக்டர்களின் உத்தேசப்படி 5 ஆண்டுகளுக்கு பராமரிப்புச் செலவு செய்யலாம். 1964-65, 65-66-ம் ஆண்டுகளில் வைக்கப்பட்டுள்ள மரச் செடிகளுக்குக்கூட குறிப்பிட்ட மூன்று ஆண்டு காலத்திற்காக அளிக்கப்படும் இந்த நிதி உதவியைச் செய்யலாம். மொத்தம் 30 ஆயிரம் ரூபாயில், பத்தாயிரம் ரூபாயை புதிய, பழைய தோட்டங்களைப் பராமரிப்பதற்காக ஒதுக்கி செலவு செய்யலாம். இந்தத் திட்டத்தை ஒட்டி ஏற்படும் பல்வேறு செலவினங்களை ஒழுங்குபடுத்துவதற்கான படிவங்கள் (Forms) தனியாக அனுப்பப்படுகின்றன.

2. விவசாய டெப்போ—கிடங்குகள் கட்டுதல்.—எல்லா விவசாய சம்பந்தமான பொருள்களை விநியோகம் செய்வதற்கு கேந்திரமாகத் திகழ்வது விவசாய டிப்போ

தான். ஆனால், தற்பொழுது, அநேகமாக எல்லா வட்டாரங்களிலும், இந்த டிப்போக்கள் அரசாங்கத்திற்கு சொந்தமான கட்டிடத்தில் இருந்தாலும் சரி, அல்லது அவை வாடகைக் கட்டிடமானாலும் சரி, விதைகள், கிருமிநாசினிகள் மற்ற இதுபோன்ற பொருள்களை தகுந்த முறையில் "ஸ்டோர்" செய்வதற்கு ஏற்ற போதிய இடவசதி படைத்தனவாக இல்லை. நல்ல முறையில் இதற்கான டிப்போ கட்ட, கட்டிடங்கள் கட்டுவதற்குத்தான் இதற்காக நிதிவசதி செய்யப்பட்டுள்ளது. ஆனால், இந்த விவசாய டிப்போ கட்டுவதில் கீழ்க்கண்ட வரிசைக் கிரமத்தை அனுசரிக்கவேண்டும்:—

(அ) இப்பொழுதுள்ள டிப்போ வாடகைக் கட்டிடத்தில் இருந்தாலும், அல்லது இப்பொழுதுள்ள இடவசதி போதியதாக இல்லாமல் இருந்தாலும், அதற்குப் பதிலாக ஒரு பிரதான டிப்போ கட்டுதல் ;

(ஆ) வட்டாரத் தலைமை பீடத்தில், தேவை என்று கருதப்பட்டால் கூடுதலாக ஒன்று (அதாவது இரண்டாவது) டிப்போ—கிடங்கு கட்டுதல்.

(இ) தேவையாக இருந்தால், சிறு டிப்போக்கள் கட்டுதல். இந்தத் திட்டத்தை உருவாக்கும்பொழுது, கருத்தில் கொள்ளவேண்டிய விதிமுறைகள் வருமாறு:—

(1) அனுமதியளிக்கப்பட்டுள்ள மாதிரி கட்டிட அமைப்புப்படிதான் கட்டிடங்கள் கட்டவேண்டும். இந்த மாதிரி அமைப்புமுறை முன்பே எல்லா கலெக்டர்களுக்கும் கிராம வளர்ச்சி நெறியாளர் அலுவலகத்தின் 12—2—1966 தேதியிட்ட எண் 92859/65 ஜி-2-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(2) பஞ்சாயத்து யூனியன் தலைமை அலுவலகம் உள்ள ஊரில்தான் பிரதான டிப்போவை கட்டப்படவேண்டும்.

(3) விவசாய டிப்போக்கள் அரசாங்கத்திற்குச் சொந்தமான கட்டிடங்களில் முன்பே இயங்கிவரும் இடங்களில், மேற்கொண்டும் கூடுதலாக ஒரு விவசாய டிப்போ—கிடங்கு கட்டும் வேலை தொடங்கு முன்பாகவே, அப்படிக் கட்டலாம் என்பதற்கு மாவட்டக் கலெக்டர் அங்கீகாரம் அளித்திருக்கவேண்டும்.

3. **கிராம சகாயக் பணி.**—மூன்றாவது திட்டக்காலத்தில் என்ன நடைமுறை கையாளப்பட்டு வந்ததோ அதே நடைமுறைதான் இந்த ஆண்டும் இக் கிராம சகாயக் திட்டத்தை உருவாக்கிச் செயல்படுத்துவதில் கையாளப்படவேண்டும். பொறுக்கு விதைகளை விநியோகம் செய்வதற்காக, கிராம சகாயக்குக்கு குவிண்டால் ஒன்றுக்கு 5 ரூபாய் என்று நிதி உதவி அளிக்கப்படவேண்டும். இந்தச் செலவுக்கு இப்படி ஒரு நிர்ணயம் விதிப்பது, கீழ்க்கண்ட இடங்களுக்கு ஏற்றவாறு, அதாவது (அ) இந்த நிதி வசதியைப் பயன்படுத்திக்கொள்ள முடியாதவாறு உள்ள புஞ்செய் நிலங்கள் பகுதியிலும் (ஆ) கூடுதலாக நிதி உதவி தேவைப்படும் நஞ்செய் நிலங்கள் பகுதிகளிலும் சற்று மாறுபடும். நிர்ணயிக்கப்பட்டுள்ள இந்த விகிதத்தில் இப்படி சற்று மாறுதல் செய்யவேண்டியிருந்தால், அதை மாவட்டக் கலெக்டர், மாவட்ட விவசாய அதிகாரி ஆகியோருடன் கலந்தாலோசித்து (அ) கூடுதலாக உள்ள நிதியை மற்ற இன்றியமையாத அல்லது விருப்பத் திட்டங்களுக்கு மாற்றியும் (ஆ) முன்பே நிர்ணயிக்கப்பட்டுள்ள ரூ. 40 ஆயிரத்தை கிராம வளர்ச்சி நெறியாளர் அனுமதிபெற்று பயன்படுத்திக் கொள்வதின் மூலமும் செய்யலாம்.

4. **உள்ளூர் எரு ஆதாரங்கள்—தனிப்பட்ட விவசாயிகளுக்கு பசுந்தாள் உர விதைகள் விநியோகித்தல்.**—மண்வளத்தை மேம்படுத்த, பசுந்தாள் உர உற்பத்தி செய்ய, விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில், பசுந்தாள் உர விதைகளை 15 சதவிகித குறைந்த விலையில் அவர்களுக்கு விற்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் வெற்றி பசுந்தாள் உர விதைகள் தேவைப்படுகிற அளவுக்கு அவர்களுக்கு கிடைப்பதைப் பொறுத்ததுதான் உள்ளது. ஆகவே, தங்களுடைய தேவைகளை பசுந்தழை விதைப்பண்ணைகளை அமைப்பதன்மூலம் பஞ்சாயத்து யூனியன்கள் சமாளிக்கவேண்டும் என்று யோசனை கூறப்படுகிறது. பல்வேறு வட்டாரங்களில், நடைபெறும் விதை உற்பத்தித் திட்டங்களையெல்லாம் மாவட்ட விவசாய அதிகாரிகள் ஒன்றிணைத்து, பசுந்தாள் உர விதை உற்பத்தியில் தன்னிறைவு காண்பதற்கான முறையில் திட்டம் போட்டு செயலாற்றவேண்டும். இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி வரையறையை "கிராம சகாயத் திட்டத்திற்குப் போலவே மாற்றிக்கொள்ளலாம்.

5. **விவசாயிகளுக்கு விவசாயக் கருவிகள் வழங்கல்.**—பயிர்ப்பாதுகாப்புக் கருவிகளை பிரபலப்படுத்தவும், 'மோல்டு போர்டு' கலப்பைகளையும் சேர்த்து, இதுபோன்ற மனித சக்தியை விரயமாக்காமல் தடுக்கும் விவசாயக் கருவிகளை பிரபலப்படுத்தவும், அவைகளை பாதி விலையில் விநியோகம் செய்தலே இத்திட்டத்தின் நோக்கம். அந்தந்தப் பிரதேசங்களுக்கு எந்தமாதிரி கருவிகள் ஏற்றவையோ, அவைதான் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படவேண்டும். இதற்காக செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டில், பெருவாரியான தொகையை, பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள் விநியோகம் செய்தலுக்கு உபயோகப்படுத்திக்கொள்ளவேண்டும் என்று யோசனை கூறப்படுகிறது. ஆனால், இப்படிக் கருவிகளை விநியோகம் செய்யும்பொழுது, அவை ஒரு சிலருக்கு மட்டும் கிடைக்கும் படி இல்லாமல் விநியோகம் சீரான முறையிலும், சரிசமமான முறையிலும் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். இந்தத் திட்டத்தின்கீழ் விநியோகம் செய்யக்கூடிய கருவிகள் என்னென்ன என்பதை விளக்க பட்டியல் ஒன்று தனியாக அனுப்பப்படும்.

6. **காய்கறி நாற்றுகள், பழச்செடி நாற்றுகள் கொண்ட நாற்றங்கால்கள் ஏற்படுத்துதல்.**—காய்கறி நாற்றுகளுக்கும், பழச்செடி நாற்றுகளுக்கும், பலன் தரும் மரவகைகளின் கன்றுகளுக்கும் ஏகப்பட்ட கிராக்கி உள்ளது. பப்பாளி, மாதுளை, எலுமிச்சை, கொய்யா, முந்திரி, புளி, வேம்பு, கத்திரிக்காய், உருளைக்கிழங்கு போன்றவைகளை கொஞ்சம் செலவிலேயே கிராமத்திலே உற்பத்தி செய்யமுடியும். ஆகவே, மூன்றிலிருந்து ஐந்து செண்டுகள் வரை நாற்றங்கால்கள் ஏற்படுத்தி, விவசாயிகளுக்கு அவைகளை இனமாக விநியோகம் செய்வதற்காக, ஒவ்வொரு கிராம சேவக்குக்கும், இத்திட்டத்தின் கீழ் ஒவ்வோர் ஆண்டும் ரூ. 50 அளிக்கப்படும். இந்த நாற்றங்கால்களை பஞ்சாயத்துத் தோட்டங்களிலோ அல்லது தனிப்பட்டவரின் நிலங்களிலோ ஏற்படுத்தலாம். விதை, எரு, பூச்சி மருந்துகள் ஆகிய இவற்றிற்கான செலவுகளுக்காகத்தான் இந்த 50 ரூபாய் அளிக்கப்படுகிறது. கிராம சேவக் தனிப்பட்ட அக்கறை எடுத்து இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். முதல்படியாக, இந்த வேலையைச் செய்வதற்குப் போதிய வசதிகள் உள்ள இடங்களில், இரண்டு அல்லது மூன்று கிராம சேவக் குழுக்களிடம் இந்த வேலையை ஒப்படைத்து, அக்குழுக்களை இவ்வேலையைச் செய்ய சொல்லலாம்.

7. **விவசாய வளர்ச்சிப் பணிகள்—செயல்முறை விளக்கப் பண்ணைகள்.**—செயல்முறை மூலம் விளக்கிப் பலன் காட்டுதல் தான் விவசாய வளர்ச்சிப் பணிகளில் மிகவும் முக்கியமானதாகும். இத்துறையில் கிராம சேவக்கின் பங்கு மிகவும் முக்கியமானது. இத்திட்டத்தின்கீழ், ஒவ்வொரு கிராம சேவக்கும் ஒவ்வொரு ஆண்டும் குறைந்தபட்சமாக, நெல், சோளம், தினை வகைகள், வேர்க்கடலைப் பயிர்களில் ஆறு செயல்முறை விளக்கங்களைச் செய்து காட்டவேண்டும். மற்றப் பயிர்களைப் பற்றிய

செயல்முறை விளக்கங்கள் மற்ற வளர்ச்சித் திட்டங்களின் கீழ் எடுத்துக்கொள்ளப்படும். விவசாயத்துறை சிபாரிசு செய்துள்ள தீவிர விவசாயத் திட்ட முறைகளைக் கொண்டே இச் செயல்முறை விளக்கங்கள் செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு செயல்முறை விளக்கப் பண்ணைகளும் ஓர் ஏக்கருக்கு குறைந்திருக்கக்கூடாது. வேண்டிய விவசாய சாதனங்கள் வாங்க, ஒவ்வொரு விவசாயிக்கும் கீழ்க்கண்ட முறையில் நிதி உதவி அளிக்கலாம்:—

| | ரூ. |
|---|---|
| 1. நெல் | 50 |
| 2. பாசனம் செய்யப்பட்ட சோளப் பயிர்கள். | 30 |
| 3. வேர்க்கடலை— | |
| மழையினுல் பயிர் செய்யப்பட்டது | 50 |
| நீர்ப்பாசனம் செய்து பயிரிடப் பட்டது. | 80 |

இந்த செயல்முறைகளுக்கு, சரியான கணக்குகளை கிராம சேவக்குகள் வைத்துக்கொள்ளவேண்டும்.

**8. விலங்கின மருந்தகங்கள் கட்டுதல்.**—மூன்றுவது திட்டக்கால முடிவில் விலங்கின மருந்தகங்கள் இல்லாத பஞ்சாயத்து யூனியன்களில், அல்லது பஞ்சாயத்து யூனியன் மருந்தகங்கள் முனிசிபல் பிரதேசத்திலிருந்து, பஞ்சாயத்து யூனியனின் கிராமிய எல்லைப் பிரதேசத்துக்குள் அப்படிப்பட்ட ஒரு மருந்தகம் இருக்கவேண்டியது அவசியம் என்று கருதுகிற பஞ்சாயத்து யூனியன்களில், புதிதாக விலங்கின மருந்தகங்கள் கட்டுவதற்கு இந்த நிதியானது ஒதுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் பிரதேசத்திலும் குறைந்தபட்சமாக ஒரு விலங்கின மருந்தகம் இருக்கவேண்டுமென்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

விலங்கின மருந்தகம் கட்டுகின்ற மொத்தச் செலவு ரூ. 40 ஆயிரத்துக்கு மேல் போகக்கூடாது. அதற்கென்று ஒத்துக்கொள்ளப்பட்ட மாதிரி அமைப்பில்தான் கட்டிடம் கட்டப்பட வேண்டும். இதற்கான அரசாங்க மானியம் ரூ. 30 ஆயிரம். கட்டிடம் கட்டுகின்ற இடத்திற்கு மாவட்ட கலெக்டரின் அங்கீகாரம் பெறுமல், மருந்தகம் கட்டுவதற்கு அனுமதி வழங்கக்கூடாது.

**விரிவுபடுத்துதல்—முதல் கட்டம்.**—பஞ்சாயத்து யூனியன் பிரதேசத்திற்குள் பழைய மாதிரியில் கட்டப்பட்டு இயங்கி வருகிற விலங்கின மருந்தகங்களுக்கு கூடுதலான வசதிகள் செய்து தருவதற்காக, இந்த நிதி வசதி செய்யப்பட்டுள்ளது. Trevis-ம், ஆபரேஷன் செய்யும் கூடமும் இந்த கூடுதல் வசதிகளாகும்.

இந்த நிதி வசதியைப் பயன்படுத்திக் கொள்வதற்கு, மாவட்டக் கலெக்டரின் திட்டவட்டமான அனுமதியைப் பெற்றாக வேண்டும்.

**விஸ்தரித்தல்—இரண்டாவது கட்டம்.**—இந்த நிதி வசதியிலிருந்து, மூன்றுண்டுகளுக்கு மேலாக எங்கு விலங்கின மருந்தகங்கள் இயங்கி வருகின்றனவோ, அந்த இடங்களில் சிப்பந்திகளுககு குடியிருப்புகள் கட்டிக்கொடுக்கலாம். பஞ்சாயத்து யூனியனில் ஒரு விலங்கின மருந்தகமாவது கட்டி, அதற்கு வேண்டிய வசதிகளை எல்லாம் செய்து முடிந்த பிறகுதான், சிப்பந்திகளுக்கு குடியிருப்புகள் கட்டிக்கொடுக்கும் வேலையை எடுத்துக் கொள்ள வேண்டும்.

## பி. விருப்பத் திட்டங்கள்

**1. பஞ்சாயத்துகளுக்கு கருவிகள் வழங்குதல்.**—கடந்த திட்டக் காலத்தில் வாங்கிய கருவிகள் நல்ல நிலைமையிலே இருக்குமாகையால், கூடுதலாக வேண்டியுள்ள கருவிகளுக்காகவும், கெட்டுப்போய் உபயோகிக்க முடியாத நிலையில் உள்ளவற்றிற்கு மாற்றுக் கருவிகள் வாங்கவும், சிறு நிதி வசதியே இப்பொழுது செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்தும் நல்ல நிலையில் உள்ள ஒன்று அல்லது இரண்டு தெளிப்பான்களை வைத்திருக்க வேண்டும். அத்துடன், பண்ட்பார்மர் (Bund former), பர்மீஸ் செட்டுன், பட்லர் ரிட்ஜ் கலப்பை, ஜுனியர் ஹோ, விதைகளைக் கொட்டை நீக்கி போன்றவற்றை, சாதாரணமாக ஒரு விவசாயி தனக்காக வாங்கி வைத்துக்கொள்ள முடியாதாகையால், இந்த நிதியிலிருந்து, அவைகளை வாங்கி விவசாயிகளுக்கு வாடகை அடிப்படையில் கொடுக்கலாம். உள்ளூர் நிலங்களுக்குப் பொருத்தமாக இருக்கக் கூடியதும், கிராக்கி இருக்கக்கூடியதுமான கருவிகளையும், உபகரணங்களையும் மட்டுமே வாங்க வேண்டும். கருவிகள் பட்டியலும், அவற்றை விற்பனை செய்வோர் பட்டியலும் தனியாக அனுப்பப்படும்.

**2. பஞ்சாயத்துக்களில் உள்ள கருவிகளைப் பழுது பார்த்தலும், பராமரித்தலும்.**— பஞ்சாயத்துக்களுக்கு வழங்கப்பட்ட எல்லாக் கருவிகளும் உபகரணங்களும் நல்ல நிலைமையில் வைத்துக்கொள்ளப்பட வேண்டும். இந்தக் கருவிகளை பழுது பார்க்க அண்மையில் உள்ள கிராம வளர்ச்சிப் பயிற்சி நிலையம், மற்ற பஞ்சாயத்து யூனியன்கள், தொழில் துறையைச் சேர்ந்த தொழில் பட்டறைகள், தொழில் பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றின் முழு சேவையையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வகையில் குறிப்பிட்ட வரையறைக்கு மேல் ஏற்படுகின்ற எந்த செலவும், கிராமப் பஞ்சாயத்து நிதிகளிலிருந்தே சமாளிக்கப்பட வேண்டும்.

**3. பழச்செடிகள், காய்கறி விதைகளை தனிப்பட்டோருக்கு விநியோகம் செய்தல்.**—தென்னங்கன்றுகள் உள்பட பழச்செடிகளை, அடக்க விலையில் 75 சதவிகித விலையிலும், காய்கறி விதைகளை 50 சதவிகித விலையிலும், இதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி வசதியைப் பயன்படுத்திக்கொண்டு, விநியோகம் செய்யவேண்டும். தனிப்பட்ட நபர் ஒருவருக்கு அதிகபட்சமாக அளிக்கப்படவேண்டிய நிதி உதவி ரூ. 15. பெருவாரியான நபர்கள் இத்திட்டத்தினுல் பயன் அடையவேண்டும் என்ற கருத்தில் தான், இந்த வரம்பு நிர்ணக்கப்பட்டுள்ளது. வேண்டிய பழச்செடிகளுக்கு ஆன தேவையை முன்கூட்டியே குறித்த காலத்தில் அனுப்பவேண்டும். பழச் செடிகளை எந்தெந்தக் காலங்களில் விநியோகம் செய்யவேண்டுமோ அந்தந்தக் காலங்களில் தவருது விநியோகம் செய்ய வேண்டும். இந்தத் தேவைகளை விவசாயத் துறையினிடமிருந்து தான் பெறவேண்டும். அவை, விவசாயத் துறையினிடமிருந்து கிடைக்கவில்லையென்றுல், அதற்கான சான்றிதழை அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டு, விவசாயத் துறை அங்கீகாரம் அளித்துள்ள தனிப்பட்ட பண்ணைகளிடமிருந்து அவற்றைப் பெறலாம். பழமரங்கள் வைக்க எந்த ஆண்டிலும், ஜனவரி முதல் மார்ச் மாதம் வரை உள்ள கால அளவு பொருத்தமானதல்ல. ஆகவே, அந்தக் காலத்தில், பழச் செடிகள் (தென்னங்கன்றுகள் உட்பட) சம்பந்தப்பட்ட மட்டில் இத்திட்டத்தின்கீழ் எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக்கக்கூடாது,

**4. விசையினுல் இயங்குவதும், கனரக கருவிகளும் தவிர பஞ்சாயத்து யூனியன்களுக்கு மற்ற கருவிகள் வழங்குதல்.**—மூன்றுவது திட்டக் காலத்தில் வாங்கப்பட்ட கருவிகள் பொதுவாக மேலும் உபயோகப்படுத்த லாயக்கான நிலையிலேயே உள்ளன. இப்பொழுது செய்யப்பட்

டுள்ள நிதி வசதி, கூடுதலாக கருவிகள் வாங்கவும், தேய்ந்துபோன கருவிகளை மாற்றியமைக்கவுமே. கிராம சேவக்குகளுக்கு விவசாயக் கருவிகள் வழங்குவதற்கு தற்போதுள்ள திட்டத்தின்கீழ், தனியாக நிதி வசதி ஒன்றும் செய்யப்படவில்லை. ஆகவே எங்கெங்கு கிராம சேவக்குகளுக்கு அவசியமாக தேவையான கருவிகள் வழங்கப்படாமல் இருக்கிறதோ, அங்கு இத்திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதியிலிருந்து அக்கருவிகளை வாங்கி அவர்களுக்கு வழங்கலாம். வட்டாரத் தலைமை இடங்களில் பயன்தரத்தக்க முறையில் வைத்திருக்கக்கூடிய கருவிகளின் விவரங்கள் அடங்கிய பட்டியல் தனியாக அனுப்பப்படும். இக்கருவிகளை மாவட்ட விவசாய அதிகாரியுடன் கலந்து ஆலோசனை செய்து வாங்க வேண்டும்.

**5. பஞ்சாயத்து யூனியன்களுக்கு விவசாயக் கருவிகள் விசையினால் இயங்குபவை போன்றவை.**—இந்த நிதியிலிருந்து மொத்தம் இரண்டாயிரம் ரூபாய்க்குள் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும், நேப்சாக் (Knapsack) டைப் விசையினால் இயங்கும் தெளிப்பான்களை வாங்கிக் கொள்ளலாம். டிராலி மீது பொருத்தப்பட்ட விசையினால் இயங்கும் தெளிப்பான் வாங்க வேண்டும் என்று பஞ்சாயத்து யூனியன் விரும்பினால், அதற்கு மாவட்ட விவசாய அதிகாரியின் அங்கீகாரம் பெற்றுதான் வாங்கவேண்டும். அதற்காக ஆகும் கூடுதல் தொகையை, பஞ்சாயத்து யூனியன் பொது நிதியிலிருந்து அளிக்கவேண்டும்.

மிச்சமுள்ள 12 ஆயிரம் ரூபாயில், கையினால் இயங்கும் போரிங் கருவி ஒன்றையோ, அல்லது காலிக்ஸ் (Calyx) விசை டிரில் கருவி ஒன்றையோ, அந்தபிரதேசத்தில் உள்ள நிலத்திற்கு தகுந்த முறையில் உள்ளதாக, உதவி விவசாய இஞ்சினியருடன் கலந்து ஆலோசித்து வாங்க வேண்டும். இப்படிப்பட்ட விலை உயர்ந்த கருவிகள் வாங்குவதற்கு முன்னால், உதவி விவசாய இஞ்சினியரின் திட்டவட்டமான ஒப்புதலைப் பெறவேண்டும்.

வாங்கின கருவிகளை நல்ல முறையில் பயன்படுத்தவும், சீரிய முறையில் பராமரிக்கவும் வேண்டிய விசேஷ ஏற்பாடுகளை பஞ்சாயத்து யூனியன்கள் மேற்கொள்ள வேண்டும். பராமரிப்பக்கான செலவுகள் பஞ்சாயத்து யூனியன் நிதிகளிலிருந்து செய்யப்படவேண்டும்.

**6. கருவிகளைப் பாதுகாக்க பொதுவான இடம் (Community Implement Shed).**—ஒன்று அல்லது இரண்டு கிராமங்களில், கருவிகளைப் பாதுகாக்க பொதுவான இடங்கள் கட்டிப் பராமரிக்கலாம் என்று சில யூனியன்கள் யோசனை தெரிவித்துள்ளன. இத்திட்டத்தின்கீழ் செய்யப்பட்டுள்ள நிதி வசதிகளின்கீழ், இரண்டு பெரிய கிராமப் பஞ்சாயத்துக்களில் கருவிகளைப் பாதுகாக்க பொதுவான இரண்டு இடங்கள் கட்டலாம். விதைகளையும் கொட்டை நீக்கி சலிக்கும் சல்லடை இயந்திரங்கள் போன்று எல்லா விவசாயிகளுக்கும் பயன் தரும் கருவிகளை இந்த இடங்களில் வைத்திருக்கலாம். இந்த இடங்களில் என்னென்ன கருவிகள் வைக்கலாம் இதற்கான கட்டிட அமைப்பு எப்படி இருக்கவேண்டும் என்பது பற்றிய விவரங்கள் எல்லாம் தனியாக அனுப்பப்படும்.

**7. பஞ்சாயத்து யூனியன்கள் நாற்றங்கால் தோட்டங்கள் அமைத்தல்.**—பஞ்சாயத்து யூனியன் அலுவலகம் உள்ள இடத்தில் அல்லது பஞ்சாயத்து யூனியன் அதிகார வரம்புக்கள் உள்ள இணைப்பாக உள்ள நிலத் துண்டுகளில் பயிரிட லாயக்காக உள்ள நிலத்தை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பது இத்திட்டத்தின் நோக்கம். பயிர் செய்யக்கூடிய நிலப் பரப்பு $2\frac{1}{2}$ ஏக்கர் அளவில் இருந்தால், ஒரு கிணறு தோண்டிக்கொள்ளவும், ஒரு பம்பு செட் பொருத்திக்கொள்ளவும் செய்யலாம். ஆனால் பயிரிடும் செலவு பஞ்சாயத்து யூனியன் பொது நிதிகளிலிருந்துதான் செய்யப்படவேண்டும்.

**8. விஸ்தரிப்பு உதவிகள்—கண்காட்சிகள், போட்டிகள் நடத்துதல் போன்றவை.**—இத்திட்டத்தின்கீழ், பஞ்சாயத்து யூனியன்கள், விவசாயம் விலங்கின வளர்ச்சி சம்பந்தமான ஓரிரு கண்காட்சிகளை நடத்தலாம். விவசாயத்தில் கையாளப்படும் புதிய முறைகளில் விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கவும், உற்பத்தியைப் பெருக்குவதில், ஒரு போட்டி மனப்பான்மையை விவசாயிகளிடையே தோற்றுவிக்கவும் வேண்டி (பயிர் விளைச்சல் போட்டி அல்லாமல்) மற்றபடி விவசாயம், விலங்கின வளர்ச்சி சம்பந்தமான போட்டிகளை ஒவ்வோர் ஆண்டும் பஞ்சாயத்து யூனியன்கள் நடத்தலாம். இதற்கென்று ஒதுக்கப்பட்ட நிதியில், அந்தந்தப் பிரதேசத்திற்கு தகுந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளை விளக்கும் சிறு வெளியீடுகள் அச்சடித்து, அவற்றை விவசாயிகளுக்கு இனமாக விநியோகம் செய்வதற்காக ரூ. 500 ஒதுக்கப்படலாம்.

ஆனால் இந்த வெளியீடுகளில் கண்டுள்ள விஷயங்கள் சம்பந்தமாக அந்த வெளியீடுகளை அச்சடித்து வெளியிடுவதற்கு முன்னால், அவை சரியாக இருக்கின்றனவா என்பதற்காக மாவட்ட விவசாய அதிகாரியின் அனுமதியைப் பெறவேண்டும்.

**9. தனிப்பட்டோருக்கு பொலி இனக்காளைகள் விநியோகம் செய்தல்.**—மூன்றுவது திட்டக் காலத்தில் என்ன நடைமுறை கையாளப்பட்டதோ, அதே நடைமுறையில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். பொலி இனக்காளைகளின் விலையில் 50 சதவிகிதத்துக்கு மேற்படாமல் நிதி உதவி அளிப்பதற்காகத்தான் இத்திட்டத்திற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கேந்திர கிராம பகுதிகளில் அல்லாத வட்டாரங்களில் அல்லது வட்டாரத்தின் பகுதிகளில் மட்டும் தான் இத்திட்டம் செயல்படுத்தப்படவேண்டும். இத்திட்டத்தின் கீழ் வெள்ளை, மற்றும் கறுப்பு நிற கால்நடைகளும் வழங்கப்பெறலாம். ஒரு கிராமப் பஞ்சாயத்துக்கு சாதாரணமாக ஒரு காளைக்கு மேல் வழங்கக்கூடாது. குறைந்த பட்சம் யூனியனில் உள்ள கிராமப் பஞ்சாயத்துக்களில் மூன்றில் ஒரு பங்காவது இத்திட்டத்தின்கீழ் வரும் படியான முறையில், பஞ்சாயத்து யூனியன் தன்னுடைய திட்டத்தை தயாரிக்க வேண்டும். காளைகள் விநியோகம் செய்வதற்காக, கிராமப் பஞ்சாயத்துக்களைத் தேர்ந்தெடுக்கும்பொழுது, இது வரையில் காளைகளை விநியோகம் செய்யப்படாத பஞ்சாயத்துக்கு முதல் சலுகை காட்டப்பட வேண்டும்.

**10. தீவன அபிவிருத்தித் திட்டம்.—பாசனம் பெற்று எப்பொழுதும் வளரக்கூடிய தீவனத்திற்குப்பயன்படக்கூடிய புல்வகைகள், செடிவகைகள்.**—கால்நடைகளின் தீவனத்திற்காக, எப்போதும் வளரக்கூடிய புல், செடி வகைகளை உற்பத்திச் செய்தலே, இத்திட்டத்தின் நோக்கமாகும். துறையினரால் நடத்தப்படும் திட்டம் முன்பே அமலில் உள்ள கேந்திரக் கிராமப் பகுதிகள் அல்லாத வட்டாரங்களில் தான் இத்திட்டம் செயல் படுத்தப்பட வேண்டும். கினியாப்புல், பாரா நேப்பியர் போன்ற பாசனம் பெற்று எப்பொழுதும் வளரக்கூடிய புல் வகைகளையும், லூசர்ன் போன்ற செடி வகைகளையும் உற்பத்தி செய்வதற்காக ஒரு செண்டுக்கு இரண்டு ரூபாய் என்ற அளவில் நிதி உதவி அளிப்பதற்காக, இத்திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதி உதவியைப் பெறவேண்டுமென்றால், ஒருவர் குறைந்த பட்சம் 5 ஏக்கர்களில் தீவனப் புல் பயிர்களை உற்பத்தி செய்திருக்க வேண்டும். பயிர் விளைத்து, முதல் முறையாக அவை வெட்டப்படும்பொழுது தான், இந்த நிதி உதவியானது அளிக்கப்பட வேண்டும்.

**11. கால்நடைகளுக்குக் கொட்டகை கட்டுதல்.**—கால்நடைகள் தங்குமிடங்கள் நல்ல வசதி படைத்ததாக இருக்கவும், கால்நடைகளின் மூத்திரம், சாணம் ஆகியவை வீணுகப் போகாமல், அவை எருவாகப் பயன்படச் செய்வதுமே இத்திட்டத்தின் நோக்கம். கால்நடைக் கொட்டகை ஒன்று கட்ட, 150 ரூபாய்க்கு மேற்படாமல் 25 சதவிகித செலவை நிதி உதவியாக அளிப்பதற்குத்தான் இத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஒரு நபருக்கு ஒரு கொட்டகைக்கு மேல் நிதி உதவி அளிக்கப்படக்கூடாது. கொட்டகை கட்டி முடித்த பிறகு தான், மானியத் தொகை அளிக்கப்பட வேண்டும். கிராமப் பஞ்சாயத்தும் இந்த நிதி உதவியைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இந்த நிதி உதவியைப் பெற வேண்டுமென்ருல், இரண்டு அல்லது மூன்று கால்நடைகள் தங்குகின்ற அளவுக்கும் மூத்திரம் வீணுகாமல் சேகரிக்கின்ற வரையில் கடினமான தரை போட்டும், மழை, வெப்பம் தாக்காமல், உள்ளூர் ஆதாரங்களைக் கொண்டே போடப்பட்ட கூரையும் கொண்டதாக உள்ள ஒரு கால்நடைக் கொட்டகையை ஒருவர் கட்ட வேண்டும். கொட்டகைக்கருகில் கலவை எருக்குழி ஒன்றும் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

உள்ளூரில் கிடைக்கும் ஆதாரங்களைக் கொண்டே கட்டப்படக்கூடிய கொட்டகையின் மாதிரி அமைப்புகள், கொட்டகை கட்டுவோருக்கு பிரயோஜனமாக இருப்பதற்காக வேண்டி, தனியாக அனுப்பப்படும்.

**12. செம்மறியாடுகள் விநியோகம் செய்தல்.**—பஞ்சாயத்து யூனியன்கள் வழங்குகின்றவைகளுக்குப் பதிலாக தங்களுடைய செம்மறியாடுகளை பரிவர்த்தனை செய்து கொள்ளுகிற பயன் பெறுபவர்களை, பஞ்சாயத்து தேர்ந்தெடுக்கும். விலங்கின வளர்ச்சித் துறையின் மூலமாக, மாவட்ட விலங்கின அதிகாரி ஒப்புதல் அளிக்கும் செம்மறியாடுகளை பஞ்சாயத்து யூனியன் வாங்கி, அவற்றை சகாய விலையில், ஒன்று 15 ரூபாய் என்ற விலையில் அவர்களுக்கு, பயன் பெறுவோர்க்குச் சொந்தமான செம்மறி ஆட்டை காயடித்த பிறகு விநியோகம் செய்யும்.

**13. பரிவர்த்தனை முறையில் சேவல் குஞ்சுகளை விநியோகித்தல்.**—உள்ளூர் பறவைகளின் தரத்தை உயர்த்துவதற்கரக வேண்டி, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும், பொறுக்கி எடுக்கப்பட்ட இடங்களில் தீவிரமான முறையில் இத்திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும். இந்த பொறுக்கி எடுக்கப்பட்ட இடங்களில் விநியோகிக்கப்படுகின்ற சேவல் குஞ்சுகளில் குறைந்தபட்சம் மூன்றில் இரண்டு மடங்கினை வழங்கவேண்டும். இது தவிர, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் குறைந்தபட்சம் ஒரு கிராமத்தை யாவது இதற்கென்று ஒதுக்கி, உள்ளூர் ரகங்களை தள்ளி விட்டு, சீமைச் சேவல் குஞ்சு ரகத்தை புகுத்தி, அந்த கிராமத்தை ஒரு மாதிரி கோழிப் வளர்ப்பு கிராமமாக பெருக்குவது விரும்பத்தக்கதாகும்.

**14. தனிப்பட்ட முறையில் கோழி வளர்ப்போருக்கு பண உதவி அளித்தல்.**—டீப் லிட்டர் கோழிப்பண்ணைப் பிரிவுகள் ஏற்படுத்துவதற்காக, தனிப்பட்ட நபர்களுக்கு 50 சதவிகித அளவில் நிதி உதவி அளிப்பதற்காக, இத்திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் பற்றிய விவரங்கள் தனியாக அனுப்பப்படும்.

**15. கிராமப் பஞ்சாயத்துக்களில் கோழி வளர்ப்புப் பண்ணைகள் ஏற்படுத்துதல்:** முந்தைய திட்டத்தைப் போலவே, இந்தத் திட்டத்தையும் அமல் நடத்த வேண்டும். ஒவ்வொரு பஞ்சாயத்தும் பெறக்கூடிய நிதி உதவியின் அளவை ஆயிரமாக நிர்ணயித்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும், இரண்டு கிராமப் பஞ்சாயத்துக்கள் இந்த வேலையை மேற்கொண்டு. மாதிரி கோழி வளர்ப்புப் பகுதிகளாக திகழ்கின்ற முறையில் செயல் புரிய அவைகளைத் தூண்ட வேண்டும்.

**16. ஆண் பன்றிகள் விநியோகம்.**—உள்ளூர் பன்றிகளின் தரத்தை உயர்த்துவதற்கு, இத் திட்டத்தின் கீழ் அரசாங்கப் பன்றி வளர்ப்பு நிலையங்களிலிருந்தோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனிப்பட்ட பன்றி வளர்ப்போரிடமிருந்தோ வாங்கப்பட்ட பன்றிகளை பன்றி வளர்ப்போருக்கு பன்றி ஒன்றுக்கு 10 ரூபாய் என்ற விலையில் விநியோகம் செய்ய வேண்டியுள்ளது. இதனால் வருகின்ற லாபத்தை, இதற்காக ஒதுக்கப்பட்டுள்ள அரசாங்க மானியத் தொகையிலிருந்து சரிக்கட்டிக்கொள்ள வேண்டும். ஒரு கிராமப் பஞ்சாயத்திற்கு ஓர் ஆண் பன்றிக்கு மேல் வழங்கக் கூடாது.

### இணைப்பு—I-ல் குறிப்பிடாத திட்டங்கள்

**1. குறைந்த விலையில் கிருமிநாசினிகளை விநியோகித்தல்**

மூன்ருவது திட்டத்தில், உணவுப் பயிர்களுக்கு அடக்க விலையில் 25 சதவிகித விலையிலும், வர்த்தகப் பயிர்களுக்கு 50 சதவிகித விலையிலும், கிருமிநாசினிகள் விநியோகிக்கப்பட்டன. இப்படிக் குறைந்த விலையில் கொடுப்பதில் உள்ள ஏற்றத்தாழ்வு பற்றி கோரிக்கைகள் எழுப்பப்பட்டன. கிருமிநாசினிகள் விநியோகிப்பதில் எல்லாப் பயிர்களுக்கும் ஒரே அளவான நிதி உதவியை நிர்ணயிக்கின்ற விஷயம் பரிசீலனையில் இருந்து வருகிறது. பூரா நிதி உதவியும் விவசாயத் துறையில் வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து சமாளிக்கப்படும். இந்த விஷயம் பற்றி தனியாக உத்தரவுகள் விரைவில் பிறப்பிக்கப்படும்.

**2. பயிர்ப் பாதுகாப்பு அணி**

ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பயிர்ப் பாதுகாப்பு அணியை ஏற்படுத்தி, அவர்களுக்குப் பயிற்சியளித்து பராமரிக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என பஞ்சாயத்து யூனியன்களுக்கு யோசனைகூறப்படுகிறது. அப்படிச்செய்தால் பயிர்ப் பாதுகாப்பு இயக்கத்தை ஏற்று நடத்த இந்த

அணியைப் பயன்படுத்திக்கொள்ளலாம். பயிர்களைத் தாக்கும் பூச்சிகள், நோய்கள் இவற்றைக் கண்டுபிடித்து அவற்றைக் கட்டுப்படுத்தவும், பயிர்ப் பாதுகாப்புக் கருவிகளை உபயோகிக்கவும், பழுது பார்க்கவும், இந்த அணியினருக்கு பயிற்சி அளிக்கப்பட வேண்டும். இந்தத் திட்டத்தின்கீழ் எந்தவிதமான செலவும் ஏற்படக்கூடாது.

3. அடக்க விலையில் (தாதுநீர்) மினரல் (Mineral) மிக்சர் விநியோகம் செய்தல்

விலங்கின மருந்தகங்கள் மூலம், மினரல் மிக்சர் அடக்க விலையில் விற்கப்படலாம். பொது நிதிகளிலிருந்து ரூ. 200—ஐ முன் பணமாக, மினரல் மிக்சர் வாங்குவதற்காக அளிக்கலாம் என்று பஞ்சாயத்து யூனியன்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. விற்பனை ஆனபிறகு, இந்தத் தொகையை திரும்ப மறு ஒதுக்கம் செய்துகொள்ளலாம்.

## இணைப்பு—III

### உற்பத்தித் திட்டங்கள் செயல்படும் அளவு விவசாயம்

**1. விஸ்தரிக்கப்பட்ட சாகுபடித்திட்டம்**

அ. பஞ்சாயத்துத் தோட்டங்களை ஏற்படுத்துதலும் பராமரித்தலும்.

ஆ. நாற்றங்கால்களை (Nurseries) பஞ்சாயத்து யூனியன்கள் ஏற்படுத்துதல்.

**2. தீவிர சாகுபடித் திட்டம்**

அ. விதைகளும் நாற்றுகளும்—

(1) கிராம சகாயக் பணி.

(2) காய்கறி நாற்றுகள், பழச்செடி நாற்றுகளைக் கொண்ட நாற்றங்கால்களை கிராம சேவக்குகள் ஏற்படுத்துதல்.

(3) நாற்றுகளையும், காய்கறி விதைகளையும் தனிப் பட்டோருக்கு விநியோகம் செய்தல்.

(4) யூனியன்கள் நாற்றங்கால்கள் ஏற்படுத்துதல்.

ஆ. எருவும் எரு இடுதலும்—

(1) தனிப்பட்டவர்களுக்கு பசுந்தழை உர விதைகளை விநியோகித்தல்.

(2) கால்நடைக் கொட்டகை கட்டுதல், கால்நடைகளின் மூத்திரங்களையும் சாணங்களையும் பாதுகாத்தல்.

சி. உழுதல் : தரமான விவசாயக் கருவிகள்

(1) தனிப்பட்ட விவசாயிகளுக்கு விவசாயக் கருவிகள் வழங்குதல்.

(2) பஞ்சாயத்துகளுக்கு விவசாயக் கருவிகள் வழங்குதல்.

(3) பஞ்சாயத்துக்கள் வசம் உள்ள விவசாயக் கருவிகளை பழுது பார்த்தலும், பராமரித்தலும்.

(4) பஞ்சாயத்து யூனியன்களுக்கு கருவிகள் (விசையினால் இயங்குபவை, கனரகக் கருவிகள் தவிர)

(5) கருவிகளைப் பாதுகாக்க பொதுவான இடம்.

டி. நீர்ப்பாசனம்—

(1) பஞ்சாயத்து யூனியன்களுக்கு கருவிகள்—விசையினால் இயங்குபவை.

(2) காலிக்ஸ் விசை டிரில், கையால் இயங்கக் கூடிய போரிங் செட்டும் வாங்குதல்.

இ. பயிர்ப் பாதுகாப்பு—

(1) தனிப்பட்ட விவசாயிகளுக்கு கருவிகள் வழங்குதல்

(2) பஞ்சாயத்துகளுக்கு கருவிகள் வழங்குதல்.

(3) பஞ்சாயத்து யூனியன்களுக்கு கருவிகள் (விசையால் இயங்குபவை தவிர)

(4) பஞ்சாயத்து யூனியன்களுக்கு கருவிகள் விசையால் இயங்குபவை, விசை தெளிப்பான்கள் வாங்குதல்.

(5) பயிர்ப்பாதுகாப்பு அணி.

எஃப். வழங்கும் இடம்

விவசாய டெப்போ - கிடங்கு கட்டுதல்.

**விலங்கின வளர்ச்சி**

அ. விலங்கின மருத்துவம்—

விலங்கின மருந்தகம் கட்டுதல்.

(அ) புதிதாக கட்டுதல்.

(ஆ) விரிவுபடுத்துதல் 1. முதல் கட்டம்.
2. இரண்டாம் கட்டம்.

ஆ. கால்நடை வளர்ச்சி—

(1) தனிப்பட்டோருக்கு பொலி இனக் காளைகள் விநியோகம் செய்தல்.

(2) தீவன அபிவிருத்தித் திட்டம்.

(3) மினரல் மிக்சர் (தாதுநீர்) விநியோகம்.

(4) கால்நடைத் தொழுவம் கட்டுதல்.

சி. ஆடு வளர்ச்சி

செம்மறி ஆடுகள் விநியோகம்.

டி. கோழிப் பண்ணை வளர்த்தல்—

(1) சேவல் குஞ்சுகளை பரிவர்த்தனை முறையில் விநியோகம் செய்தல்.

(2) கோழிப்பண்ணை நடத்தும் தனிப்பட்டோருக்கு நிதி உதவி.

(3) கிராமப் பஞ்சாயத்துக்களில் கோழிப் பண்ணைப் பிரிவுகளை ஏற்படுத்துதல்.

ஈ. பன்றி வளர்ச்சி—

ஆண் பன்றிகள் விநியோகம் செய்தல்.

(கிராம நல தல நிர்வாகத்துறையின் 26—8—1966 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2064)

## முக்கிய அறிவிப்பு

"கிராம நலம்" ஆண்டுச் சந்தா ரூ. 2–00. ஓராண்டுக்குக் குறைவான காலத்துக்கு, சந்தாதாரர்களைப் பதிவு செய்வதில்லை. தனிப்பிரதிகள் விற்பனைக்குக் கிடையாது. ஆகவே, பழைய பிரதிகள் வேண்டுமென்றோ தனிப்பிரதிகள் வேண்டுமென்றோ கோரி, அப்பிரதிக்குரிய தொகையை மணியார்டர் மூலமாகவோ அல்லது அத்தொகைக்கான தபால் தலைகள் வாங்கியோ அனுப்பினாலும், அவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. ஆண்டு சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் "பொதுஜனத்தொடர்பு அதிகாரி, கிராம வளர்ச்சி நெறியாளர் அலுவலகம், கோட்டை, சென்னை-9" என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். சந்தாத் தொகைக்குப் பதிலாக, தபால் தலைகள் அனுப்பினால், அவை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

கதைகள், கட்டுரைகள் மற்றும் "கிராம நல"த்தில் பிரசுரிக்க அனுப்பப்படுபவைகளில், பிரசுரிக்க இயலாதவற்றை, திருப்பி அனுப்ப இயலாது. ஆகவே, அவைகளுடன் தபால் தலைகள் வைத்து அனுப்ப வேண்டாம். அனுப்பப்படும் விஷயங்களுக்கு, ஒரு பிரதி எடுத்து வைத்துக் கொள்ளுமாறு எழுத்தாளர்களைக் கேட்டுக்கொள்கிறோம். "கிராம நலத்"தில் பிரசுரிக்கப்படும் கதைகள், நாடகங்கள் ஆகியவைகளில் வரும் பெயர்கள், சம்பவங்கள் அத்தனையும் கற்பனையே.

## கிராம நலம் சந்தாதாரர்களுக்கு

கீழ்க்கண்டுள்ள சந்தா எண்களுடைய "கிராம நலம்" சந்தாதாரர்களின் ஆண்டு சந்தா 1966ம் ஆண்டு அக்டோபர், நவம்பர் மாதங்களுடன் முடிவடைகிறது. "கிராம நலம்" இதழ்களைத் தொடர்ந்து பெறுவதற்கு, இந்தச் சந்தா எண்களுடைய சந்தாதாரர்கள், தங்களுடைய சந்தா எண்ணைக் குறிப்பிட்டு, ஆண்டுச் சந்தா ரூ. 2, வீதம் சந்தாத் தொகையை "கிராம வளர்ச்சி நெறியாளர், செயின்ட் ஜார்ஜ் கோட்டை, சென்னை–9" என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் அனுப்பக் கோரப்படுகிறார்கள். சந்தா எண் "கிராம நலம்" இதழ்கள் அனுப்பப்படும் மேல் உறையில் சந்தாதாரரின் முகவரிக்குமேல் பொறிக்கப்பட்டிருக்கிறது.

### சந்தா எண்கள்

1966 அக்டோபர் மாதத்துடன் 'கிராம நலம்' சந்தா முடிவடைவது.

| | |
|---|---|
| 16751 | 28425 |
| 17220 | 28721 |
| 25890 | 28722 |
| 28392 | 28725 முதல் 28730 வரை |

1966 நவம்பர் மாதத்துடன் 'கிராம நல' சந்தா முடிவடைவது :

| | |
|---|---|
| 12816 | 28763 |
| 18455 | 28766 முதல் |
| 18491 | 28782 வரை |
| 18696 | 28784 முதல் |
| 26742 | 28853 வரை |
| 26788 | 28855 முதல் |
| 28053 | 28887 வரை |
| 28535 | 28889 முதல் |
| 28736 முதல் | 28914 வரை |
| 28745 வரை | 28916 முதல் |
| 28751 | 28963 வரை |
| 28752 | 29712 |
| 28753 | 30016 |
| 28755 | 30067 |
| 28757 முதல் 28761 வரை | |

## இந்த இதழில்


| | பக்கம். |
|---|---|
| கிராம முன்னேற்றத்தில் காந்தியடிகளின் திட்டம் | 3 |
| சிறந்த இலட்சியங்களை நினைவூட்டும் நிர்மாணத் திட்டம் | 5 |
| நிர்மாணத் திட்டத்தின் மாண்பு | 7 |
| அண்ணலாரின் அடிச்சுவட்டில் | 9 |
| மகாத்மா காந்தி நூற்றாண்டு விழா ஏற்பாடுகள். | 13 |
| உற்சாகத்தோடு உழைப்பு | 16 |
| ஐந்தாண்டுத் திட்டங்களின் முக்கிய அம்சங்கள் | 19 |
| முதல் பரிசு (சிறுகதை) | 26 |


## அடுத்த இதழில்...

சமுதாய மாற்றத்திற்கு காந்தி வழி—
(திரு கே. அருணாசலம் அவர்களின் சிறப்புக்கட்டுரை.)

சென்னை விவசாயிகள் மன்ற (Farmers' Forum) பொறுப்பாளர் திருமதி ஜெயா அருணாசலம் அவர்களின் சிறப்புக் கட்டுரை.

அமரர் நேருஜி பற்றிய சிறப்புக் கட்டுரைகள்

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்

வாழ்வு தந்த வாய்க்கால்


முனைந்தால் முடியாதோ?


**வெளியிடுபவர் :**
குமாரி எஸ். சத்தியபாமா, ஐ.ஏ.எஸ்.,

**ஆசிரியர் :**
திரு எஸ். வேங்கடசாமி, எம்.ஏ.

Printed by the Director of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Ed by the Public Relations Officer and published by the Director of Rural Development (in charge), Madras. Wrapper printed at Screen Designs, Madras-2.

# கிராமங்களில் குழாய்மூலம் குடிநீர் வசதி



தமிழ் நாட்டிலே, பஞ்சாயத்து ஆட்சியில், இதுவரை, 1827 கிராமங்களில், மேல் நிலை நீர்த்தொட்டிகள் அமைக்கப்பட்டு, குழாய்மூலம் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது...

REGD.NO.M.7277
©
தமிழ்நாடு அரசாங்கம் 1966

உற்பத்தி பெருக:

# 'டிராக்டர்களை' வாங்கி, விவசாயிகளுக்கு வாடகைக்கு உதவ, 25 பஞ்சாயத்து யூனியன்களுக்கு, அரசாங்கம் அனுமதியளிக்கும்.



திருவெறும்பூர், பொன்னமராவதி, தொட்டியம், காஞ்சீபுரம், நெமிலி, பஞ்சாயத்து யூனியன்கள் ஏற்கனவே இவற்றை வாங்கி விட்டன.